www.padippakam.com

# கவிதாசரண்

சிறப்பிதழ் - விலை ரூ. 6.

அக்டோபர், 1993




தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

படிப்பகம்

www.padippakam.com

# உமா பரதன் கவிதைகள்

## அறிமுகம்

உன்னிடம்
உன்னை
அறிமுகம்
செய்து கொள்.

பார்த்தும் பாராமல்
போய்க்கொண்டிருக்கும்
அந்த வீரனோடு, இன்றாவது
நின்று பேசு.

எழுந்து வெளியே
வர முடியாத
ஏமாற்றப் புதை மணலில்
போராடிய போது,
கை நீட்டிய
அந்த அறிஞனை
தனிமையில் சந்தித்து வா.

கரிய இரவில்
உயரே பறக்கும்
கொக்குகளைப் போல,
உன்னிடத்திலும்
கவனித்தால் மட்டும்
தெரிகின்ற
கலைஞனோடு
கைகுலுக்கு.

பார்த்ததுண்டு;
பழக்கமில்லை.
அந்தத் தத்துவ ஞானியோடு
இன்று
அறிமுகம் செய்து கொள்.

நண்பனே,
மீண்டும், மீண்டும்
உன்னிடம் உன்னை
அறிமுகம் செய்து கொள்.

## மலையேற்றம்

உனது
இதயத்தின்
சிகரத்தில்
ஏறிவிடும்
முனைப்போடு
துன்பப்
பள்ளத்தாக்குகளில்
நான்
கூடாரமிட்டுத்
தங்கியுள்ளேன்:

எனது
பசிக்கு உன்
நினைவுகளை
ஆகாரமாகவும்
குளிருக்கு - உனது
எழிலை
கம்பளியாகவும்
போர்த்திக்கொண்டு,
அளந்து
அடி வைத்து
நடந்துவர,

*பின் அட்டை உள், வெளிப் பக்கங்கள்*

படிப்பகம்

www.padippakam.com


# கவிதாசரண்

***தமிழில்படைப்பிலக்கிய மாத இதழ்***

செப்டம்பர்-அக்டோபர், 1993

மாதத்தின் முதல் வாரத்தில் வெளி வருகிறது.

தனி இதழ் விலை ரூ. 3.
ஆண்டுச் சந்தா ரூ. 36.
ஆயுள் சந்தா ரூ. 400.

***சந்தாவை M.O செய்க.***

இதழ், நன்கொடையோ அன்பளிப்போ பெறுவதில்லை. எந்தத் தொகையும் சந்தாவாகவே ஏற்கப்படுகிறது.

படைப்பபாளர்கள் தம் படைப்புகளுக்குப்பொறுப்பேற்கிறார்கள்.

---

***படைப்புகளை அனுப்ப மற்றும் தகவல் தொடர்புகளுக்கு:***

ஆசிரியர், கவிதாசரண்,
31, டி.கே.எஸ். நகர்,
சென்னை-600 019.

---

*இதழை 580, T.H.Road, சென்னை-21 இலிருந்து வெளியிடுபவரும் ஆசிரியரும்: கவிதாசரண். ஆல்வெல் பிரஸ், 31, T.K S. நகர், சென்னை-19 இல் அச்சிடுபவர்: திருமதி கவிதாசரண்*


“மனித நேயப் பார்வையோடு தமிழின் கலாச்சார மதிப்பீடுகளையும் பண்பாட்டுப் பரிமாணங்களையும் இலக்கியத் தேடலாக்கும் இதழியக்கப் பயணம்.”

# இது சிறப்பிதழ்

அக்டோபர் 21
இதழின் பிறந்த நாள்

“சிற்றுளியாய்ச் செயல்படுவது ஒரு சுகமான அனுபவம். என்றாவது ஒருநாள் அற்புதம் நிகழ்த்தலாம் என்னும் கனவாவது மிஞ்சும். மாறாக, கட்டப்பாறையாய்ப் பிறன் கையில் உருள்வதோ ஒரு குரூரமான துயரம். தூசுப்படலமாய்ப் பெருகும் இடிபாடுகளே நம்மை விழுங்கிவிடுமோ என்னும் அச்சமே மிச்சம்.

சிற்றடிகள், சிற்றுளிகள்,
சிற்றிதழ்கள் சிந்தனைவேர்
பற்றி விழு தாய்ப் படரும்
கற்பிதத்தின் அற்புதங்கள்.”

படிப்பகம்

www.padippakam.com

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

—*மகாகவி பாரதியார்*

*விளம்பர உதவி:*

# ஏ பி டி பார்சல் சர்வீஸ்

- பொருள் போக்குவரத்து சம்பந்தமான
அனைத்து பிரச்சனைகளுக்கும் சுலபமான தீர்வு
**ஏ பி டி பார்சல் சர்வீஸ்**

- இருபத்தைந்து ஆண்டுகளாக வணிகப்
பெருமக்களின் நம்பிக்கைக்குரிய தேர்வு
**ஏ பி டி பார்சல் சர்வீஸ்**

- உங்களுக்கு ஏற்றதொரு பார்சல் சர்வீஸ்
**ஏ பி டி பார்சல் சர்வீஸ்**

எங்களது சேவையை உங்களுக்கும் தொடர
எங்களுக்கு ஓர் வாய்ப்புத் தாரீர்!
குறைந்த கட்டணம்... விரைந்த சேவை.

# ஏ பி டி பார்சல் சர்வீஸ்

10/13-15, காளிங்கராயன் தெரு,
ராம்நகர், கோவை-641009.



படிப்பகம்

www.padippakam.com

என்னைத் தமிழ் அன்னை பெற்றாள்,
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்றபின்னே
என் குழியில் பூத்திருப்பேன்.

கவிதாசரண்
தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

மலர் இரண்டு செப்டம்பர்–அக்டோபர், 1993 இதழ் 9, 10

# பசிப் பொறி

ஒரு கனவு.
'கனவாகிப் போகக் கூடாதா!' என்று
கனவுக்குள்ளேயே கதற வைத்த கனவு.
செரித்துக்கொள்ள மறுக்கும் எதையும்
கனவாக ஒதுக்கிவிடத் துடிக்கும்.
செம்மையற்ற சித்த வெளிப்பாடு.

கனவில் ஒரு கைக்குழந்தை.
பூவுக்குப் பூவிதழ்களாலேயே உறுப்புகள்
புனைந்தாற் போன்ற பூப்பந்து.
பசும்பொன்னில் தீயை வார்த்து,
இளக்கி வடித்தாற் போன்ற எழுகதிர் நிறம்.
மின்னலை நரம்புகளாய் ஊடுபாவி,
பூந்தேனைக் குருதியாய்ப் பாய்ச்சி,
உயிரூட்டினாற் போன்ற மலையருவித் துள்ளல்.
தேனாய் ஊறும் வாய்நீரில்
தோய்ந்தளையும் மழலை.
தொட்டால் வழுக்கும் பட்டுப்பூ மேனி.
பார்க்கப் பார்க்கப் பெருகும் பரவசம்!
காணக் காணக் கட்டறுக்கும் 'கள்வெறி!'

ஆசை என்னைப் பிடர் பிடித்து உந்தியது.

படிப்பகம்

www.padippakam.com

பட்டுத் துணியில் கொட்டி முடிந்து முளைகட்டிய
தென்றலைப் போன்ற மதலைத் திரட்டை
வாரியெடுத்து மார்புறத் தழுவினேன்.

முத்தம் தின்ன மூண்ட வெறியொடு
பிள்ளை உதட்டை என் வாய் பொத்தி
எச்சில் தேனை நக்கிச் சுவைத்தேன்.

மாய மயக்குபோல் என் கண்கள் கிறங்கின.

என் நாவின் தீண்டலில் அமிர்த ஊற்றொன்று
ஊசிக்கண் திறப்பில் உருகிப் பாய்ந்து
பசியை அடைகாக்கும் என் வயிற்றில் இறங்கியது.

இப்போது என்னைத் தகித்துப் பசித்த ஆசை
மெல்ல மெல்லச் சுருண்டு, ஒரு புள்ளியில் ஒடுங்க,
தணிவு ஒரு மயக்கமாய் என்னைத் தளர்த்த,
அதிர்ச்சியில் கண்களை அகலத் திறந்தேன்:

இறுகப் பின்னியிருந்த என் கைகளுக்குள்ளே
சூனியம் இருந்து சோகமாய்த் துயின்றது.

ஐயோ!
எங்கே குழந்தை! எப்படித் தோற்றேன்!

அதிர்ந்த அதிர்வில் அதனை அறிந்தேன்:
உறைந்த நெய் உருகிக் கரைந்தாற்போல்
என் வயிற்றில் இறங்கிய பஞ்சாமிர்தம்
என் அணைப்பில் சிதைந்த ஆசை மதலையின்
இரத்தமும் சதையும் மலமும் சலமும்தான்.

அடித்துப் புரண்டேன்; அழுது புலம்பினேன்.
என்னை மீட்க வழியே இல்லையா!
கண்விழித்தெழுந்து இது கனவு எனக் கூவேனா!
நான் விரும்பிக் கற்றதெல்லாம் என்னைக்
காத்துக் கரை சேர்க்காதா!

ஓவென்று நான் அழுத ஓசையிடை ஊடிசையாய்
காதை வருடிச் செல்லும் காற்றின் இரகசியமாய்,
"அழுவது பசிக்கத்தான். இனி யாரைத் தின்ன?"
என்றொரு சொல் மின்னலைப்போல் இறங்கி
என்னைக் கல்லாய்ச் சபித்தது.

'உயிர்கள் யாவும் பசியிலா உறங்கும்!'

ஞானிகளே!
உங்கள் சுண்டுவிரலைக் கொடுங்கள்.
நன்றியுடன் பற்றி நானும் கரையேறுகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com

# என் நாட்டவரே...

கலீல் ஜிப்ரான்

என் நாட்டவரே!
நீங்கள் எதை விரும்புகிறீர்கள்?

உங்களுக்கு நான் எதைக் கட்டித்தர வேண்டுமென்று
ஆசைப் படுகிறீர்கள்?

பொருளற்ற வெற்றுச் சொற்கள் கொண்டு
அலங்கரிக்கப்பட்ட ஆடம்பர அரண்மனைகளையா?

அல்லது— கனவுக் கலசங்கள் பொருத்தப்பட்ட
ஆலயங்களையா?

அல்லது— பொய்யர்களும், கொடுங்கோலர்களும்
கட்டிச் சென்றவற்றைத் தகர்த்துத் தரை மட்டமாக்க
வேண்டுமென்று எனக்கு ஆணையிடுகிறீர்களா?

பகல் வேடதாரிகளும், கொடியவர்களும்
நட்டு வளர்த்த நச்சுப் பயிர்களை
நான் என் விரல்களால் பிடுங்கி எறியட்டுமா?

சொல்லுங்கள்! உங்கள் ஆசை வெறிதான் என்ன!

என் நாட்டவரே!
நான்உங்ளுக்காக எதைச் செய்ய விரும்புகிறீர்கள்?

உங்கள் விருப்பத்தை நிறைவேற்ற
நான் ஒரு பூனைக் குட்டியைப் போல் மெல்ல முனகட்டுமா?

அல்லது— என் விருப்பப்படி
ஒரு சிங்கத்தைப் போல் கர்ச்சிக்கட்டுமா?

நான் உங்களுக்காவே பாடினேன்.
நீங்கள்தாம் ஆடவில்லை.

நான் உங்களுக்காகவே கண்ணீர் சிந்தினேன்.
நீங்கள்தாம் அழவில்லை.

நான் ஒரே சமயத்தில் அழவும் ஆடவும் செய்யவா?

பசியால் உங்கள் ஆத்மாக்கள் வேதனைப் படுகின்றன.
பள்ளத்தாக்குகளில் உள்ள கற்களைவிட மிகுதியாக
ஞானக்கனிகள் இருப்பது உங்களுக்குத் தெரியவில்லையா?

வாழ்க்கை ஊற்று உங்கள் வீட்டருகே
நீரோடையாய் ஓடிக்கொண்டிருந்தும்
உங்கள் இதயங்கள்
தாகத்தால் வரண்டு கிடக்கின்றன!

படிப்பகம்

www.padippakam.com



நீங்கள் அதைக் குடிக்கப்போவதே இல்லையா?

கடல் பொங்கி எழுகின்றது.
நிலவு தேய்வதும் வளர்வதுமாய் இருக்கிறது.
கோடையும் வசந்தமும் வருகின்றன.

கதிரவனுக்கும் பூமிக்கும் இடையில்—
பிறக்காத ஒரு கடவுளின் நிழல்கள் போல
பொருள்கள் ஒன்றொடொன்று மாறுபடுகின்றன.

ஆனால், உண்மையை மாற்ற முடியாது.
அது மரணமடைவதும் இல்லை.

இது தெரிந்தும் நீங்கள் ஏன்
சத்தியத்தின் முகத்தை அலங்கோலப் படுத்துகிறீர்கள்?

அமைதி பொலியும் இரவொன்றில்
நிலவின் பெருமையையும், விண் மீன்களின் பெருமிதத்தையும்
சுட்டிக்காட்ட நான் உங்களை அழைத்தேன்.

ஆனால், நீங்கள்—
ஆழ்ந்த உறக்கத்திலிருந்து அலறிப் புடைத்தெழுந்து
'எங்கே பகைவர்கள்? முதலில் நாம் அவர்களைக் கொல்ல
வேண்டும்!' என்று அச்சத்தால் அலறினீர்கள்!

வைகறைப் போதில்
பகைவர்கள் மெய்யாகவே வந்துவிட்டபோது,
நான் உங்களை மீண்டும் எழுப்பினேன்.

ஆனால், நீங்கள்—
ஆழ் துயிலிலிருந்து எழாமல்
அச்சத்தால் தாழிடப்பட்ட அறையில் கிடந்து
பேய்க் கனவுகளோடு போராடிக் கொண்டிருந்தீர்கள்!

"அந்த மலையுச்சிக்குச் செல்வோம்.
அங்கிருந்து உலகின் எழிலையெல்லாம் காண்போம்!"
என்று நான் உங்களிடம் சொன்னேன்.

அதற்கு நீங்கள்—
"இந்தப் பள்ளத்தாக்கின் அடியிலேதான்
எம் முன்னோர்கள் வாழ்ந்தனர்.
இதன் நிழலிலேதான் அவர்கள் இறந்தனர்.
இதன் குகைகளிலேதான் அவர்கள் புதைக்கப் பட்டனர்.
எப்படி நாங்கள் அவர்களால் மதிக்கப்படாத
இடத்திற்கு, இதைவிட்டு வரமுடியும்?"
என்று மறுமொழி சொன்னீர்கள்.

நான் மீண்டும் உங்களிடம்,
"தன்னைக் கடலுக்குக் காணிக்கையாக்கும்
சமநிலத்திற்குச் செல்வோம் வாருங்கள்!"
என்று அழைத்தேன்.

படிப்பகம்

www.padippakam.com



நீங்களோ, அச்சத்துடன்,
"நரகத்தின் பெருங்குரல் எங்கள் உயிரை அஞ்சச் செய்கிறது.
அதன் அஞ்சத்தக்க பாதலம் எங்கள்
உடல்களை அழிக்கின்றன" என்று கூறினீர்கள்.

உங்களை நான் நேசித்தேன், என் நாட்டவரே!
ஆனால், என் அன்பு எனக்கு வேதனையாகவும்
உங்களுக்குப் பயனற்றதாகவும் ஆகிவிட்டது.

இன்று நான் உங்களை வெறுக்கிறேன்!

இந்த வெறுப்பு வெள்ளம்
காய்ந்து போன கிளைகளையும்
விரிசல் கண்ட பழைய வீடுகளையும்
அடித்துச் செல்லக் கூடியது.

உங்கள் பலவீனத்தைக் கண்டு நான்
இரக்கப்பட்டேன், என் நாட்டவரே!

என் இரக்கம் உங்கள் மெலிவை அதிகரித்துவிட்டது.
உங்கள் சோம்பலை வளர்த்து மிகுதிப் படுத்திவிட்டது.
இது வாழ்வுக்கு வேதனை தருவது.

இன்று உங்கள் பலவீனத்தை நான்
இனங்கண்டு கொண்டபோது
என் ஆன்மா வெறுக்கிறது; அஞ்சுகிறது.

உங்களை நீங்கள் தாழ்த்திக் கொள்வது கண்டு
நான் கதறினேன்.

என் கண்ணீர் பளிங்குத் துண்டுகளாய்ச் சிதறின.
ஆனால், அவை, உங்களது தேங்கிய பலவீனத்தை
சுட்டெரிக்கவில்லை.

ஆனால், அவை, என் கண்களிலிருந்த
தீமைகளை யெல்லாம் கழுவிவிட்டன.

என் கண்ணீர் உங்கள் இதயப்பாறைகளை
என்றும் நெருங்கவே முடியவில்லை.

ஆனால், அவை, என் அகமனதின் இருளை
விரட்டிவிட்டன.

இன்று உங்கள் துன்பங்களைக் கண்டு நான்
கேலி செய்கிறேன்.

என் சிரிப்பு, முழங்கும் இடியாய்
வரப்போகும் புயலின்
முன்னறிவிப்பாய் ஒலிக்கிறது.

நீங்கள் எதை விரும்புகிறீர்கள் என் நாட்டவரே!
தேங்கிய நீரின் முகத்தின் மேல்

படிப்பகம்

www.padippakam.com



உங்கள் பேயறைந்த முகத்தை
நான் காட்ட வேண்டுமென்று விரும்புகிறீர்களா?
இப்படி வாருங்கள்! இப்பொழுது பாருங்கள்!
உங்கள் அசிங்கமான முகம்
எப்படி இருக்கிறதென்பதைப் பாருங்கள்!
ஆழ்ந்து சிந்தியுங்கள்!
அச்சம் உங்கள் கூந்தலை சாம்பலைப் போல ஆக்கிவிட்டது.
விரயம் உங்கள் கண்களை அருவருப்பான
இருண்ட குழிகளாய் ஆக்கிவிட்டது.
கோழைத்தனம் உங்கள் கன்னங்களைத் தீண்டியதால்
பள்ளத்தாக்கின் புதைகுழிகளாய் அவை மாறிவிட்டன.
மரணம் உங்கள் உதடுகளை முத்தமிட்டு விட்டதால்
அவை இலையுதிர் காலத்தின் பழுத்த மஞ்சள் இலைகளைப்
போல ஆகிவிட்டன.
நீங்கள் எதை விரும்புகிறீர்கள்,
என் நாட்டவரே!
உங்களைத் தன் குழந்தைகளாக இனிமேல்
எண்ண மறுக்கும் வாழ்க்கையிடமிருந்து
நீங்கள் எதைக் கேட்க விரும்புகிறீர்கள்?
உங்கள் ஆன்மாக்கள், பூசாரிகள், சூனியக்காரர்களின்
இரும்புப் பிடியில் சிக்கிக்கொண்டு உறைந்து கிடக்கின்றன.
உங்கள் மேனிகள் கொடுங்கோலர்கள், கொலைகாரர்களின்
கரங்களுக்கிடையில் சிக்கி நடுங்குகின்றன.
உங்கள் நாடு
பகைவரின் அணிவகுப்புக் காலடிகளாய்
வெடித்துப் பிளக்கத் தொடங்கிவிட்டன.
நீங்கள் கதிரவனின் முகத்தெதிரே
பெருமையுடன் நின்றாலும் கூட
என்னதான் நடந்துவிடுமென்று எதிர்பார்க்கிறீர்கள்?
உங்கள் வாள்கள் துருப்பிடித்துவிட்டன.
உங்கள் வேல்கள் முறிந்துவிட்டன.
உங்கள் கேடயங்கள் துளைபட்டுப் போயின.
அப்புறம், நீங்கள்
ஏன் போர்க்களத்தில் நின்றுகொண்டிருக்கிறீர்கள்?
போலி வேடமே உங்கள் மதம்
பொய்மையே உங்கள் வாழ்க்கை

படிப்பகம்

www.padippakam.com



சூன்யமே உங்கள் முடிவு.
பிறகு எதற்காக
உயிரோடிருக்கிறீர்கள்?
உங்கள் துயரங்களுக்கெல்லாம்
ஒட்டு மொத்தமான ஆறுதலைத் தர வல்லது
சாவுதான் என்பது உங்களுக்குத் தெரியவில்லையா?

ஃ

இளமையைத் தொடர்ந்துவரும்
தீர்மானமே வாழ்க்கை.
வளர்ச்சியின் பின் வரும்
விடாமுயற்சியே வாழ்க்கை.
முதுமைத் தளர்ச்சியைப் பின் தொடர்ந்துவரும்
ஞானமே வாழ்க்கை.
ஆனால், என் தாய் நாட்டவரே!
பிறக்கும் போதே பலவீனர்களாகவும்
கிழவர்களாகவும் நீங்கள் பிறந்துவிட்டீர்கள்!
உங்கள் தோலில் திரை விழுந்துவிட்டது.
உங்கள் தலைகள் சுருங்கிவிட்டன.
சேற்று நிலத்தை நோக்கி ஓடி
அங்கே ஒருவர் மேலொருவர்
கற்களை விட்டெறியும்
குழந்தைகளாய் ஆகிவிட்டீர்கள் நீங்கள்.
அறிவே ஒளி.
அதுவே வாழ்க்கையை வளப்படுத்த வல்லது.
விரும்புகிறவர்களுக்கெல்லாம்
அது பங்கிட்டு வழங்கப்படும்.
ஆனால், என் நாட்டவரே!
நீங்கள் இருளைத் தேடிச் செல்கிறீர்களே!
ஒளியை விரட்டுகிறீர்களே!
பாறைகளிலிருந்து நீர் வரும் என்று
எதிர்பார்த்துக் காத்திருக்கிறீர்களே!
உங்கள் தாயகத்தின் அவலங்களுக்கெல்லாம்
நீங்களே காரணம்.
நீங்களே குற்றவாளிகள்.
உங்கள் பாவங்களை நான் மன்னிக்க மாட்டேன்.
ஏனென்றால்,

படிப்பகம்

www.padippakam.com



என்ன செய்கிறோம் என்பதை
அறிந்தே நீங்கள் அவற்றைச் செய்கிறீர்கள்.
தன் மலைகளின் இரகசியங்களையெல்லாம்
கடலின் இதயத்திற்கு, இசை பாடியபடியே
எடுத்துச் செல்லும்அற்புத ஆறுதான்
மனித சமுதாயம்.
ஆனால், என் நாட்டவரே,
பூச்சி புழுக்களாலும், நச்சுக் கிருமிகளாலும்
மொய்க்கப்பட்டுத் தேங்கிக் கிடக்கும்
சதுப்பு நிலம் நீங்கள்!



ஆன்மா, ஒரு தெய்வீக நீலநிறத் தீப்பந்தம்.
அது, காய்ந்து போன தாவரங்களை எரித்து விழுங்கிவிடும்.
அது, புயலில் வளரும்!
தேவதைகளின் முகங்களில் ஒளியேற்றும்.
ஆனால், என் நாட்டவரே!
புயல்களால், என்றும் மீளாதபடி பனிப் பள்ளத்தாக்குகளில்
தூவப்படும் சாம்பல்தான் உங்கள் ஆன்மாக்கள்.

என் நாட்டவரே!
அச்சப் பேயைக் கண்டு அஞ்சாதீர்கள்!
அது பெருமையும் கருணையும் உடையது.
உங்கள் சிறுமையைக் கண்டால்
அது உங்களை நெருங்காது.
வாள்களைக் கண்டு அஞ்சாதீர்கள்!
உங்கள் உள்ளீடற்ற வெற்று இதயங்களில்
பாய்வதற்கு அவை மறுத்துவிடும்!

என் நாட்டவரே!
உங்களை நான் வெறுக்கிறேன்.
ஏனெனில் நீங்கள் பெரும் புகழையும்
பெருமைகளையும் வெறுக்கிறீர்கள்.
உங்களை நான் இகழ்கிறேன்.
ஏனென்றால், உங்களை நீங்களே இகழ்ந்துகொள்கிறீர்களே!
நான் உங்கள் பகைவன்!
ஏனென்றால்,
நீங்கள் தெய்வங்களின் பகைவர்கள் என்பதை
உணர மறுக்கிறீர்கள்!

தமிழில்: **புவியரசு**

படிப்பகம்

www.padippakam.com



வல்லிக்கண்ணன்

# நினைவுத் தடங்கள்

புதுமைப்பித்தன் கதைகளை நான் தெரிந்து கொண்டது 1936இல் தான்.

1936 மார்ச் மாதம் எஸ் எஸ் எல் சி பரீட்சை எழுதியவுடன் என் பள்ளிப் படிப்பு முடிந்தது. அதுவரை என் சகோதரர்களும் நானும் அம்மாவுடன் பாளையங்கோட்டையில் வாடகை வீட்டில் வசித்து வந்தோம். என் அண்ணா கோமதிநாயகம் 1934இல் எஸ் எஸ் எல் சி எழுதித் தேர்வு பெற்றிருந்தார். என் தம்பி முருகேசன் ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தான். அவன் படிப்புக்காக மட்டும் மேலும் பாளையங்கோட்டையிலேயே குடியிருப்பது வீண் செலவு என்று தீர்மானித்து நாங்கள் ராஜவல்லிபுரம் சேர்ந்தோம்.

பாளையங்கோட்டையில் வசித்த காலத்தில் 'ஆனந்த விகடன்' தொடர்ந்து படிக்கக் கிடைத்து வந்தது. அண்ணாவின் நண்பர் ஒருவர் வீட்டில் 'விகடன்' வாங்கப்பட்டது. அவர்கள் படித்த பிறகு நண்பர் இரண்டு மூன்று இதழ்கள் சேர்த்து அண்ணாவுக்கு உதவுவார்.

ரங்கூன்பிள்ளை என்று ஒருவர் பக்கத்து வீட்டில் இருந்தார். அவர் ஆனந்த விகடனை முதல் வருட இதழ்களிலிருந்து பைண்டு பண்ணி வைத்திருந்தார். அத்தொகுதிகளை அவர் எங்களுக்குப் படிக்கத் தந்தார்.

அந்நாட்களில் (1933 - 1934இல்) 'சுதந்திரச் சங்கு' என்ற வாரப் பத்திரிகை பிரபலமாக இருந்தது. 'சங்கு' சுப்பிரமணியன் அதன் ஆசிரியர். தேசீய உணர்வு ஊட்டும் வகையில் சூடான, விறு விறுப்பான எழுத்துக்கள் அதில் நிறைந்திருக்கும். காலணாதான் விலை.

அதே சமயம் 'காந்தி' என்ற இதழும் வந்து கொண்டிருந்தது. பின்னாளில் 'தினமணி' நாளிதழின் ஆசிரியராகப் புகழ் பெற்ற டி. எஸ். சொக்கலிங்கம் அதை நடத்தினார். 'காந்தி' இதழின் விலையும் காலணாதான்.

உயிரும் உணர்ச்சியும் உள்ள தமிழ் நடையில் பலவிதமான கட்டுரைகளையும் தந்த சுதந்திரச் சங்கு, காந்தி இதழ்களை நாங்கள் வாரந்தோறும் வாங்கி ஆர்வத்துடன் படித்தோம்.

நாங்கள் ராஜவல்லிபுரம் சேர்ந்த பிறகு நாங்களே 'ஆனந்த விகடன்' வாங்கலானோம். இதற்குள் பிரிட்டிஷ் ஆட்சியின் அடக்கு முறைக்கு உட்பட்டு 'சுதந்திரச் சங்கு' நின்று விட்டது. 'காந்தி'யும் வெளிவரவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



ராஜவல்லிபுரத்தில் ஒரு நண்பர் 'மணிக்கொடி' சிறுகதைப் பத்திரிகையின் இதழ்களை பைண்டு செய்து வைத்திருந்தார். அவற்றை அவர் எங்களிடம் தந்தார். மூன்று தொகுதிகள்.

புதுமைப்பித்தன், மௌனி, ந. பிச்சமூர்த்தி, கு. ப. ராஜகோபாலன், பி. எஸ். ராமையா முதலிய சிறுகதைப் படைப்பாளிகளின் எழுத்துக்களை அவை எங்களுக்கு அறிமுகப்படுத்தின. மற்றும் பல மொழிபெயர்ப்புச் சிறுகதைகளையும்.

புதுமைப்பித்தனின் நாசகாரக் கும்பல், சிற்பியின் நரகம், காலனும் கிழவியும் போன்ற அருமையான கதைகள் அத்தொகுப்பில் இருந்தன. அவற்றால் நான் பெரிதும் வசீகரிக்கப் பட்டேன்.

'தினமணி' 1933இல் துவங்கப்பட்டது. 'ஆனந்தவிகடன்' 1933 இல் 'தீபாவளி மலர்' வெளியிட ஆரம்பித்தது.

'தினமணி 1933இல் அல்லது 1934ஆக இருக்கலாம் — 'பாரதி மலர்' என்று ஒரு சிறப்பு மலரை வெளியிட்டது. 'தினமணி' நாளிதழை இரண்டாக மடித்த அளவில்—நீளமான பக்கங்களைக் கொண்ட மலர் அது. ஆழ்ந்த இலக்கிய ஈடுபாடு கொண்டிருந்த எழுத்தாளர்களின் ('மணிக்கொடி' எழுத்தாளர்கள் மற்றும் சிலரது) எழுத்துக்கள் அதை அணி செய்தன.

அதற்கு அடுத்த வருடமும் அதே அளவில் 'தினமணி விசேஷ மலர்' வெளியாயிற்று.

இவ் விரண்டு மலர்களிலும் புதுமைப்பித்தன் கதைகளும் கட்டுரைகளும் எழுதியிருந்தார். அவர் தினமணியில் சேர்ந்து பணியாற்றிக் கொண்டிருந்தார்.

இந்த இரு மலர்களையும் ராஜவல்லிபுரம் ரசிகர் எங்களுக்குப் படிக்கத் தந்தார்.

'மணிக்கொடி' நின்று நின்று உயிர் பெற்று வந்தது. நண்பர் அவ்வப் போது இதழ் வாங்கி, படித்துவிட்டு, எங்களுக்கு உதவிக் கொண்டிருந்தார்.

'மணிக்கொடி' நிர்வாகத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. அதன் சார்பில் நவயுகப் பிரசுராலயம் என்ற புத்தக வெளியீட்டுப் பிரிவு துவங்கப்பட்டது.

ஏ. என். சிவராமன் எழுதிய 'மாகாண சுயாட்சி' என்ற அரசியல் நூல் அதன் முதலாவது வெயீடாகப் பிரசுரம் பெற்றது. எட்டணாதான் விலை.

எட்டணா விலையில் சிறந்த புத்தகங்களை வெளியிடுவது என்பது அந்தப் பிரசுராலயத்தின் நோக்கமாக இருந்தது.

கி. ரா. என்ற (கி. ராமச்சந்திரன்) மணிக்கொடி எழுத்தாளர் சார்லஸ் டிக்கன்ஸ் எழுதிய 'இரு நகரங்களின் கதை' என்ற நாவலை 'தேய்ந்த கனவு' என்ற பெயரில் தமிழாக்கியிருந்தார். 'டாக்டர் ஜெகில் அண்ட் மிஸ்டர் ஹைட்' எனும் ஸ்டீவன்சனின் அற்புதமான கதையை கு. ப. ராஜகோபாலன் 'இரட்டை மனிதன்' என்று மொழி பெயர்த்திருந்தார். 'மணிக்கொடி'யின் ஆசிரியராக பொறுப்பேற்றிருந்த ப.ரா. (ப. ராமஸ்வாமி) 'சீனா' பற்றியும் அயர்லாந்தின்

படிப்பகம்

www.padippakam.com



விடுதலைப் போராட்ட வீரர் 'மைக்கேல் காலின்ஸ்' பற்றியும் புத்தகங்கள் எழுதினார்.

இவை அனைத்தும் எட்டணா விலையிலேயே வெளியிடப்பட்டன. வாசகர்களுக்கு மலிவு விலையில் கிடைத்த நல்ல புத்தகங்கள் இவை. காலப்போக்கில் பிரசுராலயம் தன் நோக்கத்தை மாற்றிக் கொண்டது. உயர்ந்த விலையில், பெரிய பெரிய புத்தகங்களாக வெளியிட முனைந்தது.

'தினமணி' 1937இல் ஆண்டு மலர் வெளியிட்டது- அகலமான புத்தக வடிவில். அதாவது, விகடன் தீபாவளி மலர் அளவில். அந்த மலர் புதுமைப்பித்தனால் தயாரிக்கப்பட்டிருந்தது. நல்ல இலக்கிய மலராகத் திகழ்ந்தது அது. அதில் பு. வி. சிறந்த கதைகளுள் ஒன்றான 'நினைவுப் பாதை'யும் மௌனியின் 'எங்கிருந்தோ வந்தான்' கதையும், மற்றும் பல நல்ல சிறுகதைகளும் கட்டுரைகள், கவிதைகளும் இடம் பெற்றிருந்தன. தினமணி ஆசிரியர் குழுவில் பணியாற்றிய இளங்கோவன் (ம. க. தணிகாசலம்) 'சாவே வா!' என்ற சிறப்பான கட்டுரை ஒன்று எழுதியிருந்தார். பின்னாளில் இவர் சினிமாவில் கதை-வசனம் எழுதி கண்ணகி, மகாமாயா, அசோக் குமார் போன்ற பல படங்கள் மூலம் தனது ஆற்றலை வெளிப்படுத்தி புகழ் பெற்றார்.

என் வாழ்விலும் அனுபவங்கள் சேர்ந்தன. 1937 நவம்பரில் நான் ராஜவல்லிபுரத்திலிருந்து ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி போய் ஒரு குமாஸ்தாவாக நாளோட்டினேன். அங்கே இரண்டு வருடங்கள் கழித்துவிட்டு, திருநெல்வேலி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் ஊருக்கு வந்து சேர்ந்தேன். இதற்கிடையில் என் எழுத்துக்கள் பத்திரிகைகளில் வரத்தொடங்கியிருந்தன.

நான் ஸ்ரீவைகுண்டத்தில் வசித்த வருடங்கள் இரண்டு. அக்காலத்தில்தான் நவயுகப் பிரசுராலய வெளியீடுகளாக 'புதுமைப்பித்தன் கதைகள்' என்று 29 கதைகள் கொண்ட தொகுப்பு, 'ஆறு கதைகள்', 'நாசகாரக் கும்பல்', 'குசேலா - கலியுக மாடல்' ஆகிய சிறுசிறு வெளியீடுகள், 'உலகத்துச் சிறுகதைகள்', சொ. விருத்தாசலம் என்ற பெயரில் பு. பி. எழுதிய 'பாசிஸ்ட் ஜடாமுனி' (இத்தாலிய சர்வாதிகாரி பெனிட்டோ முசோலினியின் வரலாறு), சொ. வி-யும் ந.ராமரத்தினமும் சேர்ந்து எழுதிய 'கப்சிப் தர்பார்' (சர்வாதிகாரி ஹிட்லர் வரலாறு) எல்லாம் வந்தன.

1941 ஜூன் மாதம் நான் குமாஸ்தா வேலையை உதறிவிட்டு திருநெல்வேலி வந்து சேர்ந்தேன். அங்கு என் அண்ணா மெடிக்கல் ஸ்டோரில் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். அம்மாவும் தம்பியும் அங்கேயே இருந்தார்கள்.

1941 - 42 - 43 வருடங்களில் மணிக்கொடி எழுத்தாளர்கள் கதைகளை 'கலைமகள்' வெளியிட்டது. புதுமைப்பித்தனின் சிறந்த சிறுகதைகள்- அன்று இரவில், காஞ்சனை, மகாமசானம், செல்லம்மா முதலியன அக்காலகட்டத்தில் 'கலைமகளில்' பிரசுரமாயின. கு..ப. ரா., ந. பிச்சமூர்த்தி, ந. சிதம்பர சுப்பிரமணியன், சி. சு. செல்லப்பா, க. நா. சுப்ரமண்யம் சிறுகதைகளையும் கலைமகள் வெளியிட்டது.

படிப்பகம்

www.padippakam.com



1941-1942இல் எனது உருவகக் கதைகளும் 'கலைமகளில்' வெளியாயின.

அதுவரை வெளிவந்திருந்த புதுமைப்பித்தன் எழுத்துக்கள் அனைத்தையும் நான் படித்திருந்தேன். எனினும் அவரை நான் பார்த்ததில்லை. அவர் படமும் எந்தப் பத்திரிகையிலும் வந்ததில்லை—1942வரை.

1942இல் திருச்சி 'கலாமோகினி' ஆசிரியர் வி. ரா. ராஜகோபாலன், எப்படியோ புதுமைப்பித்தன் போட்டோ ஒன்றைப் பெற்று தனது இதழ் அட்டைப் படமாக வெளியிட்டு விட்டார். 'கலாமோகினி' ஆரம்பம் முதல், இறுதி இதழ் வரை, ஒவ்வொரு இதழிலும் ஒரு எழுத்தாளரின் படத்தை அட்டையில் வெளியிட்டு, உள்ளே 'நமது அதிதி' என்று அவரைப் பற்றி ஒரு பக்கம் எழுதுவதை வழக்கமாகக் கொண்டிருந்தது. (தனது படத்தை அட்டையில் வெளியிட்டதை பிதுமைப்பித்தன் ரசிக்கவில்லை, கண்டணம் தெரிவித்தார் என்று வி. ரா. ரா. சொன்னது உண்டு.)

"நீங்கள் புதுமைப்பித்தனைப் பார்த்தது இல்லை அல்லவா? இன்று பார்த்துவிடுவோம்" என்று நண்பர் திருலோகசீதாராம் சொன்னார் ஒருநாள், 1943 டிசம்பரில்.

அப்போது பு. பி. சென்னை ராயப்பேட்டை நெடுஞ்சாலையில் தெரு ஓர வீடு ஒன்றில் குடியிருந்தார்.

நாங்கள் போன சமயம், அவர் ரோட்டடி சன்னல் அருகில் அமர்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார். திருலோகம் என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

அந்நாட்களில் அவர் 'தினமணி'யில் இல்லை. டி. எஸ். சொக்கலிங்கம் 'தினமணி' ஆசிரியர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டு வெளியேறி 'தினசரி' என்ற நாளிதழை நடத்திக் கொண்டிருந்தார். புதுமைப்பித்தனும் மற்றும் சில உதவியாசிரியர்களும் ஆசிரியரோடு வெளி வந்திருந்தார்கள். அவர்கள் அனைவரும் 'தினசரியில்' பணி புரிந்தார்கள்.

'தினசரி'யில் உதவி ஆசிரியர் வேலை கிடைக்குமா என்று திருலோகம் விசாரித்தார். எனக்குத்தான் நண்பர் வேலை தேடுகிறார் போலும் என்று பு. பி. எண்ணிவிட்டார். 'ஏன் இவர்தான் தன்னாலானதை செய்து கொண்டிருக்கிறாரே?' என்றார்.

'இவருக்கு வேலை வேண்டாம். இவர் அண்ணன் ஒருவர் இருக்கிறார். இப்ப சும்மாதான் ராஜவல்லிபுரத்தில் இருக்கிறார். நீங்கள் தினசரியில் அவருக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுத்தால் உதவியாக இருக்கும்' என்று திருலோகம் கூறினார்.

'டி எஸ் சியிடம் கேட்டுச் சொல்கிறேன். அடுத்த வாரம் வந்து பாருங்க' என்றார் பு. பி. ஊழியன் மலருக்கு ஏதாவது எழுதித் தருவதாகவும் சொன்னார்.

'கிராம ஊழியன்' பொங்கல் மலருக்கு அவர் ஒரு விஷயம் அனுப்பிவிட்டார். 'உண்டுண்டு கடவுளுக்குக் கண் உண்டு...' என ஆரம்பமான ஒரு சிறுகவிதை. வேலூர் வெ. கந்தசாமிப்பிள்ளை என்ற புனை பெயரில் புதுமைப்பித்தன் எழுதியமுதல் கவிதை அது.

படிப்பகம்

www.padippakam.com

## நீயும் நானும்

### 1

மனிதங்களற்ற மனிதர் வாழ்வெளியில்
நீ திகைத்து அனாதரவாய்
நின்றிருந்தாய் அப்போது—

என் பறவைகளை உன் வானத்திற்கு
அர்ப்பணித்தேன்—

என் பாதையை உன் பாதங்களுக்கு
நடை பழக்கினேன்—

என் மனிதர்களை உன் உலகத்திற்கு
அறிமுகப்படுத்தினேன்—

இப்போதோ,
நீ என்னைத் தேவையற்றவனாய்—
நானோ பாழ்வெளியில் ஒற்றையாய்—

### 2

உன் சிரிப்புக்கு நானும்
வலிய சிரிப்பானேன்.

அப்புறம் உன் அழுகைக்கும்
நான் அழுகையானேன்.

பிறகு நீ அப்படியே
சிரிப்பும் அழுகையுமாய்.

உன்னை நிலைநிறுத்திக்கொள்ள
நிறமிழந்து நான்...

### 3

முதன்முதலில் நாம்
சந்தித்துக்கொண்டபோது
உண்மையை உண்மையாய்ப்
பேசுவதென சத்தியமானோம்.

அடுத்த சந்திப்பில்
நீ உண்மையை உண்மையாய்ப்
பேசினாய்.

நானும் உண்மையை உண்மையாய்ப்
பேசினேன்.

அப்புறம் நாம் சந்திக்கவே இல்லை.

நாம் மாறிப்போனோம்
அதற்கு அவசியமேயில்லாமல்!

**க. அம்சப்ரியா**

படிப்பகம்

www.padippakam.com

# சொல்வதற்கு ஏதுமில்லை.

பிறக்கும்போதே கத்தி வைத்து
பிரச்சினை பெரிதென்றும்,
பின்னர் நோயில் விழுந்து
நொந்துபோக வைத்ததும்—
அப்பாவின்
அகல மார்பிலமர்ந்து விளையாடும்போது
ஆயிரம் முறை கேட்டாச்சு.

அண்ணன், அக்காமார்
அடித்த லூட்டிகளும்
அக்கறையாய்ப் பார்த்துக்கொண்டதும்—
நிலாச் சோறுண்கையில்
நிறையத் தரம் கேட்டாச்சு.

காது குத்திப் பேர் வைக்க
கால் பவுன் போட்டதைக்
கடைசி வருஷம் வரைக்கும்
தாய்மாமன் சொல்ல—
தலையசைச்சுக் கேட்டாச்சு.

பத்தாவது முதல் பட்டம் பெறும் வரை
பேயிங் கெஸ்டாக இருந்ததைப்
பெரியம்மா சொல்ல—
பெருமையோடு கேட்டாச்சு.

தாத்தாவின் வீரமும் தர்ம சிந்தையும்
(அந்த வித்துடா நீ!... )
பழங்காலப் பெருமைகளாய்ப்
பாட்டி சொல்லச் சொல்ல—
பொறுமையுடன் கேட்டாச்சு.

எல்லாரும் சொல்லியாச்சு.
எல்லாமும் கேட்டாச்சு.

அம்மா மட்டும்
எதுவுமே சொன்னதில்லை.
சொல்ல எதுவுமில்லை.
அம்மா கடவுள் மாதிரி...
அம்மாவின் வெளிப்பாடு
செயல்கள் மட்டுமே.

**வத்சலகுமாரன்**

படிப்பகம்

www.padippakam.com

*இருபத்திரண்டு வயது இளமையும், நல்லதின் மேல் நாட்டமும், தன்னைத் தானே ஆக்கிரமித்துக் கொள்ளாத தணிவும் உள்ள கனியும் மனதுக்கு இது காவியமாகலாம். மனமே முற்றி மரமாகிப் போனால் கனவேது? கனிவேது?*




உயிரை விடவும் அதிமுக்கியமான பொருள் உண்டா? ஆனால் அவனுக்கு உண்டு. அது ஒரு கடிதம். அவனை விட ஐந்து வயது மூத்தவளான ஒரு பெண்ணுக்கு அவனால் எழுதப்பட்டு, கடைசிவரை அவள் கைக்குப் போய்ச் சேராமல் அவனிடமே தங்கிவிட்ட கடிதம். அதியற்புதமான உணர்ச்சிகளால் தன்வசமிழந்து ஓர் அன்னியப் பெண்ணுக்கு அவன் எழுதிய முதல் கடிதமும் கடைசிக் கடிதமும் அதுதான்.

அப்போது அவனுக்கு இருபத்திரண்டு வயது. இளமை அவன் மீது கட்டுக்கடங்காத ஆவேசத்துடன் ஆட்சி செய்து கொண்டிருந்த காலம். கல்லூரியில் பட்டப் படிப்புப் படிக்கும் மாணவன். கல்லூரி விடுதியில் வாசம். விடுதியை ஒட்டினாற் போல் கல்லூரியைச் சேர்ந்த பள்ளி. கல்லூரிக்கும் விடுதிக்குமிடையே அரை கி.மீ. தூரம். விடுதியிலிருந்து கல்லூரிக்குச் செல்லும் பாதை பள்ளியின் சுற்றுச் சுவரை ஒட்டினாற் போல் உள்ள நேர்ப் பாதை. பள்ளியிலிருந்து வெளியேறும் பிள்ளைகள் அந்தப் பாதைக்கு இணையாகக் கல்லூரியை நோக்கிவரும் சந்தில் சற்றுத் தூரம் வந்ததும், விடுதி மாணவர்களின் பாதையில் வந்து சங்கமமாக வேண்டும். கல்லூரியின் வாசலிலேயே ஒரு பஸ் ஸ்டேண்ட். நகரத்தின் பல பாகங்களுக்கும் அங்கிருந்து பஸ் கிடைக்கும். கல்லூரி விட்டதும் அங்கிருந்து பஸ்ஸைப் பிடித்து, நகரத்தைச் சுற்றியடித்துவிட்டு, இரவு சாப்பாட்டுக்கு வந்து சேரும் மாணவர்களுடன் அவனும் எப்போதாவது பங்குபெறுவதுண்டு. முதலாண்டு முடிந்து இரண்டாம் ஆண்டிலும் மூன்று மாதங்கள் முடிந்து விட்டன. அதன் பிறகுதான் அந்தச் சம்பவம நடந்தது.

ஒரு நாள் கல்லூரி முடிந்தவுடனே விடுதிக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். அப்போது அவனை விடச் சற்று மூத்தவனும் அனுபவசாலியுமான ஒரு மாணவனும் அவனுடன் வந்து கொண்டிருந்தான். சற்றுத்தூரம் வந்ததும் அந்த மூத்தவன் ஏதோ நினைவு வந்தவனைப் போல, "நீ அணுக்குண்டைப் பார்த்திருக்கிறாயா, ஐயா?" என்றான்.

அவன் மெல்லச் சிரித்துக் கொண்டே, "அமெரிக்காவுக்கோ ருஷ்யாவுக்கோ போய் அதைப் பார்த்துவரும் தகுதியும் செல்வாக்கும் அடியேனுக்கு இல்லை, ஐயனே. உமக்கு ஒருவேளை இருக்கலாம்," என்றான்.

"நீ ஒரு அப்பாவியாய் இருக்கத் தகுதியுள்ள ஆள்தான்,

படிப்பகம்

www.padippakam.com



தெரியாமலா போன ஆண்டு விழாவில் உனக்கு அந்தச் செல்லப் பெயரைச் சூட்டினார்கள்? அது போகட்டும். கேட்டதற்குப் பதில் சொல். அணுக்குண்டைப் பார்த்திருக்கிறாயா?''

''இல்லை.''

''சரி, வா. இப்போதே உனக்குக் காட்டுகிறேன்.''

அவர்கள் இருவரும் பள்ளி மாணவர்கள் வந்துகொண்டிருக்கும் அந்தச் சந்தில் புகுந்து பள்ளியை நோக்கி நடந்தனர். அவனுக்குத் தன் கல்லூரி நண்பனுடைய நகைச்சுவை விளங்கவில்லையாயினும் மனதில் ஓர் ஆர்வம் விழுந்துவிட்டது. பிள்ளைகள் நெருக்கியடித்தவர்களாய் வந்து கொண்டிருந்தனர். அந்தக் கூட்டத்திற்கு வழி விடுவதற்காகப் பாதையின் ஓரத்தில் ஒதுங்கிய போது, அந்த நண்பன் அவனைத் தட்டி, ''அதோ பார். அணுக்குண்டு வருகிறது,'' என்று கிசுகிசுக்க, அவன் ஏறிட்டுப் பார்த்தான். அவர்களுக்கு வெகு சமீபத்தில் வந்துவிட்ட அந்த இரண்டு பெண்களில் சற்றுப் பருமனாயிருந்தவள் அதே சமயத்தில் அவனை ஏறிட்டுப்பார்த்தாள். மின்னல் ஊடுறுவிப் பாய்ந்தாற்போல ஒரு சலனமும் அதைத் தொடர்ந்த தயக்கமும் அவனிடத்தேயும் அவளிடத்தேயும் எற்பட்டு மூச்சு முட்டியது. ஏற்கெனவே நின்றுபோன அவனருகே, ஏதோ செருப்பிலிருந்து கால் பிறழ்ந்து விட்டது போலச் சமாளித்து நின்றவள், நிதானப் படுத்திக் கொள்ளுமுன் அவனைக் கடந்து சென்று விட்டாள்.

அவன் அந்த நண்பனுடன் சேர்ந்து நடந்தான்.

''எப்படி அணுக்குண்டு?'' என்றான் நண்பன்.

''அருமையான பெயர்,'' என்றான் அவன். உருவத்துக்கும் பெயருக்குமுள்ள சம்பந்தத்தை அப்போது அவனால் பரிசீலிக்க முடியவில்லை. ஆனால், 'கணத்தில் அவன் நெஞ்சில் அணுக்குண்டை வீசி நாசப் படுத்தி விட்டாளே அவள்!' என்று பிரமித்துப் போய் அப்படிச் சொன்னான். அப்படியொரு பார்வை! அப்படியொரு தயக்கம்! அவனுள்ளே உயிர் எனும் கற்பூரம் குப்பென்று பற்றியெரிந்து, சுவடு தெரியாமல் கரைவது போல் இருந்தது. ஒரு சில கணங்களில் அவன் உடம்பு இலேசாகச் சுடத் தொடங்கிவிட்டது.

அவன் அந்தப் பிரமிப்பிலிருந்து தன்னைப் பலமாக உதறி விடுவித்துக் கொள்ளப் பறந்தான். மௌனமே அந்தப் பிரமிப்பின் ஆழமாய்ச் சுழிப்பதைக் கண்டு- வாய்விட்டுச் சிரித்து, மடமடவென்று பேசி, அதைக் கலைக்க முயன்றான்.

''யாரையா அந்த அணுக்குண்டு?'' என்றான்.

''இந்தப் பள்ளிக் கூடத்தில் வேலை பார்க்க வந்திருக்கிறது, ஐயா. வந்து இன்னும் ஒரு மாதம் ஆகவில்லை. அதற்குள் அதற்கு அணுக்குண்டு என்று பெயர் வைத்துப் பிரபலப்படுத்தி விட்டார்கள்.''

''அதன் பெயர் என்ன?''

''யாருக்குத் தெரியும்? இன்னும் கல்யாணம் ஆகவில்லை. அதைப்பற்றி இன்னொரு சுவாரசியமான விஷயம் என்ன தெரியுமா?''

''என்ன?''

''அது ஒரு ஷோக்குப் பேர்வழி. ஆனால், சக ஆசிரியர்களிடம் அதற்கு இன்ட்ரஸ்ட் கிடையாதாம். அதை விட வயதில் இளையவர்களிடம்தான் அதற்கு விருப்பம் அதிகமாம்.''

படிப்பகம்

www.padippakam.com



"சீ...சீ... இதெல்லாம் சுத்தப் பிதற்றல். அதன் பெயர் கூடத் தெரியவில்லை. அதற்குள் அதன் விருப்பு வெறுப்பெல்லாம் தெரிந்து விட்டதாமா? சும்மா கதையளக்காதீர்," என்று சீறினான். ஆனால், அந்த வார்த்தையே ஒரு நெருப்புத் துண்டு போல் அவன் நெஞ்சில் விழுந்து விட்டது. அவளை விட இளையவனான அவனைத்தான் சற்று முன் பார்த்தாளே அப்படியொரு பார்வை! அந்த நண்பன் சொன்னது உண்மையாயிருக்குமோ?

சூறையில் சிக்கிய தளிரைாய் அவன் நடுங்கினான். பிணத்துக்குக் கொள்ளி வைத்த தீப்பந்தத்தைக் கொண்டு அவன் உயிர் என்னும் கற்பூரத்தை பொருத்தி விட்டது போன்ற ஓர் அசூயையில் அவன் துடித்தான். 'ஆனால் கற்பூரம் எரிந்து காற்றோடு கரைந்து விட்டதே! ஐயோ அதை மீட்க முடியாதா!' என்று அவன் உள்ளம் ஓங்கி அலறியது.

அன்று மாலை அவன் பிடி கொள்ளாத வேகத்தில் விடுதிக்குள்ளேயே சுற்றி வந்தான. போகாத அறைகளுக்கெல்லாம் போனான். பேசாத மாணவர்களுடனெல்லாம் பேசினான. "என்ன, நம் அப்பாவிப்பிள்ளை ஒரேயடியாகத் திமிறிக் கொண்டு நிற்கிறது?" என்று அவனிடம் அன்புள்ள ஒரு நண்டன் விமர்சிக்கும் அளவுக்கு சுறுசுறுப்பாக வளைய வந்தான்.

ஆனால் அத்தனை கலகலப்பும் இரவு சாப்பாடு முடிந்து அறைக்கு மீண்ட சிறிது நேரத்தில் சுவடு தெரியாமல் போய் விட்டது. சொல்ல முடியாத சுமையொன்று அவனைப் பிடித்து அழுத்தத் தொடங்கி விட்டது. தாங்க முடியாத தணல் அவனை வாட்டியெடுத்தது. சீக்கிரமாகவே படுத்துக் கொண்டான். "என்ன, படிக்கவில்லையா?" என்று கேட்ட அறை நண்பனுக்கு, "இல்லை. மனசு சரியில்லை. தூக்கம்தான் அதற்கு மருந்து," என்று சொல்லிவிட்டு இழுத்துப் போர்த்திக் கொண்டு கண்களை மூடினான். மூடிய கண்களின் உள்ளே ஒரு போர்க்களமே விரிந்தது. அந்தப் போரின் முதல் கணையாக அக்கினி நாணைப் போல அவள் கண்கள் அவனை விழித்துப் பார்த்தன. தாயை இறுகப் பற்றிக் கொண்டு அவளை உதைத்துத் தள்ளும் குழந்தையைப் போல அவன் மனம் அவளை உடும்புப் பிடியாய்ப் பற்றிக் கொண்டு வெறுத்தது. அவனுடைய இருபத்திரண்டு வயது வளர்ச்சியும் பக்குவமும் ஒரே பொழுதில் சூறையாடப்பட்ட வருத்தத்தில் அவன் மாழ்கினான்.

அவள் எப்படிப்பட்டவள்? அந்தக் கண்களின் சுடர் எப்படிப்பட்டது? பிணத்தைக் கொளுத்திய தீப்பொறியா? கற்பூரத்தைக் கொளுத்தத் தகுதியுள்ளதா? ஆமாம், நெருப்புக்குள்ளேயும் அப்படியொரு பாகுபாடு உண்டா என்ன? ஒரே பொறி பிணத்தையும் கொளுத்தும், கற்பூரத்தையும் கொளுத்தும் என்றால், அது பாகுபாட்டுக் கெல்லாம் அப்பாற்பட்டதல்லவா? அதில் அவன் பாகுபாடு காண்பது மடமையல்லவா?

என்னென்னவோ சமாதானங்களும், எதிர் வாதங்களும் மனத்தைச் சூறையாட அவன் தூங்கிவிட்டான். விடியற்காலையில் எழுந்த போது அவன் அறைத் தோழன், "என்ன நண்பரே? இரவெல்லாம் என்னென்னவோ பிதற்றினீர்கள். எழுந்து வந்துஉடம்பைத் தொட்டுப்பார்த்தேன. நெருப்பு மாதிரி சுட்டது. இரண்டு முறை எழுப்பினேன். நீங்கள் ஒன்றும் பேசவில்லை.

www.padippakam.com



என்ன விஷயம்? இப்பொழுது எப்படி இருக்கிறது?'' என்றான். அவன் தன் உடம்பைத் தொட்டுப் பார்த்தான். சில்லிட்டுக் கிடந்தது. அறை நண்பனும் தொட்டுப் பார்த்துவிட்டு ஆச்சரியப்பட்டுப் போனான்.

''விஷயமா? பிறகு சொல்கிறேன்,'' என்று சொல்லி உடனே குளிக்கச் சென்று விட்டான்.

அன்று கல்லூரி முடிந்ததும் அவனும் அவனுடைய அறைத் தோழனும் கல்லூரி வாசலில் உள்ள பஸ் ஸ்டேண்டில் நின்று கொண்டிருந்தன

அவன் அங்கு தாமதித்தது அவளை வழியில் பார்க்கக் கூடாது என்பதற்காகவே. ஆனால், அவளே அங்கு வரக் கண்டு அவன் சற்றுத் தடுமாறினான். உடனே தன் முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டான். அவள் தன் தோழியுடன் பேசியவாறே வந்து, அவன் நிற்கும் இடத்திற்குச் சற்றுத் தள்ளி நின்றாள். பஸ்ஸுக்காகக் காத்திருப்பவர்களை நோட்டம் விடத் திரும்பியவள் அவனைக் கண்டு விட்டாள். அவள் கண்கள் பறிக்க முடியாதபடி அவன் மேல் தேங்கி நின்று விட்டன. அவனுடைய கண்களும் ஏங்கிப் போய் அவள் மேல் பதிந்துவிட்டன. ஒரு நிமிஷம் ஏதோ எதேச்சையான பார்வை போல அது தொடர்ந்தது. அவன் தனது கைகளை நெஞ்சின் மேல் கட்டிக்கொண்டிருந்தான். அவனுடைய கண்கள் இலேசாக எரிந்தன. எதையோ மளமளவென்று பேசிக் கொண்டு போன அவனுடைய அறை நண்பன், ''என்ன நண்பரே?'' என்று அவன் கையைத் தொட்ட போது, ''என் உடம்பு கொதிக்கிறதல்லவா?'' என்று சாவாதானமாகக் கேட்டான் அவன். நண்பன் பிரமித்துப் போய், ''என்ன நண்பரே? என்ன விஷயம்?'' என்று சற்று உரக்கவே கேட்டான்.

அப்போது பஸ் வந்துவிட்டது. பெரிய கூட்டமே அதன் மேல் படையெடுத்தது. அவளும் அதைப் பிடிக்க மெல்ல நகர்ந்தாள். அவன் தன் நண்பனுக்கு அவளைச் சுட்டிக் காட்டி ''அதோ பாருங்கள். பஸ்ஸைப் பிடிக்கப் போகிறார்களே, அவர்கள்தான் என்னுடைய இந்த நிலைக்குக் காரணம்,'' என்றான். அவள் பஸ்ஸில் ஏறிவிட்டாள். பஸ் புறப்பட்டு விட்டது.

நண்பர்கள் இருவரும் விடுதியை நோக்கி நடையைக் கட்டினர்.

அவன் சொன்னான்:

''உண்மைதான், நண்பரே. அவர்களை நேற்றுதான் பார்த்தேன். அவர்களும் பார்த்தார்கள். என்னவோ, எனக்கு காய்ச்சல் வந்துவிட்டது.''

நண்பன் கையைத் தொட்டுப் பார்த்தான்.

''அடடே! இப்போது உடம்பு நார்மலாகிவிட்டதே?'' என்று ஆச்சரியப்பட்டான்.

''அதுதான் சொன்னேனே. ஆனால், நீங்கள் இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? ரொம்பக் கேவலம், இல்லையா?'' என்றான்.

''இதிலென்ன கேவலம்? ஆனால் எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது.''

''எனக்குக் கூடத்தான், நண்பரே. என் மனதில் ஏதாவது தப்பான எண்ணம் ஏற்படுகிறதா என்றால், கொஞ்சங்கூட இல்லை. அவர்கள் பார்வை என்னைத் தீ மாதிரி சுடுகிறது. அதில் இருளுக்கோ சிறுமைக்கோ துளிக்கூட இடமில்லை. சாதாரண நேரத்தில் சருகுகள் போல் சலசலக்கும் பல தரப்பட்ட இளமை உணர்ச்

படிப்பகம்

www.padippakam.com



சிகள் யாவும் அவர்களைப் பார்க்கும் போது குப்பென்று பற்றியெரிந்து சாம்பலுதிர்த்து, முடிவில் ஒளி மட்டுமே மிஞ்சுகிறது. இதை நீங்கள் யாரிடமும் சொல்லாதீர்கள். வெட்கக் கேடு.''

நண்பன் அவன் கைகளைப் பற்றிக் கொண்டு, "இது என்னவோ அதிசயமாகவே இருக்கிறது. ஆனாலும் நான் உங்கள் நிலையை மிகவும் உயர்வாகவே நினைக்கிறேன். இதில் கேவலம் ஒன்றுமே இல்லை' கேவலம் என்ற சொல் இதை ஒன்றும் கேவலப்படுத்திவிட முடியாது,'' என்று சொன்னான். அவன் பேச்சு மிகவும் இதமாக இருந்தது.

"அவர்கள் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்?'' என்றான்.

"நீங்கள் அவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்பதே உங்களுக்குப் பிடிபடாத போது, அவர்கள் உங்களைப் பற்றி என்ன நினைத்தால் என்ன?''

"ஒருவேளை அவர்கள் நினைப்புத்தான் என் நினைப்புக்குச் சொல்லோ என்று நினைக்கிறேன். ஆனால் இதில் அர்த்தம் மாத்திரம்தான் உண்டு. வார்த்தைகள் இல்லை. இல்லாமலே இருக்க வேண்டும்.''

நேற்று அவளைக் காட்டிய நண்பனிடம் அவளை 'அது, இது' என்றே குறிப்பிட்டுப் பேசினான். காரணம் அவளுக்குப் பின்னால் கூட அவளை 'அவள்' என்று குறிப்பிட்டுப் பேச அவனால் முடியாமல் போனதுதான்.

அவள் ஒன்றும் அப்படி விகாரமாய்ப் பருத்துப்போய் இருக்கவில்லை. உருவம் மட்டும் கண்ணில் படும்போது சற்றுப் பருத்திருப்பதுபோல் தோன்றும் இரட்டைநாடி சரீரம். அழுத்தமான சதைப் பிடிப்பு. மாநிறம். முகம் அழகாய் இருப்பதாகச் சொல்வதைவிட அழகைப் பற்றிக் கற்பனை செய்யத் தூண்டும் படியாய் இருந்தது. பம்பரத்தில் சுற்றிய கயிறு போல வளைத்துப் போடப்பட்ட கூந்தல் ஒப்பனை. அதில் சில மலர்கள். மாலையில் அவை வாடிவிட்டன என்பது மறந்து போகும்படியான ஏதோ ஒரு மலர்ச்சி.

ஒரு ஜாடையில் வயதை நிர்ணயிக்க முடியாத பாவம்.

ஆகா! அந்தப் பார்வை! இன்றும் அதைப் பார்த்தான்.

அது ஒன்றும் அக்கினிக் கணையாய் இல்லை என்றும் சொல்லலாம். இன்று அந்தப் பார்வையில் 'என்னை நிராகரிப்பதே ஓர் அங்கீகாரமாய் இருக்கட்டும்' என்பது போல ஓர் அர்த்தம் கொப்பளித்து மெல்ல மெல்ல அவன் நெஞ்சில் இறங்கி ஈரப் படுத்தியது. அந்த அர்த்தமே அவனை மேலும் அவளிடத்தில் நிதானமின்றி இழந்து போகவும் தூண்டியது.

அன்று இரவு அவனுக்குக் காய்ச்சல் வரவில்லை. தீயின் கொழுந்துகள் அவனை இதமாகப் பதனிடுவதுபோல், கடலின் அலைகள் அவனைச் சுகமாகத் தாதாட்டுவது போல் மயங்கித் துயில வைத்தது அவள் நினைவு

மறுநாள் அவனும் அவனுடைய அறைத் தோழனும் அவளோடு பிரயாணம் செய்வதாகத் தீர்மானித்தார்கள். அவள் எங்கிருந்து வருகிறாள் என்பதை அறியவே அந்தத் திட்டம்.

மாலையில் அவளோடு பஸ் ஏறினார்கள். ஆனால் பஸ்ஸில் அவனால் அவளைத் திரும்பிப் பார்க்க முடியவில்லை. அவனுடைய செயல் அவனுக்கே நன்றாயில்லை. அவள் எங்கே இறங்கினாள், என்ன ஆனாள் என்

படிப்பகம்

www.padippakam.com



றெல்லாம் கவலைப்படாமல் பஸ் நிற்கும் இடம் வரை சென்றான். அவனுடைய நண்பன் வேறோர் இடத்தில் உட்கார்ந்து கொண்டான்.

பஸ் எழும்பூர் இரயிலடிக்கு வந்ததும் அவன் இறங்குவதற்காக எழுந்தான். அவளும் அங்கேதான் இறங்கினாள். அவனை அவள் பார்க்கவில்லை. இறங்கியதும் விடுவிடென்று போய் விட்டாள். அவளுடைய கால்கள் மண்ணில் அழுத்தமாகப் பதிந்து சென்றன.

அவனுடைய நண்பன் வந்து அவன் தோள்களைப் பற்றிக் கொண்டான். "நாம் பின்னாலேயே போய்ப் பார்க்கலாமா?"

"வேண்டாம். நாம் இந்தக் காரியத்தைச் செய்திருக்கக் கூடாது. கேவலம்," என்றான் அவன்.

"சரி, வாருங்கள். டிபன் சாப்பிட்டுவிட்டுத் திரும்பலாம்," என்று நண்பன் அழைக்க, இருவரும் ஒரு ஹோட்டலை நோக்கி நடந்தனர்.

"நீங்கள் எங்கே உட்கார்ந்திருந்தீர்கள்?" என்று நண்பனைக் கேட்டான்.

"பின்னால் உட்கார்ந்திருந்திருந்தேன். எனக்கு முன்னால் தான் அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். இரண்டு மூன்று தடவை உங்களைப் பார்த்தார்கள். நீங்கள்தான் திரும்பியே பார்க்கவில்லையே?" என்றான் நண்பன்.

"பார்த்தார்களா! எனக்கு கூச்சமாயிருந்தது. நம்மைப் பற்றி ஏதாவது தவறாக நினைத்திருப்பார்களா?"

"தவறாக நினைத்திருந்தால் உங்களைப் பற்றித் துளிக் கூட அக்கறைப் படாமல் போயிருக்கலாமே? அவர்கள் கண்கள் இரண்டு மூன்று தடவை உங்களைத் தேடியதைப் பார்த்தேன். நண்பரே, நேற்று நீங்கள் சொன்னபோது நான் நம்பவில்லை தான். ஆனால் இன்று அவர்கள் போக்கு என்னைத் தெளிவு படுத்திவிட்டது. நான் நம்புகிறேன்," என்றான்.

அவனுக்கு ஆறுதலாக இருந்தது.

அடுத்த இரண்டு வாரங்கள் கல்லூரி விட்டதும் அந்த பஸ் ஸ்டேண்டிலிருந்து அவளுடனேயே பிரயாணம் செய்வதும் மீள்வதுமாக இருந்தான். சில நாட்கள் அவனுடைய அறைத் தோழனும் கலந்து கொண்டான். ஆனால், ஒருநாள் கூட அவளுடன தொடர்ந்து சென்று அவளுடைய இருப்பிடத்தை அறிந்து கொள்ள முயலவில்லை. ஏனோ அது தேவையற்றதாகவே அவனுள் தீர்மானமாகி விட்டது. முதல் இரண்டு நாட்கள் அவளைத் திரும்பிப் பார்க்கக் கூச்சப் பட்டாலும் பிறகு திரும்பியே பார்த்தான். அவன் பார்க்கிறான் என்றதும் அவள் எங்காவது தன் கண்களைத் திருப்பிக் கொள்வாள். அது தெரிந்தே அவனும் ஆழ ஆழ அவளைப் பார்ப்பான். சில நாட்களில் அவனால் உட்கார முடியாமல் போய் விடும். அவள் பெண் என்பதால் எப்படியும் இடம் கிடைத்துவிடும். அப்போதெல்லாம் அவன் அவள் அருகில் சென்று நின்று கொள்வான். ஒரு நாள் அப்படி நின்ற போது மெல்லத் தலைநிமிர்ந்து பார்த்தாள். அந்தப் பார்வையில் வெறுப்பே இல்லை. மாறாக கருணையோடு மன்னிப்பதை போலோ, மன்னிக்க வேண்டுவதைப் போலோ, அவன் விஷமங்களில் அவள் உருகுவது போலும் உள்ளூர மகிழ்ந்து, வெளிப்பார்வைக்குப் பரிதாபப் படுவது

படிப்பகம்

www.padippakam.com



போலும் அவள் கண்ணும் முகமும் அன்பு சுரந்து ஒளிர்ந்தன. அவன் தனது கண்களை வேறு புறம் திருப்பிக் கொண்டபோது தனது பிடியெல்லாம் தளர்ந்து அவள் மேல் நிராதரவாய்ச் சரணடைந்தாற்போல் பொருமிப்போய் விட்டான்.

அவனுக்கு அவளைத் தொடர்ந்து செல்வதில் சலிப்பே வரவில்லை. மாறக, இன்னொரு தவிர்க்க முடியாத ஆசை வந்தது.

அவளுக்கொரு கடிதம் எழுதினால் என்ன?

முதலில் அந்த எண்ணம் சற்று விபரீதமாகப் பட்டாலும் எண்ணம் வந்த நிமிஷத்திலிருந்தே கடிதத்துக்குரிய சொற்களை ஒவ்வொன்றாய்த் தேடிச் சேர்க்கத் தொடங்கிவிட்டது அவன் மனம். அவனுடைய அறைத் தோழனும் கடிதம் எழுதுவதை ஆதரித்தான். கடைசியில் அவன கடிதம் எழுதத் தீர்மானித்து விட்டான்.

கடிதம் எழுதுவதற்காக மிக உயர்ந்த காகிதம் வாங்கினான். சிறந்த மை வாங்கினான். கடிதம் எழுத உட்கார்ந்ததும் அவனால் தொடங்க முடியவில்லை. அந்தக் கடிதத்தின் மீது அவன் கழித்த நேரமும் சக்தியும் அக்கறையும் அவன வாழ்நாளில் இனி எதற்குமே செலவழிக்க மாட்டான். அதை ஒரு தவமாகவே நடத்தினான். தன் நெஞ்சின் மூலை முடுக்கெல்லாம் பிரகாசமான எண்ணங்களைப் பொருத்தி வைத்தான். புனிதமான உணர்ச்சி மலர்களைத் தூவி வைத்தான். மணம் வீசும் ஆசைகளைத் தன் புலன்களில் நிறைத்தான். அதன் நிழலே போல் மேஜையில் ஊதுவத்தி கொளுத்தி வைத்துக் கொண்டு கடிதத்தை எழுதினான். எழுதி எழுதி ஓர் இரவு முழுதும் கிழித்துப் போட்டுக்கொண்டே இருந்தான். எழுத வேண்டிய வாசகங்கள் அவனுக்கு மனப்பாடமாகி விட்டன. ஆனால், அச்சுக் கோர்த்தாற் போல் எழுத வேண்டும், ஓர் எழுத்துக் கூட அவசரத்தில் கோணலாகிவிடக் கூடாது என்றே ஒவ்வொன்றாய் எழுதினான். ஏதாவதோர் எழுத்து சற்றுப் பெரியதாகவோ, சிறியதாகவோ கோணலாகவோ விழுந்து விட்டால் அந்தக் கடிதத்தையே கிழித்தெறிந்துவிட்டு வேறொன்று எழுதுவான். இப்படியாக இரவு முழுதும் எழுதியும் அவனால் மன நிறைவுற முடிக்க முடியவில்லை. கடைசியில் அயர்ந்து போய்ப் படுத்துவிட்டான். படுக்கும் போது விடியற்காலை நான்கு மணி.

மறுநாள் இரவும் அந்த வேலை தொடர்ந்தது. கடைசியில் ஒரு வழியாக இரவு ஒரு மணிக்கு எழுதி முடித்து விட்டான். தன்னுடைய அற்புதமான உணர்ச்சிகளை விகல்பமில்லாத மொழியில் அழகாக வெளிப்படுத்த வேண்டும் என்பதில் அவனுக்கிருந்த ஆர்வம் சொற்களின் எல்லையில் அடங்காது. அந்த இரவு நிம்மதியாகத் தூங்கினான்.

மறுநாள் கடிதத்தைத் தன் நண்பனிடம் கொடுத்துப் படித்துப் பார்க்கச் சொன்னான்.

"பரவாயில்லை, மடித்து வையுங்கள். நான் போய்ப் படிப்பதாவது," என்று மறுத்தான் அவன்.

"அதற்கில்லை. நீங்கள் படிக்காமல் மறைக்கும்படி இதில் ஒன்றுமே இல்லை. தாராளமாகப் படிக்கலாம். படித்துச்சொல்ல வேண்டும் என்று தானே கொடுக்கிறேன்? படியுங்கள்," என்று வற்புறுத்தியதன் பேரில் நண்பன் அதை வாங்கிப் படித்தான்.

படிப்பகம்

www.padippakam.com



கடிதம் கீழ்க்கண்டவாறு தொடர்ந்து வளர்ந்தது:

அன்பு மிக்கவர்களுக்கு,

நான் உங்களுக்குக் கடிதம் எழுதுவது எவ்வளவு தூரம் நியாயமானதென்று எனக்குத் தெரியவில்லை. அது போன்றே உங்களிடம் நான் அன்பு கொண்டுள்ளதும் எந்த அளவுக்குச் 'சரி' என்று என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. என் அன்பு பேரளவு தவறுடையதாக இருக்கலாம். ஆனால், அது எந்தக் காலத்திலும், எந்த நிலையிலும், எந்த நியாயத்திலும் தவறுடையதென்றே ஒதுக்கப் படவேண்டியதுதானா என்பதையும் என்னால் நிர்ணயிக்க முடியவில்லை. இது உங்களுக்கு விளங்குகிறதல்லவா? நான் உங்களிடம் அன்பு கொண்டுவிட்டேன். நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதே என் தவத்துக்கு நான் யாசிக்கும் வரம். உங்களைவிட நான் வயதில் மட்டுமின்றி மற்றெல்லா நிலைகளிலும்கூடச் சிறியவனாகத்தான் இருப்பேன். என்னையும் என் நெஞ்சையும் புரிந்து கொள்ளும் வகையில் நீங்கள் என்னிலும் மூத்தவர்களாக இருக்க வேண்டும். உங்களோடு என்னை ஒப்பிட்டுப் பார்க்கும் நினைவும் நிறைவும் யாருக்கேனும் ஏற்படுமோ என்னவோ. ஆனால், நீங்கள் என் ஆன்மாவைத் தீபாலங்காரங்களோடு வாழவைக்க வந்தவர்கள் என்ற உண்மை என் நெஞ்சுக்கு மட்டுமே தெரிந்த இரகசியம். இந்தப் பிடிபடாத சுகமான தவிப்புக்கு எதார்த்தமான ஒரு காரணம் கற்பிக்க முயல்கிறேன். அந்த நிலையில் உங்கள் அழகு என் உணர்வில் உறைக்கிறது. உண்மையில் நான் இதுவரை எந்தப் பெண்ணிடத்தும் காணாததும் காண முடியாததுமான எழில் பொங்கும முகத்தை உங்களிடம் கண்டேன். நிலவைப் போன்ற சிரிப்பும், முகிலைப் போன்ற குழலும் அழகில் மலரும் இதழும், சுகத்தை இசைக்கும் குரலும்! உங்கள் அழகைப் பற்றிய நியாயமான பெருமையாவும் எனக்கே ஆக வேண்டும். ஆனால், நான் உங்களை அடிக்கடி ஆழ்ந்து நோக்குவதற்கும் முடியுமபோதெல்லாம் வளைய வருவதற்கும் இந்த அழகொன்றுதான காரணமா வென்றால் இல்லை, இல்லை. ஆற்றுவெள்ளம் சங்கமத்துறை நோக்கிப் பாய்வதைப் போல் என் ஆன்மா உங்களிடம் சங்கமமாகிவிடப் பித்துற்றுப் பாய்வதே தலையாய காரணம்.

உங்களை நான் ஒவ்வொரு நாளும் பார்க்கிறேன். அதைப் பற்றி மேலும் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். இதழ் பூத்துச் சிரிக்கத் தெரிந்துள்ள நீங்கள் சில சமயங்களில் ஏன் அப்படித் துறவியைப் போலத் தென்படுகிறீர்கள்? உங்களின் நகைக்கும் கண்கள் ஏன் அப்படி பசிய சோலையின் நடுவே பாழ் நிலத்தைப் பார்ப்பதைப் போன்று சோகத்தில் ஆடுகின்றன? உங்கள் எழில் முகத்தைப் பார்க்கும் போதெல்லாம அதிலே ஒரு சோக ரேகையினை நித்திரை மயக்கத்தில் காண்கிறேன். நீங்கள் என்னைக் கனிவோடோ வெறுப்போடோ பார்க்கும் போதெல்லாம் அந்த ரேகை விழிப்படைவதாகவும் உணர்கிறேன். அதை என் ஆன்மா படித்தறிந்துவிட்டதாலேயே நான் உங்களிடத்தில் அன்பு கொண்டுவிட்டேன் என்று நினைக்கும் போது எனக்கு நிறைவேற்படுகிறது. இப்படி நான் சொல்வதெல்லாம் வெறும் கற்பனை என்றால் எனக்கு ஆத்திரம் வரு

படிப்பகம்

www.padippakam.com



கிறது. உண்மை என்றாலோ பெரும் மலைப்பு ஏற்படுகிறது. இதை நீங்களே நிர்ணயித்துச் சொல்ல வேண்டும்.

இந்தக் கடிதத்தை முடிவில்லாமல் எழுதிக் கொண்டே இருக்க நினைக்கும் நான் முடிவில் உங்களிடம் வேண்டிக் கொள்ள விரும்புவதெல்லாம் 'அன்பு செய்யுங்கள் என்பது தான். அது தூய்மையானதாக இருக்கட்டும். எடுக்கும் பிறவியெல்லாம் தொடர்வதாகவும் இருக்கட்டும். நீங்கள் என்னைப் பெண்மையின் எந்த நிலையில் நின்று அன்பு செலுத்தினாலும் சரியே, எந்த அளவுக்கு நேசித்தாலும் நன்றே, நான் என் பூரணமான சம்மதத்தை ஆன்ம சுத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கடிதத்தைத் திருப்பிக் கொடுத்தான் நண்பன்.

"எப்படி இருக்கிறது?" என்றான்.

"இது அபிப்பிராயம் சொல்லக் கூடிய விஷயமல்லவே? எட் ஐ வில் சே, இட் இஸ் டிவைன்லி பியூர். (ஆனாலும் சொல்வேன், இது அப்பழுக்கில்லாத தூய்மை.)

"நன்றி."

"இதை இன்றே கொடுத்து விடுவீர்களல்லவா?"

"எப்படிச் சொல்ல முடியும்? சமயம் எப்படி நேர்கிறதோ. ஆனால், இன்று நாம் இருவரும் போகிறோம், சரிதானே?"

அன்று மாலை அவர்கள் இருவரும் அவளுடன் பஸ்ஸில் சென்றனர். ஆனால் அவனால் அந்தக் கடிதத்தைக் கொடுக்க முடியவில்லை. அதைப் பற்றி இன்னும் நன்றாகச் சிந்திக்க வேண்டும் போல் இருந்தது. அவன் பேசாமல் இருந்துவிட்டான்.



கடிதம் அவளுக்குப் போய்ச் சேரவில்லை என்றாலும் அவளைத் தொடர்ந்து செல்வது மட்டும் தவறவில்லை. எல்லா நாட்களும் வெறும் பார்வையோடே முடிந்தன. ஒரு பேச்சில்லை. அந்தப் பார்வையும் பழகிப் பழகி, தீக்கங்குகளாய்த் தகித்தது போய் அமைதியாய்க் கனிந்துவிட்டது. கடிதம் கொடுப்பதைப் பற்றி ஒவ்வொரு நாளும் நினைத்துப் பார்த்தான். அவனுடைய மாசு மருவற்ற உணர்ச்சிகள் புண்படுத்தப்பட்டால், அல்லது ஏதாவது விபரீதமாக நடந்துவிட்டால்... என்ற சாதாரண ஐயங்கள் வந்து அவனைத் தயங்க வைத்தன. அவள் பார்ப்பது உண்மை. ஆனால், அந்தப் பார்வையை நம்பி கடிதத்தைக் கொடுக்கலாமா? கடிதத்தின் எல்லா சொற்களுக்கும் அந்தப் பார்வையே அர்த்தமாகி விடுமா? இந்த ஐயங்களோடு 'நாளை பார்க்கலாம், நாளை பார்க்கலாம்' என்று நாட்கள் போய்க்கொண்டிருந்தன. நடுவில் மூன்று நான்கு தடவைகள் கடிதம் அழுக்கடைந்து விட்டதோ என்றெண்ணி புதுப் பிரதியெடுக்கும் வேலையையும் செய்தான். அவன் உயிரே கற்பூரமாய் எரிந்துவிட, அதன் மணம் முழுதும் கடிதத்தின் வாசகங்களாய்த் தேங்கி நிற்பது போன்ற ஓர் ஆறுதல் அவனைத் தட்டிக் கொடுத்தது.

மூன்று மாதங்கள் இவ்வாறே கழிந்து விட்டன. அப்படியும் கடிதம் அவள் கைக்குப் போய்ச் சேர்ந்தபாடில்லை. அவனோ, அவளோடு பேசியதும் இல்லை. எதிரொலியே இல்லாத தாபங்களாய் அவன் நெஞ்சில் உணர்வுகள் சுருண்டு கொண்டிருந்தன.

படிப்பகம்

www.padippakam.com



பொங்கல் வந்தது.

பொங்கலுக்கு முதல் நாள் மாலை சில நண்பர்களுடன் அவன் சைனா பஜாருக்குச் சென்றிருந்தான். மாலையானால் விழாக் கோலம் பூண்டு விடும் அந்தத் தெருவில் எதிர் வரும் மக்கள் திரளுக்கு ஒதுங்கி ஒதுங்கி வழிவிட்டுச் சென்ற போது, திடீரென்று அவளைக் கண்டான். அவள் ஒரு கடையில் ஏதோ விசாரித்துக் கொண்டு நின்றாள். அவள் கைகளில் புதிய பொருள்கள் சில இருந்தன. அங்கே அவளைக் கண்டதும் அவனுக்குப் பூரிப்பாகவும் பிரமிப்பாகவும் இருந்தது. அந்த ஜனத்திரளில் அவன் ஒரு பக்கமும் அவள் ஒரு பக்கமும் நின்று கொண்டிருப்பதை அவன் நெஞ்சம் உணர்ந்தது. அப்போது கூட அவன் சட்டைப் பையில் அந்தக் கடிதம் இருந்தது. அதை அவளிடம் கொடுத்தால்...அவளுடன் பேசினால்?...

அவன் கைவிரல்கள் கடிதத்தை துழாவின.

ஆனால், அடுத்த நிமிஷம் அவன் மனம் கட்டோடு எரிந்து கரித் தூளாகும்படி அந்தக் காட்சியைக் கண்டான். அங்கு நின்று கொண்டிருந்த அவளிடம், அடுத்த கடையில் என்னவோ விசாரித்துவிட்டு வந்த நடுத்தர வயதுள்ள ஒருவன் ஏதோ சொன்னதும் அவர்கள் இருவரும் ஒருவரோடொருவர் ஒட்டினாற் போல் நடந்து சென்றனர். அந்த ஒட்டுதலுக்குள்ள ஒரே அர்த்தம் அவன் மனதில் நெருப்பாய் இறங்கிக் கொண்டிருக்கும் போதே அவர்கள் கூட்டத்தில் மறைந்தனர்.

அவர்களைத் தொடரலாமா?

'தூ'வென்று ஓங்கித் துப்பியவனின் கண்க்ளில் குப்பென்று ஈரம் சுரந்துவிட்டது. "சீ...சீ... அவள் ஏமாற்றி விட்டாள். என்னை ஏமாற்றி விட்டாள்," என்று அவன் மனம் அலறியது.

அன்று இரவு அவன் மனம் கரைந்து அழுதான். அவள் தூயவளாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். ஆனால், தூயவளாக இருப்பாள் என்று நினைக்கவில்லை. அதை நேரிலேயே கண்டுவிட்டான். முதன் முதலில் அவளைப் பற்றி அவன் கேட்ட வாசகங்கள் உண்மையாகி விட்டன. ஒரு வேளை அந்த நடுத்தர வயது மனிதன் அவளுடைய சகோதரனாய் அல்லது உறவினனாய் இருந்தால்... இவையெல்லாம் நொண்டிச் சமாதானங்கள். ஆனால், அவள் தூய்மையாய் இருக்க வேண்டும் என்று ஏன் விரும்பினான்? அவன் அவளிடம் என்ன உறவை, என்ன அன்பை எதிர்பார்த்தான்? எதுவாயிருந்தால்தான் என்ன? அவளுடைய ஆன்மாவைத்தான் அவன் நேசித்தான் என்றே இருக்கட்டுமே? மரத்தின் உயிர் அதன் பட்டையிலே இருப்பது போல அவள் ஆன்மாவின் அழகு அந்த உடலின் தூய்மையில்தான் இருக்க வேண்டும் என்பது நிதரிசனமான உண்மை. அது இல்லை என்றாகி விட்டது. இது நல்ல நேரம். அவளிடம் பித்துற்றுச் சுற்றித் திரிந்த சிறுபிள்ளைத்தனங்களையெல்லாம் விட்டொழிக்க இதுவே காரணமாக இருக்கட்டும். போதுமே.

அவன் விட்டொழித்து விட்டான்தான்.

காலையில் கல்லூரிக்குச் செல்லும் போதும் மாலையில் விடுதிக்குத் திரும்பும் போதும் வழியில் குறுக்கிடுவாள். அவன் தலையைத் திருப்பிக் கொண்டு போய் விடுவான். அவள் கண்கள் என்றும் போலவே, அல்லது என்

படிப்பகம்

www.padippakam.com



றையும்விட அதிகமாகவே பார்ப்பது அவனுக்குத்தெரியும். பொய்ப் பார்வை. பல சமயங்களில் பஸ் ஸ்டேண்டில் நிற்பான். அவனைத் திரும்பியே பார்ப்பதில்லை. பஸ்ஸில் ஏறிச் சென்றாளா என்பதும் அவனுக்குத் தெரியாது. அது மாதிரி ஒரு நாள் நின்று கொண்டிருந்த போது பஸ்ஸில் அவள் சென்றதும் அவனுடைய அறைத் தோழன் அவனிடம் வந்து, "இது கொடுமை. உங்களுக்கு என்ன வந்து விட்டது? பஸ்ஸில் ஏறிக் கொண்டு நீங்கள் வருகிறீர்களா என்று அவர்கள் பார்த்த பார்வையை நினைக்கும் போது எனக்கு வருத்தமாக இருக்கிறது. அவர்களும் உங்களை மறக்கவில்லை. மறந்துவிட்டது போல் பாசாங்கு செய்யும் நீங்களும் மறக்கவில்லை. நடுவில் இந்த நாடகம் ஏன்?" என்று கோபப்பட்டான்.

அவனுடைய கைகளைப் பற்றிக் கொண்டு, "நண்பரே, இதைப் பற்றி இனி நாம் பேச வேண்டாம். தயவு செய்து இதை மறந்துவிடுவோம்," என்ற போது அவர்கள் இருவருடைய நெஞ்சங்களுமே அதிர்ந்து போயின.

அவனுடைய அறைத் தோழன் ஒரு கணத்தில் தன்னைச் சமாளித்துக் கொண்டு மிகவும் உறுதியோடு, "ஆனால் எனக்குத் தெரியும். உங்களால் மறக்க முடியாது. உங்கள் கேரக்டர் அப்படி," என்றான்.

அவ்வார்த்தைகளைக் கேட்டதும் சென்ற ஆண்டு அவன் கண்ட கனவு நினைவுக்கு வந்தது. அந்தக் கனவைப் பற்றி விடுதியிலுள்ள சில மாணவர்கள் கூடியிருந்த போது அன்று சொன்னதும், அதைக் கேட்டு விட்டு அம்மாணவர்கள் சென்ற ஆண்டு விழாவில் அவனுக்கு 'அப்பாவி' என்று பெயர் சூட்டியதும் நினைவுக்கு வந்தன. அந்தக் கனவில் அவன் அப்பாவியாய் நடந்து கொண்டான் என்று பல மாணவர்கள் சொன்ன போது, அவனுடைய அறைத் தோழன் மட்டும், "இதுதான் உங்கள் கேரக்டர் நண்பரே. மிகவும் நுட்பமான, சுகமானகேரக்டர்," என்றான். "ஆனால், இந்தக் கேரட்டரில் ஆண்மை தெரிகிறதா?" என்று அவன் கேட்ட போது, "ஆன்மா தெரிகிறது, நண்பரே. ஆன்மாவுக்கு ஆண்மை என்றும் பெண்மை என்றும் எந்தவிதமான பாகுபாட்டுக்கூறுகளுமில்லை. முரட்டுத்தனம்தான் ஆண்மை போல் இருக்கிறது. ஆனால் ஆன்மா என்பது ஒரு பூவைப் போன்றது. பூவுக்கு அதன் மென்மைதான் ஆண்மை இல்லையா?" என்று உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னான் அந்த நண்பன்.

மிகவும் சாதாரணமான கனவு அது. ஏதோ அயல் நாடு போல் இருந்தது. முடி வெட்டிக் கொள்வதற்காக ஒரு சலூனில் நுழைந்தான். சலூன் முழுதும் பெண்களே வேலை செய்து கொண்டிருந்தனர். ஒரு பெண் அவனைத் தனியறைக்கு அழைத்துச் சென்றாள். அவனுக்கு முடி வெட்டுவதற்குப் பதிலாக தலையை அழகாய் வாரிவிட்டாள். அந்தச் சில கணங்களில் அவர்கள் இருவரும் நெருங்கிப் பழகிவிட்டது போல் தோன்றியது. அதே நேரத்தில் அவள் பல ஆண்களிடம் பழகியவள் என்றும் விளங்கியது. "உங்களை எனக்குப் பிடித்திருக்கிறது. உங்களுக்காக நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன். என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்?" என்றாள். அவனுக்குக் கூச்சமாயிருந்தது. "ப்ளீஸ் சொல்லுங்கள்," என்றாள். அவன் மிகவும் தயக்கத்தோடு

படிப்பகம்

www.padippakam.com



"உன் அழகான உடலை ஆடைகளின் மறைப்பின்றி, முழுமையாக, நிர்வாணமாகப் பார்க்க வேண்டும். முடியுமா?" என்று கேட்டான். அவள் மெல்ல நகைத்தவளாய், "அஃப்கோர்ஸ். ப்ளீஸ், நீங்களே என் ஆடைகளைக் களைந்தெறியுங்கள்," என்றாள். அவன் மிகவும் ஜாக்கிரதையாக அவளை நெருங்கி அவள் உடலைத் தொட்டுவிடாமல் தோள் பட்டையில் பொருத்தப்பட்ட பித்தான்களைக் கழற்றினான். ஆடை அவள் காலோடு நழுவியது. அவன் ஆவலோடு பார்த்தான். ஆனால், அவள் உடம்பில் முன்போலவே ஆடையிருந்தது. வேறொரு வண்ணத்தில் இருந்தது. அவள் கண்கள் நகைத்துக் கொண்டிருந்தன. அவன் மீண்டும் ஆடையைக் களைந்தான். களையக் களைய, அவள் மீது புதுப்புது வண்ணத்தில் ஆடைகள் தோன்றிக் கொண்டே இருந்தன. அவனுக்குக் கை சலித்துவிட்டது. "ஐ ஆம் சாரி. என்னால் முடியவில்லை," என்றான். அவள் உருகிவிட்டாள், "ஓ! மை டியர்! இவ்வளவு அருகில் இருந்தும், என் உடைகளைக் களைந்தும், என்னை நிர்வாணமாகப் பார்க்க ஆசைப்பட்டும், என் உடலை உங்கள் விரல்கள் கூடத் தீண்டவில்லையே? இது போல ஓர் ஒப்பற்ற இளைஞரை நான் பார்த்ததில்லை," என்று சொல்லியவள் சட்டென்று அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவன் வாயில் ஆவேசமாய் முத்தமிட்டாள். அந்தக்கணத்தில் அவள் நிர்வாணமாய் நின்று கொண்டிருந்தும் அவனால் பார்க்க முடியாமல் போயிற்று. அந்த முத்தம் அவனை ஆக்கிரமித்துக் கொண்டது.

கனவு கலைந்த போது, அவன் உதடுகள் இனிப்பாய் இருப்பதாய் உணர்ந்தான்.

அது கனவுதான் என்றாலும் அதில் அவனை முற்றும் விளங்கிக் கொண்டதாக அவனுடைய அறைத் தோழன் சொன்னான். அவனுக்கும் சரியென்றே பட்டது. ஆனால், அதற்கும் அவளை அவன் மறக்க முடியாது என்பதற்கும் உள்ள பிணைப்பை அவனால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

அதன் பிறகு அவர்கள் அதைப் பற்றிப் பேசவில்லை என்றாலும் அந்த நண்பன் சொன்னது போல் அவளை மறப்பது என்பது வெறும் பாசாங்காகவே முடிந்தது. இருந்தும் அவளைப் பார்க்கக் கூடாது என்பதில் பிடிவாதமாக இருந்தான். நெஞ்சு முழுதும் அவளே ஆக்கிரமித்துக் கொண்டு நிற்க, அதை மறுப்பது போன்ற அந்த நாடகத்தில் அவன் வதைபட்டான். உண்மையில் அவளிடம் எதை எதிர் பார்த்தான் என்ற கேள்வி மீண்டும் மீண்டும் எழுந்து அவனைக் குறையாடியது. இன்னொருவனோடு அவளைப் பார்த்ததற்காக மட்டுமே அவளை வெறுப்பதில் என்ன தூய்மை இருக்கிறது என்று அவனுள்ளே முடிவில்லாத போராட்டம் நடந்து கொண்டிருந்தது. ஒன்று மாற்றி ஒன்றாகப் பற்பல தர்க்கங்கள் அவனுள்ளே நடந்தாலும் அவளிடம் அவன் கொண்ட பந்தத்தை அற்பமான நெகிழ்ச்சியாக ஒருபோதும் கருத முடியவில்லை. அந்த எண்ணமோ, அற்பத்தில் அவளைச் சம்பந்தப்படுத்தும் கற்பனையோ அவனிடம் சற்றும் எழுந்ததில்லை. இத்தனைக்குப் பின்னும் அவளைப் பார்ப்பதையும் அவளோடு பிரயாணம் செய்வதையும் அடியோடு நிறுத்திவிட்டான்.

முடிவில் தேர்வுகள் வந்தன. எழுதினான். எழுதி முடித்த

படிப்பகம்

www.padippakam.com



கையோடு தன் சொந்த ஊருக்கு கிளம்பிவிட்டான். கிளம்பு முன் அவளை ஒருமுறை பார்த்துவிட லாமா என்று தயங்கியது உண்மை. ஆனாலும் பார்க்கவில்லை. அப்படியொரு பிடிவாதத்துடன் வண்டியேறிச் சென்றுவிட்டான்.

சிறிய கயிற்றில் முளையடித்துக் கட்டப்பட்ட மாட்டுக்கு 'நாம் பிணைக்கப் பட்டிருக்கிறோம்' என்ற உணர்ச்சி அடிக்கடி ஏற்படும். கயிறு வெகு நீளமாக இருந்தாலோ, பிணைக்கப்பட்ட உண்மை மறந்து போகக் கூட வாய்ப்புண்டு. அப்படி மறந்து போவதனால் பிணைக்கப்பட வில்லை என்றாகிவிடுவதில்லை. அவன் நிலையும் அப்படித்தான் ஆனது. அவளைவிட்டு வெகு தொலைவில் வந்த பிறகு மீள முடியாத அந்தப் பிணைப்பையே அவன் மறதியல்லாத மறதியாக்கி நாட்களைக் கடத்த முடிந்தது.

கடைசியில் அவன் பயந்த படியே தேர்வில் தோற்றுவிட்டான். அவனுடைய அறைத் தோழன்கூட ஒரு பிரிவில் தோற்றிருந்தான். ஆனால் அவன் தோல்வி அவனுடைய நண்பர்களுக்கு அதிர்ச்சியாய் இருந்திருக்கும். அவன் தோற்கக் கூடிய மாணவனே அல்ல. தோற்கடித்துவிட்டாள் அவள். ரிசல்ட்டைப் பார்த்து வீட்டில் வருத்தப் பட்டார்கள். அவர்கள் வருத்த மெல்லாம் 'பையன் மனமிடிந்து போகக் கூடாதே' என்பதுதான். அவன் ஒன்றும் இடிந்து போய் விடவில்லை. இடிந்து போவதற்கு அதில் ஒன்றுமே இல்லை. ஆகவே அன்றே படிக்கத் தொடங்கி விட்டான். செப்டம்பர் தேர்வுக்குச் சென்னையையே தேர்வெழுதும் இடமாகப் போட்டு, இடிந்துபோய் ஒடுங்கும் மனத்துக்கு ஒரு புத்துணர்ச்சியளித்துவிட்டுக் கருத்தூன்றிப் படித்தான்

தேர்வு நாள் வந்ததும் சென்னைக்கு வந்து ஒரு விடுதியில் தங்கிக் கொண்டு தேர்வுகளை எழுதினான். ஐந்து நாட்களில் தேர்வுகள் முடிந்துவிட்டன. அது வரை கட்டுப்பட்டிருந்த மனம் அவளை நோக்கி ஆவேசமாக வியாபித்துக் கொண்டு விட்டது. அவளைப் பார்க்க வேண்டும். வேறொன்றும் வேண்டாம். அவளோடு பேசுவதோ அந்தக் கடிதத்தை அவளிடம் சேர்ப்பதோ பொருளற்றுப் போன ஆசைகள். ஒவ்வொரு நாளும் அவளருகே சுற்றியலைந்த நாட்களிலேயே பேசவில்லை. இனிப் பேசிப் பயனென்ன?

மறுநாள் அதிகாலையே எழுந்து, குளித்துக் கொண்டு, ஏழரை மணிக்கெல்லாம் காலை உணவை முடித்துக்கொண்டு, சரியாக எட்டு மணிக்கு எழும்பூர் இரயிலடியிலுள்ள பஸ் ஸ்டாப்பில் வந்து நின்றுவிட்டான். அங்குதான் அவள் பள்ளிக்குச் செல்ல பஸ் பிடிக்க வேண்டும். அவன் மனம் தெறித்துவிடுவதைப் போல் துடித்தது. பக்கத்திலிருந்த கடையில் ஒரு பத்திரிகை வாங்கிக் கொண்டு நிழலில் ஒதுங்கினான். பத்திரிகை ஒரு கவசம். அதைப் படிப்பது அவனுடைய நோக்கமல்ல.

கடைசியில் 8-20க்கு அவள் அங்கே வந்து சேர்ந்தாள். அவன் நெஞ்சத் துடிப்பு இடி முழக்கங்களாய்க் கேட்க, கண்கள் மயங்க, பொறி கலங்கிய நிலையில் பத்திரிகையில் கண்ணோட்டம் விட்டு நின்றான். அவள் அவனைப் பார்த்துவிட்டாள். அவள் நடை படபடப்புற்றுத் தளர்ந்துவிட்டது. அதை அவனால் உணர முடிந்தது. அவள் மெல்ல மெல்ல வந்து, அவனுக்குச் சற்றுத் தள்ளிப் பின் பக்கமாக ஒதுங்கி, அவனையே பார்த்துக் கொண்டு நின்று விட்

படிப்பகம்

www.padippakam.com



டாள். அது அவனுக்குத் தெரிந்தது. அவன் பஸ் வருகிறதா என்று இரண்டு மூன்று தடவை தலை நிமிர்ந்து பார்த்தான். சிறிது நேரத்தில் பஸ் வந்தது. அதில் ஏறுவதற்கு முன் சுற்றிப் பார்ப்பதைப் போலத் திரும்பியவன் கண்களில் அவள் பட்டாள். அவள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். பாய்ந்து பதிந்து நெஞ்சைத் தணலாக்கும் அந்தப் பார்வையிலிருந்து தன்னை இழுத்துக் கொண்டு, அவன் பஸ்ஸில் ஏறிப் பெண்கள் இருக்கைக்கு முன் இருக்கையில் அமர்ந்துகொண்டான். அவள் மெல்ல ஏறி வந்து அவனுக்குப் பின்னாலேயே அமர்ந்து கொண்டாள்.

பார்த்தாகி விட்டது. அவ்வளவுதானா? முடிந்து விட்டதா?

அவன் உள்ளுக்குள்ளேயே நொறுங்கிக் கொண்டிருந்தான்.

கண்டக்டர், ஏறியிருந்த இரண்டொருவருக்கு டிக்கட் கொடுத்து முடித்ததும் பஸ் புறப்பட்டது. அப்போது அவனே எதிர்பாராத விதமாக அவள் எழுந்து வந்து அவனோடு அமர்ந்து கொண்டாள். அவன் இருதயம் குருவியினுடையதைப் போலப் படபடத்தது. அவன் அதை எதிர்பார்க்கவில்லை. என்ன செய்வதென்று ஒன்றும் தெரியவில்லை. புரியவில்லை. சட்டென்று பார்வையை வெளியே திருப்பிக் கொண்டான். கழுத்து வலிக்கத் தொடங்கியதும் கீழே குனிந்து கொண்டான். அவள் இரண்டு மூன்று தடவை பெருமூச்சு விட்டாள். இறங்க வேண்டிய இடம் வெகு வேகமாக நெருங்கிக் கொண்டிருந்தது. அவனுக்கு அழுகை குமுறிக்கொண்டு வந்தது. கீழுதட்டைக் கடித்து அவன் போராடித் தவித்துக் கொண்டிருந்த போதே அவள் இறங்க வேண்டிய இடம் வந்து விட்டது.

அவள் ஒரு பெருமூச்சுடன் இறங்குவதற்காக இருக்கையை விட்டு எழ முயன்றபோது அவன் வெறி கொண்டவனைப் போலச் சட்டென்று அவள் முந்தானையைப் பற்றினான். ஒருகணம் அவர்கள் கண்கள் மோதிக் கொண்டன. அவள் கண்களில் கண்ணீர் அரும்பு கட்டியிருந்தது. மெல்லத் தன் தலைப்பை அவன் கையிலிருந்து விடுவித்துக் கொண்டு, 'பித்து' என்று சொல்லிவிட்டு அவசரமாக இறங்கிவிட்டாள். பஸ் மீண்டும் ஓடியது. அவன் அடுத்த நிறுத்தத்தில் இறங்கி, வெகு நேரம் அங்கேயே உன்மத்தம் பிடித்தவனைப் போல நின்று கொண்டிருந்தான். 'இந்தப் பந்தத்தை என்னால் விலக்கவே முடியாதா? இந்த நெருப்பை என்னால் நெருங்கவே முடியாதா?' என்று வாய் விட்டுச் சொல்லிக் கொண்டான். அதுவே அந்தப் பந்தத்தின் முடிந்த அர்த்தமாய் அவனைப் பிணைத்தது.

அன்று இரவே அவன் சென்னையை விட்டுக் கிளம்பி விட்டான்.

ஏழெட்டு மாதங்களுக்குப் பின் அவன் தென்னாற்காடு மாவட்டத்தில் பயிற்சி பெறா ஆசிரியனாக வேலை பார்த்துக்கொண்டிருந்த போது அவனுக்கொரு கடிதம் வந்தது. அப்போது சென்னையில் தங்கியிருந்த அவனுடைய அறைத் தோழன் எழுதியிருந்தான். 'சுகம், சுகம் அறிய ஆவல்' என்று தொடங்கப்பட்டிருந்த அந்தக் கடிதம் கடைசியில் இப்படி முடிந்திருந்தது:

"ஒரு முக்கியமான விஷயம். நேற்று உங்களுடைய 'அவர்களை' மவுன்ட் ரோடில் சந்தித்தேன். உங்களைப் பற்றி விசாரித்தார்கள். சொன்னேன். உங்

படிப்பகம்

www.padippakam.com



கள் முகவரி கேட்டார்கள். தெரிவித்தேன். அவர்களைப் பற்றி விசாரிப்பதற்குள் தற்செயலாய் அப்போது அங்கே வந்த என் மாமா என்னைப் பார்த்து விட்டார். அதனால் விசாரிக்க முடியாமல் போய்விட்டது. அவர்கள் மிகவும் இளைத்துப் போய் விட்டார்கள். முன்பிருந்த பள்ளியில் இப்போது அவர்கள் இல்லை. அவ்வளவுதான். முடிக்கிறேன்.''

அவன் மறுநாளே சென்னைக்கு ஓடிவந்தான். அவனுடைய நண்பன் ஆச்சரியப்பட்டுப் போனான். அவன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அந்த நண்பனால் பதில் சொல்ல முடியவில்லை. ''என்னைப் பார்த்ததும் அவர்களே பக்கத்தில் வந்து, 'என்னைத் தெரிகிறதா?' என்று கேட்டார்கள். என்னால் சட்டென்று அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. நான் தடுமாறிக் கொண்டிருக்கும் போதே, 'உங்கள் நண்பர் எங்கிருக்கிறார்? சுகமாக இருக்கிறாரா?' என்று கேட்டார்கள். இதைக் கேட்கவே அவர்கள் என்னோடு பேசினார்கள் என்று எனக்கு நன்றாகவே விளங்கியது. நான் சொன்னேன். நீங்கள் பெயிலாகிவிட்டீர்கள் என்பதைக் கேட்டு கண் கலங்கி நின்றார்கள். 'என்னை அவர் மறந்திருப்பாரா?' என்று கேட்டார்கள். அப்படிக் கேட்கும்போதே அழுதுவிட்டார்கள். என்னவோ நிராதரவாய் நிற்கிற மாதிரியான திடுக்கிட வைக்கும் கண்ணீர். எனக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை. 'இந்த ஜென்மத்தில் நான் அவருக்கு செய்ய முடிந்தது ஒன்றுமில்லை. ஆனால் அவர் நினைவை விலக்கிவிட்டும் என்னால் இருக்க முடியவில்லை. எனக்கு அவர் ஒருவர் இருக்கிறார் என்பதுதான் இப்போது என் சுவாசம். என்ன செய்வேன்,' என்று தேம்பியழுதார்கள். ஒரு மகாநதி நெருப்புச் சுழலில் புதைகிற மாதிரி என்னைப் பிழிந்தது. பிறகு உங்கள் முகவரி கேட்டார்கள். கொடுத்தேன். அவர்களைப் பற்றி ஒன்றுமே கேட்காமல் போய்விட்டது பெரிய துரதிர்ஷ்டம்,'' என்று சொன்னான்.

அவன் வெகு நேரம் அழுதான். பிறகு கண்களைத் துடைத்துக் கொண்டு, ''இளைத்துப் போய்விட்டதாக எழுதியிருந்தீர்களே?'' என்று கேட்டான்.

''ஆமாம். துரும்பு மாதிரி ஒடுங்கி விட்டார்கள். உங்கள் கடிதத்தில் சொல்லியிருந்த அழகெல்லாம் இருந்த இடம் தெரியவில்லை. ஆனால், அந்த முகத்தில் உங்களையே நான் கண்டது மாதிரி ஒரு பிரமிப்பு ஏற்பட்டது. என்னவோ போங்கள்.''

''அவர்கள் எனக்குக் கடிதம் போடுவார்கள் என்று நினைக்கிறீர்களா?''

''முகவரி வாங்கிக் கொண்டதிலிருந்து அப்படித்தான் நினைக்கிறேன்.''

அடுத்த பத்து நாட்கள் சென்னையைச் சுற்றிச் சுற்றி வந்தான். அவளைப் பார்க்க வேண்டுமென்று துடியாய்த்துடித்தான். அப்போது அவன் பார்த்திருந்தால் கட்டாயம் பேசியிருப்பான். ''என்ன உடம்புக்கு?'' என்றாவது கேட்டிருப்பான். அது மட்டும்தானா? ''இந்த ஜன்மத்தில் நான் உங்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்கவில்லை. நான் இடைவிடாமல் உபாசிக்கும்படி எனக்கும் நீங்கள் மட்டும்தான் இருக்கிறீர்கள். அது போதும்,'' என்றும் சொல்லியிருப்பான். அவன் அவளைப் பார்த்து உருகியது, மருகியது எல்லாவற்றுக்கும் எதிரொலியும்

படிப்பகம்

www.padippakam.com



அர்த்தமும் இருந்த உண்மை இப்போதுதானே முதன் முறையாக அவள் வாய் மூலம் நிலைநாட்டப்பட்டுள்ளது? இதுமட்டும் முன்பே நிகழ்ந்திருந்தால்? அவ்வளவே வேண்டாம். இப்போதே அவளைப் பார்க்க முடிந்தால்? ஆனால், பார்க்க முடியவில்லை. ஊருக்குத் திரும்பிய பின் கடிதத்தை எதிர்பார்த்தான். அதுவும் வரவில்லை.

கடைசியில் அந்த ஊரை விட்டுச் சென்றான். வேறோர் இடத்தில் வேலைக்கமர்ந்ததும் முன்பிருந்த ஊரில் உள்ள ஓர் ஆசிரியருக்குத் தன் முகவரியை எழுதி, ஏதாவது கடிதம் வந்தால் உடனடியாக அனுப்பி வைக்கும்படி வேண்டிக் கேட்டுக் கொண்டான். ஒவ்வொரு வாரமும் அந்த ஆசிரியருக்குக் கடிதம் எழுதி விசாரித்துக் கொண்டிருந்தான். கேட்டுக் கேட்டு, நம்பிக்கையிழந்து, மனமொடிந்து போனபோது, திடீரென்று அவன் எதிர்ப்பார்த்த கடிதம் வந்து சேர்ந்தது. கடிதம் அவளிடமிருந்தே வந்திருந்தது.

என் தெய்வமே,

நீங்கள் கல்லூரியில் படித்தபோது இந்தப் பாவயிடம் அன்பு கொண்டு வளைய வந்தீர்களே? உங்களுக்கு நினைவிருக்கிறதா? இப்போது நான் மரணப் படுக்கையில் கிடக்கிறேன். இந்தக் கடைசி நிமிஷத்தில் நீங்கள் மட்டுமே என் நினைவில் இருக்கிறீர்கள். உங்களுக்கு மட்டுமே கடைசியாக நான் கடிதம் எழுதுகிறேன். நான் சொல்லச் சொல்ல என்னிடம் கருணை காட்டும் நர்ஸ் எழுதுகிறார். அன்று உங்களை முதல் தடவையாகப் பார்த்த போதே நான் என் பாவங்களுக்காக அழத் தொடங்கிவிட்டேன். அன்றும் அழுதேன். அதன் பிறகு ஒவ்வொரு தடவையும் அழுதேன். நீங்கள் வந்து என் கண்ணீரைத் துடைத்துவிட்டு 'அழாதே' என்று சொல்லித் தேற்ற மாட்டீர்களா என்று ஏங்கி ஏங்கி அழுதேன். எல்லாம் மனத்தோடு நின்று போன உறவில்தான். உண்மையில் உங்களைப் பார்க்கும் போதெல்லாம் பாவத்தின் நிழல்கூடப் படியாத உங்கள் குழந்தைத்தனம் பொங்கும் தெளிந்த கண்களைக் காணும் போதெல்லாம் நான் நடுங்கினேன். என் காற்றுக்கூட உங்கள் மேல் படக் கூடாது என்று ஒதுங்கினேன்... அப்படி ஒதுங்கி ஒதுங்கி, இன்று முற்றும் ஒதுக்கப்பட்டுப் பிடியிழந்து கிடக்கிறேன். நான் பாவி. கேவலம் எனக்கு மீட்சியே இல்லாமல் படு குழியில் தள்ளி மிதித்து விட்டது. அதனாலேயே என் கைகள் உங்களைத் தொடவே நடுங்கின. என் வாய் உங்களிடம் பேசவே அஞ்சியது. என் மனம் உங்களை நரகத்தில் ஆழ்த்தி விடக் கூடாதே என்று மாழ்கியது. ஆனால், இந்தக் கேவலப் பிறவிக்கு எத்தனை அற்புதமான, அப்பழுக்கற்ற இதயத்தில் இடம் கிடைத்தது! கொடுத்திருந்தீர்கள் நீங்கள்! அந்த ஒரு நிறைவே இப்போது எனக்கு அமைதி தருகிறது. என்று உங்களைப் பார்த்தேனோ அன்றே என்னை ஆளத் தொடங்கிவிட்டீர்கள். உங்கள் ஆளுகைக்கு உட்பட்டு விட்டேன் நான். அருகதையே இல்லாத என்னைத் தூய்மையே வடிவான உங்கள் நெஞ்சில் அமர்த்தியிருந்தீர்களே? என் பாவங்களுக்கு இதைவிடவும் ஒரு தண்டனை, இதைவிடவும் ஓர் உயர்ந்த பாக்கியம் கிடைக்க முடியாது. வெறும் குப்பை நான். அதில் வேர் பாய்ச்சிப் பூத்திருக்கும் ஒற்றைப் பூ நீங்கள். இந்தக் குப்பை அதன் வாசத்திற்கு வசப்பட்ட போதே அதன் தூய்மைக்

படிப்பகம்

www.padippakam.com



கும் துணை நிற்கச் சங்கல்பம் பூண்டது. இன்று வாழ்க்கையின் விளிம்பில் நின்றுகொண்டு கூட்டிக் கழித்துப் பார்க்கிறேன்: என் பூவுக்கு நான் என்ன செய்தேன், 'பித்து' என்று சொல்லிப் பெயர் சூட்டி மகிழ்ந்தது தவிர? என் உயிரே, இப்போது நான் எங்கே இருக்கிறேன் என்று தெரிந்தால் நீங்கள் வருவீர்கள். ஆனால், நான் தெரிவிக்கப் போவதில்லை. என்னைக்கடைசி வரை நீங்கள் பார்க்க வேண்டாம். என் மூச்சு நின்றதும் உங்களுக்குத் தந்தி வரும். உங்கள் ஒருவருக்கே தந்தி வரும். இப்போது நீங்கள் ஒருவர்தான் எனக்கு இருக்கிறீர்கள். உங்கள் நினைவே என் கடைசி மூச்சாக வெளிவரும்.

உங்கள் அன்பை சுவாசிக்கக்
கொடுத்து வைத்த,
மோகினி.

அதன் கீழ் மேலும் ஒரு கடிதம் தொடர்ந்தது.

என் மதிப்பிற்குரிய சகோதரருக்கு,

நர்ஸ் தேவகி எழுதுவது. இங்கு இவர்கள் படும் வேதனை நெஞ்சை உலுக்குகிறது. சதா உங்களைப்பற்றியே பேசிப் பிதற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் பிடிவாதமாக முகவரி தெரிவிக்க வேண்டாம் என்று மறுத்தாலும் என் மனம் கேட்கவில்லை. இவர்கள் அதிக நாள் பிழைக்கமாட்டார்கள். அதற்குள் நீங்கள் வந்து பார்த்தால் அவர்கள் ஆசை பூர்த்தியடையும். உங்கள் மடியில் மூச்சு பிரியும். கீழே முகவரி தந்துள்ளேன.

அன்புடன்,
தேவகி.

முகவரியைப் பார்த்தான். சென்னை பொது மருத்துவமனை குறிப்பிடப்பட்டிருந்தது. கடிதத்தின் தேதியைப் பார்த்தான். எட்டு நாட்களுக்குமுன் எழுதப்பட்டு



முன்பு அவன் வேலை பார்த்த இடத்துக்குப் போய் திரும்பி வந்திருந்தது.

உடனே கையிலிருந்த பணத்தையெல்லாம் திரட்டிக் கொண்டு சென்னைக்குக் கிளம்பிவிட்டான். ஆனால், இரயிலுக்காக ஒரு பகல் முழுதும் காத்திருக்க வேண்டியிருந்தது. அந்த நேரத்தில் அவன் பட்ட வேதனைக்கு எந்த எழுத்தாளனிடமும் சொற்கள் இருக்க முடியாது. எல்லா நினைவுகளும், "தெய்வமே, அவர்களுக்கொன்றும் ஆகியிருக்கக் கூடாது," என்ற புலம்பலோடு அவனில் சுழன்றன. கடைசியில் இரயிலில் ஏறி அமர்ந்ததும் அந்தப் பயணம் நெஞ்சைத் துளைத்துச் செல்லும் அம்புபோல உயிரைக் குடித்துக் கொண்டு தொடர்ந்தது. ஒரு மகா காவியத்தின் கிழிந்து சிதறிய கடைசிப் பக்கங்களைச் சிரமப்பட்டுத் திரட்டி, ஒழுங்காய் இணைத்து, அர்த்தம் கொடுக்க வேண்டும் என்ற ஆவேசம் அவனைத் தணலாய் எரித்தது. ஆனால், கடைசிப் பக்கங்களில் என்ன ஒளிந்திருக்கும் என்பது அவனுக்குத் தெரியவில்லை. அடுக்க அடுக்க சிதறுண்டு போகும் துண்டுகளில் அவனே கிழிப்பட்டு அர்த்தமில்லாமல் கரைந்து கொண்டிருந்தான்.

சென்னைக்கு வந்ததும் நேரே மருத்துவமனைக்கு ஓடினான். வார்டைத் தேடிக் கொண்டே விரைந்த போது அந்த வார்டிலிருந்து ஒரு நர்ஸ் வெளிவந்தாள். அவளை வழிமறித்து, "எக்ஸ்க்யூஸ் மீ, சிஸ்டர்.

படிப்பகம்

www.padippakam.com



நர்ஸ் தேவகியைப் பார்க்க வேண்டும்,'' என்றான்.

அவள் அடிப்பட்டுத் துவண்டவளைப் போல நின்று விட்டாள்.

"தேவகி நான்தான். நீங்கள்?...''

"நான் மோகினியைப் பார்க்க வந்திருக்கிறேன்.''

குப்பென்று அவள் கண்கள் சுரந்து விட்டன.

"வாருங்கள் அண்ணா. வாருங்கள். உங்களுக்குத் தந்தி கொடுக்கத்தான் புறப்பட்டேன். கடைசியில் வந்துவிட்டீர்கள்.''

"தேவகி!''

"ஆமாம், அண்ணா. சற்று முன்தான் ஆவி அடங்கியது.''

அவள் அவன் கைகளை ஆதரவாகப் பற்றியழைத்துக் கொண்டு போய் நிறுத்தினாள். அங்கே அமைதியாய்ப் படுத்திருந்தாள். அவன் தள்ளாடி, மண்டியிட்டு அவளுடைய சில்லிட்டுப் போன கால்கள் இரண்டையும் பற்றிக் கொண்டான். அவளைத் தொடுவது அதுதான் முதல் தடவை. நினைவில்லாமல் மயக்கமுற்ற அவனைத் தேவகி மெல்லப் பற்றி எழுப்பி, "எழுந்திருங்கள், அண்ணா. இப்படி வாருங்கள்,'' என்று தன் குடங்கையில் அணைத்தவாறு அழைத்துப் போய் சற்றுத் தள்ளி உட்காரவைத்தாள். அவன் சற்று நேரம் அந்தப் பெண்ணையே பார்த்தான். அவள் அழுது கொண்டிருந்தாள்.

அவனுக்கு அது உறைத்த போது, "பாடியை என்னிடம் கொடுத்து விடுங்கள் அம்மா. என்னுடைய நண்பர் ஒருவர் இருக்கிறார். அவருக்குச் சொல்லியனுப்ப வேண்டும்'' என்றான்.

தேவகி கண்களைத் துடைத்துக்கொண்டு அவனுடைய அறைத் தோழனுக்கு ஆள் அனுப்பிவிட்டு சடலத்தை அவனிடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகளை யெல்லாம் பம்பரம் போலச் செய்துவிட்டு, அவனிடம் வந்தாள்.

"நீங்கள் வராவிட்டால் பாடியை நானே பெற்றுக்கொள்ள எண்ணியிருந்தேன் அண்ணா. உங்களுக்கு நான் விலாசம் கொடுத்ததைச் சொன்னதும் ஒவ்வொரு வினாடியும் உங்களையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். உயிர் போகும் போது அவர்கள் கண்கள் வாசலைத்தான் பார்த்துக் கொண்டிருந்தன. இது முடிந்து போய் விட்டது. நீங்கள் மனதைத் தேற்றிக் கொள்ளுங்கள். நான் இன்று முழுவதும் உங்களோடேயே இருப்பேன்,'' என்றாள் அவள்.

அதற்குள் அவனுடைய நண்பனும் வந்துவிட்டான். அவள் இறந்துவிட்டாள் என்று கேட்டதும் அவனைப் பற்றிக் கொண்டு அழுது விட்டான்.

உடலை அவனிடம் ஒப்படைத்துவிட்டார்கள். அவன் தன் இருகைகளாலும் அவளைத் தூக்கிக் கொண்டுபோய் வண்டியில் கிடத்தினான். தேவகியும் அவனுடைய நண்பனும் அவனோடு வந்தனர். மயானத்தில் சடலத்தை எரிப்பதற்குரிய ஏற்பாடுகளையெல்லாம் தேவகியே செய்திருந்தாள். உடல் மயானத்திற்குச் சென்றது.

கட்டை மீது உடலைக் கிடத்தியாயிற்று. அவன் தன் சட்டைப் பையிலிருந்து உயிரை விடவும் மேலாகப் போற்றி வந்த அந்தக் கடிதத்தை எடுத்தான். அதையே குமட்டியில் பொருத்தித் தீ மூட்டினான். பிணத்தைக் கொளுத்திய நெருப்பைக்

படிப்பகம்

www.padippakam.com

கொண்டு கற்பூரத்தைக் கொளுத்திவிட்டதாக நினைத்தவன் இன்று உயிர் என்னும் கற்பூரத்தின் சுடரால் பிணத்துக்குக் கொள்ளியிட்டான். விறகு பற்றிக் கொண்டது.

“தேவகி, நாங்கள் இருவரும் தொட்டுக் கொண்டதே இல்லை. பேசிக் கொண்டது கூட இல்லை. நான் தொட்டதெல்லாம் அவர்கள் முந்தானையைத்தான். பெற்றதெல்லாம் ‘பித்து’ என்ற சொல்லைத்தான். இனறு என் கை நிறைய அள்ளி எடுத்துக் கட்டையில் ஏற்றிக் கொள்ளி வைத்துவிட்டேன். நண்பரே, முதனமுதலில் இவர்களின் பார்வை என்னைத் தீயின் நாக்குகளாய்த் தீண்டிய போதே, நான் புடம் போடப்படுவதற்குத்தான்-உடன் சேர்ந்து எரிவதற்கல்ல என்று தீர்மானித்துவிட்டார்கள். இந்த அபூர்வ பந்தம்தான் எங்களின் விடுபட முடியாத நேசம். இவர்களோடு நான எத்தனை ஜென்மங்கள் வாழ்ந்திருந்தேன் எனறு இப்போது விளங்குகிறது. இந்த ஜென்மத்திலும் வாழ்ந்து விட்டேன். இந்த ஜென்மத்தில் மட்டும்தான் நாங்கள் ஆன்மசுத்தத்தோடு வாழ்ந்திருக்கிறோம். எங்கள் உடல்கள் இந்த வாழ்க்கையில் வெறும் ஜடங்களாய் ஒதுங்கி விட்டன. இந்த அற்புதங்களையெல்லாம் நிகழ்த்திவிட்டு, என்னைத் தனியே நிறுத்திவிட்டு அவர்கள் போய்விட்டார்கள். நான் இருக்கிறேன்.”

பித்து அவனைப் புலம்ப வைத்தது. புலம்பினான். ❖

**கனிதாசரன்**



## விட்டுச் செல்ல...

ஒரு மரம்
ஒரு புத்தகம்
ஒரு இயக்கம்—
எதையேனும் விட்டுச்சென்று
யாருக்கேனும்
நிழல் கொடுக்கத்தான்
எனக்கும் ஆசை.
ஆனால்,
என் கால்களுக்குக் கீழே
பூமி ஓடிக் கொண்டிருக்க
விழுந்து எழுந்து
ஓடி ஓடி என்
இருப்பைத் தக்கவைப்பதே
இயல்பாகிப் போனது.
எனது விதைகள்
யாருக்கோ தீனியாயின.
என் எழுத்துகள்
பலகாரக் கடைக்குப்
பொட்டலமாயின.
என் தத்துவங்கள்
வாழ்க்கையின்
சுழல்களில் சிக்கி
மூச்சுத் திணறின.
இருந்தும்
எதையேனும் நிலை நிறுத்த
வாழ்வியலின்
இறுக்கத்தைக் கிளறி,
கிடைக்கிற
புன்னகைகளை நான்
சேமித்து வைக்கிறேன்
நம்பிக்கைகளாய்
விட்டுச் செல்ல...

**கே. ஜெகதீஷ்**

படிப்பகம்

www.padippakam.com

# எனக்கு வெளியே ஒரு கனவு

அற்புதங்களின் காலம்
முடிவதில்லை.

எனக்கு வெளியே ஒரு கனவு.

இப்படி நடந்ததாக
எவரும் அறிந்ததில்லை;

ஒருவனுடைய கனவு
அவனுக்கு வெளியே
நிகழ்கிறதென்பது.

சூரிய ஒளியும்
பெட்ரோல் வாடையும்
அதன்மீது படிகிறது.

நீங்கள் அதைக்
கடந்து செல்கிறீர்கள்.

தெரிந்தவர்கள்
நின்று புன்னகைக்கவும்
தொட்டுணரவும் கூடும்.

நான் அங்கே
இருக்கிறேனா
இல்லையா?

தெளிவாகத் தெரியவில்லை.
கனவுகள் எப்போதும்
தெளிவானவையல்ல.

ஆகாயத்திலிருந்து
விழுந்துகொண்டிருப்பவனாகக்
கட்டில்லாமல்
அதைச் சிந்திக்கிறேன்.

செய்வதற்கு ஒன்றுமில்லை.
கனவின் முன்
யார்
என்ன செய்யமுடியும்?

வேடிக்கை என்னவெனில்
யாரும் அதைப்
புகைப்படம்கூட எடுக்கலாம்.

குறித்துக் கொள்ளுங்கள்.

படிப்பகம்

www.padippakam.com



கனவைப் படம் பிடிக்கும்
கருவியை ஒருவரும்
இதுவரை கண்டுபிடிக்கவில்லை.

வேறு வழியின்றி
அத்தகையதோர் கனவைக்
கண்டுபிடித்தேன்.

தயவு செய்து
என்னைச் சந்தேகிக்காதீர்கள்.

எனக்கு வெளியே உள்ளதால்
அது கனவேயில்லை என்று
நிரூபித்துவிடாதீர்கள்.

கனவை விட
அந்தரங்கமாய்,
தனிப்பட்டதாய்,

நினைவையும் காலத்தையும்
கைப்பற்றிச் செல்வதாய்,

ஒன்றே ஒன்று
படர்ந்துவிடின்
வேறென்ன பெயரிடுவது?

என் கனவில் சகுனம்
நல்லதானால் என்ன?
தீயதானால் என்ன?

பிம்பமும் ரூபமும் உரசி
நெருப்புண்டாக்குபவன் நான்.

மேலும்–
அந்த அதிசயக் கனவு
என்னவென்று உங்களுக்கு
சொல்ல மாட்டாதவனாய் இருக்கிறேன்.

என் கனவு
என்னதான் வெளிப்படையானதெனினும்
அது ஓர் ஊமைக் கனவு.

யுகம் யுகமாய்
என்னைப் போலவே பலரும்
வெளிப்படுத்த முடியாமல் போன கனவு.

**மனுஷ்யபுத்திரன்**

படிப்பகம்

www.padippakam.com

# ஒரு சக மனிதனின் முறையீடு

**என் படுக்கையறையில் யாரோ ஒளிந்திருக்கிறார்கள்**
(கவிதைகள்)
—மனுஷ்யபுத்திரன்—
சவுத் ஏஷியன் புக்ஸ்
தாயார் சாஹிப் தெரு,
சென்னை- 600 002.

வீட்டுக்கதவு எப்பொழுதும் தட்டப்பட்டுக் கொண்டே இருக்கிறது; படுக்கையறையில் கூட யாரோ ஒளிந்து கொண்டிருக்கிறார்கள்; கழிப்பறையில் வெகுநேரம் ஒளிந்து கொள்ள வேண்டியிருக்கிறது; அக்கறையின்மையால் நிகழும் அவலங்கள் எங்கெங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றன. மனம் நிர்வாணமாய் இருப்பதே குற்றமாகக் கருதப்படுகிறது; எதற்கும் சிரித்து மழுப்பும் போலிகளே திரிந்து கொண்டிருக்கிறார்கள். ஹமீது (மனுஷ்யபுத்திரன்) காணும் புற உலகம் இப்படித்தான் இருக்கிறது. இதில் முரண்படுவதற்கில்லை.

இந்தப் புற உலகக் கொடுமைகளால், மனச்சுமை எப்பொழுதும் இவரை அழுத்துகிறது; வாழ்வுக்காக ஏங்குகிறார்; இதயங்களை உள்ளங்கைகளில் வைத்து வேடிக்கை காட்டும் கொடுமை அழிய வேண்டும் என்று சஞ்சலப் படுகிறார்; இடிந்து கிடக்கிறார். கொடுமைகளை நசுக்கிச் செல்லும் தேர்கள் கொடிகளோடு கம்பீரமாய் விரைந்தோடுவதை மனவுலகில் காண்கிறார். இதன் மூலம் இதயப் பாதையைச் சுத்தம் செய்ய விரும்புகிறார். தன்னால் வெற்றிடத்தில் வாழ முடியாது என்று முரண்டு பிடிக்கிறார்; அந்த இடத்தை எப்படியாவது நிரப்பி விடவேண்டும் என்றும் துடிக்கிறார். பாதுகாப்பற்ற திறந்த இதயத்தோடு இருப்பவர்களை, சாவித் துவாரங்களில் கண்களை வைத்துப் பார்ப்பவர்களிடம் 'தயவு செய்து கண்களை எடுத்து விடுங்கள்; ஏனென்றால் திடீரெனக் கூரிய ஊசி வந்து குத்தி விடக்கூடும்' என்றும் கேட்டுக் கொள்கிறார்.

தன்னை இவ்வுலகம் பொய்யனாக்க முயலுவதைச் சொல்கிறார். பாதுகாப்பற்ற மனச் சூழலில் தன்னை வாழ நிர்பந்திக்கும் தன்மையைக் காட்டுகிறார்; மற்றவர்களுக்காகத் தானே முடிவு எடுக்கும் கொள்ளை நோய் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பதைச் சொல்கிறார். தன்னை நிர்வாணமாய் அசுத்தமற்று வாழவிடுங்கள் என்று கூக்குரல் போடுகிறார்.

குழந்தையின் மனசைப் போல் இவரது சொற்கள் வெளி

நூல் நலம்

படிப்பகம்

www.padippakam.com



வருகின்றன. அதில் தனது குழந்தை என்ற தன்னலம் இல்லை. குழந்தையின் இயல்பு இருக்கிறது. எல்லாம் தனதாகிப் போன சூழலில் குழந்தையாய் இருப்பது அபூர்வம் அல்லவா? இவர் எல்லோரையும் அறிந்து கொள்ள ஆசைப்படுகிறார். பொம்மைக் கடைக்குள் சென்ற குழந்தையின் துறுதுறுப்போடு அந்த ஆசை இருக்கிறது. துறுதுறுப்பும் தவழ்தலும் சேர்ந்த குழந்தை உணர்வாய் சொற்கள் வெளிப்படுகின்றன. ஆனால் இப்படித் தவழும் குழந்தையின் முன் பளபளக்கும் வாளோடு நின்று வேடிக்கை காட்டுபவர்களாக நடித்து, கொன்றுவிட அல்லவா துடித்துக் கொண்டிருக்கிறார்கள்?

இவரது வெளிப்பாட்டில் 'நான்', 'நீ' என்பவை நிர்வாணமாய் இருக்கின்றன. ஏகாந்தமாய் இருக்கின்றன. அதிகாரமற்று இருக்கின்றன. அடுத்தவர் காலால் நடக்கும் ஒருவனின் பாதை எது? பயணம் எது? என்று கேட்கிறார். இக்கேள்வியில் பொருள் இல்லை. ஏனென்றால் அடுத்தவர் காலால் நடக்கும் வாழ் முறையைக் கூட நீங்கள் உங்கள் காலால் நடக்கும் சக்தியாக மாற்றிக்கொண்டிருக்கிறீர்கள். கால் உள்ளவர்கள் எல்லாம் அடுத்தவர் காலில் நடக்கும் இந்தச் சூழலில், உங்களின் கம்பீரம் யாருக்கு வரும்? இது பெருமிதம் கலந்த கம்பீரம் அல்லவா?

இப்படியாக ஹமீது பேசும், காட்டும், குரல் எழுப்பும், எரிச்சல் படும், அமைதியற்றுத் துடிக்கும் வெளிப்பாடுகள் எதார்த்தமானவை. வெறும் சுய அரிப்பு வெளிப்பாடில்லை. வார்த்தைப் போலித்தனம் இல்லை; கவிஞர் பட்டம் பெறச் செய்யும் அருவருப்பான தொழிலும் இல்லை. அச்சு ஊடகம் வழி வெளியாகும் இலக்கியம் என்று சொல்கிறார்களே, அதுவும் இல்லை. மாறாக ஹமீது என்ற மனிதனின் நிர்வாண வாழ்க்கை, அவனது செயல்பாடுகள், இயக்கம் ஆகியவற்றின் பதிவு செய்யப்பட்ட காட்சிகள். வசதிக்காகக் கவிதை என்றும் இலக்கியம் என்றும் சொல்லிக்கொள்ளலாம். மனிதனின் இருப்பு, வாழ்க்கை என்ற ஊடாட்டங்களின் காட்சிப் படிமம், "என் படுக்கையறையில் யாரோ ஒளிந்திருக்கிறார்கள்" என்ற அடையாளத்தோடு வடிவம் பெற்றுள்ளது.

'தனக்குத் தானே பேசுதல்' என்ற தனது மனநோய்க் கூறின் ஒழுங்குபடுத்தப் பட்ட வடிவமாகத் தனது கவிதைகள் இருப்பதாக இவர் முன்னுரையில் கூறுகிறார். கண்ணாடி அறைக்குள் இருந்து எழுப்பும் கத்தல் என்றும் சொல்லிக் கொள்கிறார். இவரது வெளிப்பாடுகள் அப்படியில்லை என்பதுதான் உண்மை. கவிதை என்ற ஊடகம் அடிப்படையில் உணர்வுகளின் வடிவம். உணர்வுகளின் நிர்வாணம் முக்கியம். கோபம் முக்கியம். அழுகை முக்கியம். இதுவே வாழ்க்கை. இதில் எவ்வகையிலும் ஹமீது வெளிப்பாடுகள் மாறுபடவில்லை. இதனை மனநோய்க் கூறாக எப்படி கூறமுடியும்? ஒரு மனிதனை அவனது எதார்த்தங்

படிப்பகம்

www.padippakam.com



களோடு காண மறுத்து, வறட்டு கூச்சல் போடும், அழுகையை மதிக்கத் தெரியாத பிண்டங்கள் மிகுதியாக உள்ள சூழலில் வாழ வேண்டிய நிர்பந்தம் இருப்ப தால், தன்னிரக்கமாய் இப்படிக் கூறுகிறார் என்று நினைக்கத் தோன்றுகிறது. ஆனால், இவரது வெளிப்பாடுகள் அநுபவ உணர் வின் நிர்வாணத்தோடு, சமூக இயக்கம் குறித்த பிரக்ஞை யோடும் வாழும் மனிதர்களுக்கு சமூகம் குறித்த ஆழமான எதிர் விளைவை உருவாக்கும் என்பது தான் எதார்த்தம். இவரது படைப்பை நுகரும் அநுபவம், சமூக அவலங்களைக் காட்சிப் படுத்துகிறது; படிமங்களாய் மனசில் பதிந்து சுமையாகிறது.

தமிழகப் பண்பாட்டுச்சூழல் நச்சுத் தனங்களின் ஆதிக்க புரி யாய் இருக்கிறது. பிழைப்பு அர சியல்வாதிகள், தொண்டர்கள்-இரசிகர்களின் அறியாமையை வியாபாரம் செய்கிறார்கள். போலித்தனம், இரட்டை வாழ்க்கை என்ற நோய்களில் கடுமையாகத் தாக்கப்பட்டுள் ளார்கள். தனிவாழ்க்கையில் பார்ப்பனீய ஞானத்தோடு இருந்துகொண்டு, அச்சுக்காகக் கவிதை எழுதுகிறார்கள். ஊட கங்களில் விளம்பரத்திற்காக, வெற்றுச் சொற்களை அக்னிச் சொற்கள் என்று பிதற்றும் நவீன பார்ப்பனீயர்களும் கவிதை எழுதுகிறார்கள். இத னால் காமப்பசியில் 'புரட்சி' செய்து கொண்டு நடைமுறை வாழ்வில் லும்பன் தன்மைக ளோடு வாழும் அவலம் உள் ளது. இவர்களது எழுத்துக் களை நவீன மோஸ்தர் பார்ப் பனீய ஏடுகள் வெளி யிடுகின்றன.

இந்தப் பின்புலத்தில் தனி வாழ்க்கை நேர்மையோடு, நிர் வாணமாய், குழந்தையாய், ஆழ மான கோபம், சோகம் எல்லா வற்றோடும் தன்னை வெளிப்ப டுத்தும் ஹமீது படைப்புகள் மிகுந்த மரியாதைக்குரியவை. இங்கு இன்னொன்றையும் கவ னத்தில் கொள்வது அவசியம். தமிழக எழுத்து வணிகர்கள் தமது போலித் தனங்களை நியாயப்படுத்திக் கொள்ள, இவ ரது உணர்வு வெளிப்பாடுகளை வெறும் வெளிப்பாடுகளாக— ரசித்துச் சிலாகிக்கும் டி.கே. சிக் கள், சொட்டும் ரசபாவத்தைப் பிடிப்பதற்குப் பாத்திரத்தோடு நிற்பவர்கள். இப்படிப் பட்டவர் களின் வாசிப்பை கவனமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஈழத்தின் போராட்டம்— அங்கு வாழ்க்கையையும், படைப் பையும் ஒன்றாக்கி உள்ளது. 'சேரன்'கள் இன்றைய தமிழ்க் கவிதையின் ஒட்டு மொத்த வடி வமாய்க் காட்சியளிக்கிறார்கள். ஒரு தனிமனிதனின் நேர்மை யான வெளிப்பாடும் மேற் குறித்த போராட்ட வாழ்க்கைக் குரிய மரியாதை பெறத்தக்கது தான். இவ்வகையில் ஹமீது படைப்புகள் நேர்மையானவர்க ளின் உணர்வுகளோடு ஐக்கியப் படும், அடையாளம் கொள்ளும் தன்மைகளைப் பெற்றிருக்கின் றன. எழுத்தாக இல்லாமல் வாழ்க்கையாக இருக்கின்றன.

டாக்டர் **வீ. அரசு**

படிப்பகம்

www.padippakam.com

# தாய் மொழியும் தந்தை மொழியும்

மா. அரங்கநாதன்

வடமொழி இலக்கியங்களில் நர்மதை ஆற்றின் தெற்கேயுள்ள இடம் மனிதர்களே இல்லாத பிரதேசம் போல் ஒரு படம் காட்டப்படுகிறது. தெற்கே வேடர்தாம் இருந்தனர்—அதாவது மலைவாழ் மனிதரேயன்றி வேறு நாகரிகம் கிடையாது என்று சொல்லப் படுகிறது. இதைப் போன்ற பைத்தியக்காரத் தனமான வாசகங்கள் எல்லா மொழிகளிலும் உண்டு. இலக்கியம் வரலாறல்ல. உலகைச் சுற்றி வந்தான் என்று அந்தக் காலத்தில் எழுதப் பட்டிருந்தால், எந்த இடங்களுக்கெல்லாம் என்ற கேள்விக்கு வரும் பதில் சைப்ரஸ், ஏதென்ஸ் என்பதுதான். கோசல நாட்டைச் சுற்றி வருவதுதான், உலகம் சுற்றி வருவது. அமெரிக்காவையும் சேர்த்து அல்ல என்று நமக்குத் தெரியும். தசரதனும் உலகை ஆண்டான். ஜனகனும் உலகை ஆண்டான். இருவரும் பக்கத்து நாட்டுக்காரரர்கள். ஒரே காலத்தில் வாழ்ந்ததாகச் சொல்லப்படுபவர்கள்.

ஒரு நாட்டைச் சுற்றிக் காடு இருக்கலாம். அந்தக் காலத்தில் இங்கே தெலுங்கு நாட்டிற்குப் பக்கத்தில் இருந்த தமிழ்ப் பகுதி அருவா நாடு. எனவே தெலுங்கர், தமிழ் நாட்டுப் பகுதிகள் எல்லாவற்றையும் அரவாடு என்றழைத்தது தெரியும். நர்மதை ஆற்றின் தெற்கிலும் காடுகளும் மலைகளும் குரங்கும் புலியும் இருந்தால் ஒரு வடமொழி இலக்கியக் கர்த்தாவுக்கு விநோதமான நாடாகத் தோன்றும். தென்திசை எல்லாமே அவ்வாறுதான் தெரியும். இது ஒருவனது நாட்டுப் பற்றோடு கலந்த சங்கதியும் கூட.

தமிழிலக்கியத்திலும் அவ்வாறுண்டு. "ஆரியர் கயறு ஆடு பறையின் கால் பெறக் கலங்கி" என்ற குறுந்தொகை வரிகள், நர்மதை ஆற்றின் வடக்கேயிருந்த ஆரியர் அல்லது புதிதாய்த் தோன்றிய கலப்பின்த்தார் யாவருமே கழைக் கூத்தாடிகள் என்ற பொருளைத் தரும். வேதத்திலும் ஸ்மிருதிகளிலும் சொல்லப்படுவது மாதிரிதான். வரலாறாக எடுத்துக் கொள்ள முடியாது. சமஸ்கிருதம் என்ற பாஷை காற்றிலிருந்து மூக்கால் இழுக்கப்

படிப்பகம்

www.padippakam.com



பட்டு, அந்தக் காலத்து ரிஷிகளால் நாக்கால் வெளியிடப் பட்டது என்று கொண்டாடும் நபர்கள் அதை ஓர் இலக்கிய உத்தியாகக் கொள்ள இணங்குவதில்லை. இப்படிப்பட்ட நபர் கள் 'கல் தோன்றி மண் தோன்றா காலத்து' என்ற தமிழ்ப் பெருமை பேசும் வரிகளைக் கேட்டுவிட்டால் முகம் சிவந்து போவார்கள். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் பெயரைச் சொல்லிவிட்டால் விமர்சகர் வெங்கட் சாமிநாதன் எப்படிக் கொதிப்பார் என்று தமிழர்களுக்குத் தெரியும். சந்திரகுப்தன் போன்றவர் பெயர்கள் எல்லாம் அவருக்கு சாந்தியைத் தரும். தமிழ் நாட்டில் வேண்டுமானால் மகேந்திர பல்லவனைச் சொல்லுங்கள். இப்படி கரிகாலன், நெடுமுடிக்கிள்ளியின் பெய ரெல்லாம் சொல்லிப் பெருமைப் பட்டுக் கொள்கிறீர்களே—கெட்டுப்போகிறீர்களே என்று வருத்தப்படுவார் சாமிநாதன். அவர் வருத்தப்படுவது நியாயம். அதுதான் தந்தைமொழி தாய்மொழி விஷயம்.

ஓர் இனத்தோடு இன்னொரு இனம் கலந்து, புதியதோர் இனம் உண்டாவது எந்த வகையிலும் குறைபட வேண்டியது அல்ல. உலக நாகரிகங்கள் யாவும் அப்படித்தான் தோன்றியி ருக்க முடியும். ஆரியர் என்பாரும் பல இடங்களுக்குப் பரவிச் சென்றவர்தாம். ஆனால், இங்கு மட்டுந்தான் புதிதாய் ஏற் பட்ட இனமானது, சாதி என்ற வேறுபாட்டைக் கொண்டு நிற்கிறது. உலகில் வேறு எங்கிலும் கலப்புத் திருமணங்கள் (ஆரியரால் ஏற்பட்ட) பிரிவை உண்டாக்கியதில்லை. இனக் கலப்பை பெருமையோடு பேசித் தம் தம் குலத்தை விளக்கிக் கூறுவது மேல்நாட்டில், குறிப்பாக ஐரோப்பிய இனத்தவரிடை சகஜம். 'என் தந்தை பிரஞ்சு – தாய் ஓர் ஆங்கிலமாது' என்று ஒருவன் கூறுவது அங்கே சகஜம். இரண்டு மொழிக்காரரும் இலத்தீனையும் கிரேக்கத்தையும் பண்டை மொழிகளாக ஏற் றுக் கொண்டவர். அதே போன்ற நிலை இங்கு எந்நாளும் இருந்ததில்லை.

"எழுதாக் கற்பின் நின் செல்லுள்ளும்"

என்று வருகிற குறுந்தொகை வரிகள் பார்ப்பனப் பாங்கனை முன்னிறுத்திச் சொல்பவை. சங்க காலத்தில் பார்ப்பனர் இருந் தனர் என்பது மட்டுமல்ல யவனரும் இருந்தனர். பார்ப்பனச் சேரி போல யவணர் சேரியும் உண்டு. அவர்களுக்கும் மொழி இருந்திருக்கிறது. அந்தந்த மொழியைச் சுட்டிக் காட் டிச் சொல்லும் போது ஒருவன் 'நின் சொல்' என்றுதான் சொல்லுவான்.

படிப்பகம்

www.padippakam.com



சங்க காலத்தில் கோவில் இல்லை. சமஸ்கிருத மொழியைத் தங்களது தந்தை மொழியாகவோ தாய் மொழியாகவோ பேணிய பார்ப்பனர் இருந்தனர். பின் எந்த விஞ்ஞான உண்மையை அடிப்படையாகக் கொண்டு பார்ப்பனர் இங்கே கோவில்களைக் கொண்டு வந்தனர் என்று சொல்ல முடியும்? அப்படி எதுவும் நடக்கவில்லை. பார்ப்பனர் எவரும் இங்கே ஆரியராக வந்து சேரவில்லை. காளிந்தர்—புளிந்தர் போன்ற திராவிட இன மன்னர்கள் ஆரியப் பெண்களை மணந்ததால் தென்னகத்தில், முதலில் கொங்கணத்தில் ஓர் கலப்பு இனம் தோன்றியது. இந்தத் திராவிட இன மன்னர்களுக்கும் விசுவாமித்திரருக்கும் சம்பந்தம் உண்டு என்று கூறுவோரும் உளர். இந்தக் கலப்பினம் அரசர் மூலம் தோன்றியபடியால் செல்வாக்கும் பெற்றிருந்தது. அரசர்களுக்கு யோசனை சொல்லவும் அவர்கள் சிறிது காலம் பயன்படுத்தப் பட்டிருக்கலாம். அவர்கள் எந்தத் தொழிலையும் செய்யவில்லை. அரண்மனையிலேயே உணவு கிடைத்தது. அரண்மனையானது மக்கள் வணங்கும் கோவிலாக பிற்காலத்தில் மாற்றமடைந்த போது, அவர்கள் அந்தக் கோயிலின் மடப்பள்ளியிலேயே வேலை செய்தனர். கருவறையில் பூசனை செய்தது அறிவர்—ஆதிசைவர் என்னும் மருத நில மக்கள். மன்னர்களிடமுள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி, பின்னர் பூசனை உரிமையைப் பெற்றனர். (பார்க்க: கே. கனகசபையின் தென்னிந்திய வரலாறு, டி. கே. சி. கடிதங்கள், ஐதரேய பிரம்மாணம்) நாற்பதுகளில் சென்னை அரசுப் பணியில் இருந்து இப்போது ஓய்வு பெற்றிருக்கும் பெரியவர்களுக்குத் தெரியும், அவர்கள் காலத்தில் ஆங்கிலோ-இந்திய இனத்தைச் சேர்ந்த ஒருவர் தொலைபேசி இயக்குபவராகவோ, காவல்காரராகவோ பணியிலிருந்தால் அவர்களுக்கு 15 ரூபாய் சிறப்புச் சம்பளம் உண்டு. இது ஆங்கில அரசு ஆங்கிலோ- இந்தியர்களுக்கு அளித்து வந்த சலுகை. இனத்திற்காகவே அளிக்கப்பட்ட சலுகை. இப்போது அது இல்லை. அரசர்களும் அரசும் சலுகை அளித்தால் யார் கேட்க முடியும்?

சங்க காலத்திலே பூசனை இருந்தது.

''நடுகற் பீலி சூடி துடிப்படித்து'' என்ற வரிகள் அக்கால முறையைக் காட்டும். நல்லது. நடு கல்லைத்தானா மன்னன் வணங்கினான்? வேறு விக்கிரக ஆராதனை இருந்ததா? மந்திரங்கள் இருந்தனவா? இப்போது இருக்கும் முறை, கோவிலில் சமஸ்கிருத மந்திரம் ஓதுதல் — எப்போதும் இருந்த ஒன்றா? இங்கே வணங்கப்பட்ட கடவுளர் ஆரியராலும், அதாவது இந்தோ-ஆரியாலும் மதிக்கப்பட்டனரா? ஆரியர்க்கு விக்கிரக ஆராதனை இருந்ததா? திருமணத்தில் சொல்லப்படும் மந்திரங்கள் தமிழ்நாடு சம்பந்தப்பட்டதுதானா?

படிப்பகம்

www.padippakam.com



"இந்தப் பெண் என்னைக் கொல்லாதிருப்பாளாக ஏ வைவஸ்துவே" என்று மணமகன் தனது திருமணத்தில் சொல்ல வேண்டிய மந்திரத்திற்கு இங்கே ஏதாவது காரண காரியங்கள் உண்டா? எல்லாவற்றிற்கும் மேலாக தென்னாட்டைப் பற்றிய குறிப்புகள் வேதங்களில் இருக்கின்றனவா?

இக் கேள்விகளுக்கெல்லாம் 'இல்லை' என்றே பதில் சொல்லிவிடலாம். 'சேர' என்ற ஒரு சொல் வேதத்தில் வருவவதாகக் கூறி சொந்தம் கொண்டாட முனையும் நபர்கள்-ஆராய்ச்சியாளர் கூட இச்சொல் 'சாரை' என்றே ஒப்புக் கொள்கிறார்கள். சாரை என்றால் தமிழில் பாம்பு. நர்மதை நதியின் தெற்கேயுள்ளவர்கள் நாகர்கள். அவர்களோடு எந்த வித சம்பந்தமும் வைத்துக் கொள்ளாதீர் என்ற பிற்கால பிரமாணங்களுக்கு ஆதி இச்சொல்தான்.

ஆனால் தென்புலம், தென்னாடு ஆகிய சொற்கள் வழக்கத்தில் இருந்து வந்திருக்கின்றன. 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்று மணிவாசகர் பாடுகிறார். அப்படியானால் வடநாடு என்று இருந்திருக்க வேண்டுமல்லவா என்ற கேள்வி எழுகிறது. தென்னிந்தியா — தட்சிண பாரதம் போன்றதல்ல இது. தென்பாண்டி என்று இருப்பதால் வடபாண்டி இருக்கிறது என்று ஆகாது. பாண்டிய நாட்டின் பெயரே தென்பாண்டிதான். மேலும் இது இந்தியா - பாரதம் என்ற பெயர்கள் புழக்கத்திற்கு வருவதன் முன்னேயுள்ளது. இது திசையைக் குறிக்கும் சொல் அல்ல. தென்னாடு முத்துடைத்து தொண்டை மண்டல நன்னாடு சான்றோருடைத்து என்ற பிற்காலத்து ஔவையார் பாட்டிலும் தென்னாடு பாண்டிய நாட்டையே குறிக்கிறது. அப்படியானால் தொண்டைமண்டலமும் சோழ நாடும் மலை நாடும் தென்னாடு இல்லையா என்றால் எதனுடைய தெற்கு என்ற எதிர்க் கேள்விதான் எழும். இலங்கை ஆஸ்திரேலியா எல்லாங்கூட தென்திசைதான். இந்தியா என்ற ஒரு நாடிருந்து அந்த நாட்டின் தென்னாடு என்றால் வேறு விஷயம். அப்படியில்லை. தென் என்பது திசையை மட்டும் குறிக்கும் பொருள் கொண்டதல்ல. 'தென்' என்றால் தோன்றும் ஒளி என்றும் பொருள். எடுத்துக்காட்டு: தென்படுவது, தென்பட்டான். தானாகத் தோன்றும் ஒன்று. நாமாக முயன்று கண்டதல்ல என்றெல்லாம் பொருளும் உண்டு. 'தென்புலம், தென்னன், தென்னாடு' எல்லாம் அந்தப் பொருளைக் கொண்டு நிற்பவைதாம். (இன்னும்)

படிப்பகம்

www.padippakam.com

# விக்ரமாதித்யன் கவிதைகள்

## 1

அந்த ஐ.பி.எஸ். அதிகாரிக்கு
இருபத்தேழு ஆர்டர்லிகள்.

மாடு
குளிப்பாட்ட ஒருவர்;

காய்
கறி வாங்க இன்னொருவர்;

வீடு
பெருக்க வேறொருவர்;

பிள்ளைகளைக்
கான்வென்ட் கூட்டிப்போக மற்றொருவர்;

மளிகைக் கடை
போய்க்கொண்டிருப்பார் பிறிதொருவர்;

சாப்பாடு
கொண்டுபோய்க் கொடுத்துவருபவர்
அடுத்தொருவர்;

தேனீர்
போட்டுத் தருவார் ஏழாவது மனிதர்;

பாரா
நிற்பார் எட்டாமவர்.

விருந்து
உபசரிப்பார் வளர்ந்த ஆள்;

ஊர்
சுற்றிக் காண்பிப்பார் நகரவாசி;

கார்
ஓட்டுவார் பதினோராமவ;

தண்ணீர்
ர்பிடித்துத் தருவார் தடிமனானவர்;

காக்டெய்ல்
கலக்க விவரமானவர்;

இருபத்தேழு ஆர்டர்லிகளுக்கும்
ஏராளமாய் வேலையிருக்கும்;

சட்டம் ஒழுங்கை
சங்கடமின்றிப் பராமரிக்கிறார்
நமது ஐ.பி.எஸ்.

படிப்பகம்

www.padippakam.com

## 2

வீடு இருக்கிறது
வெளியில் திரிகிற எனக்கு.

பிள்ளைகளைத் தேடுகிறது;
பெற்றவள் கவலை உறுத்துகிறது;

பட்டணத்துக்கு என்று
பாவியவன் நேர்ந்துவிட்டது.

பாவம் மனசு படும்பாடு.
பரிதாபம் ஒருசாபம் வாழ்வு.

நாணலாய் வளையத் தெரிந்தது;
நதியாய் வழிதேடப் புரிந்தது.

பத்தினியின் பேதம் கவிந்தது;
பைத்தியமாய் அலையும்படி ஆனது.

ஒரு கவிஞன் இருப்பு
உறியடித்திருவிழாப் போலானது.

ஆயிரம் தெய்வங்களைக் கும்பிட்டது
அர்த்தமில்லாமல் அழிந்தது.

சூன்யப்பெருவெளி பிடிபட்டது;
சுதந்திரச் சிந்தனை தொலைந்தது.

கொஞ்சம் கவிதை மிஞ்சியது;
கொண்டாடும் அன்பு எஞ்சியது.

எல்லாம் நடந்து முடிந்தது;
எதிர்பார்த்திருப்பது நல்லசாவு.

கவிதையல்ல இது; கொந்தளிக்கும் மனசு:
கஷ்டங்களைக் கொட்டிவிடும் எத்தனிப்பு.

## 3

சொன்னதைச்
சொல்லும் கிளிப்பிள்ளை.

சொன்னதையே
சொல்லிக்கொண்டிருக்கும் குடிகாரன்.

திரும்பத் திரும்பப்
பேசுகிறான் பைத்தியக்காரன்.

மாறி மாறி
எழுதுகிறான் கலைஞன்.

பழக்கம், போதை,
பித்து, பரவசம்,
தாங்கும்
உலகம்.

படிப்பகம்

www.padippakam.com

*ஆணாதிக்க சாகசங்கள் பெண்ணை என்னதான் ஈன மானம் இல்லாத பிறவியாக மலினப்படுத்தட்டுமே. அவள் தன்னை அன்னைாய் உணரும்போது வெல்லற்கரிய சிகரமாகத்தான் ஓங்கி நிற்கிறாள். உருகும் பனிமலையாகத்தான் உருவகம் கொள்கிறாள் சிகரத்தை வெல்வது சில கணங்களுக்கான சாதனையாகலாம். ஆனால், மீதி யுகாந்தரத்துக்கும் அதன் அடிவாரத்தில் நின்று அண்ணாந்துதான் பார்க்க வேண்டும். இந்தக் கதையில்— சொல் கிடக்கட்டும். சிகரம் தேடலாம்*

# ரெண்டு ரூபாய் தீர்றவரைக்கும்



"டேய்...ஆம்பிளைங்களா... கயவாளிப்பயலுவளா. கேளுங்கடா. கேளுங்க. எம்புள்ளய காணும். குழாப்பாண்ட் போட்டுகினு குஜாலா போறியே, நீ கேளு. ஆளாளுக்கு ஏய்க்கறானுவடா. நீ யார ஏமாத்துன இன்னிக்கு? எவ மாட்டினாடா? இன்னாடா, இஞ்சினியரு. அய்பிரு தானே நீயி? மொழுமொழுன்னு தவுக்கள கணக்கா மெதுமெதுனு இருக்கிற இல்ல? உனக்கின்ன, பணம். பணமிருக்குது உன் கிட்ட. என் கிட்ட என்ன இருக்கிது? ரெண்டு தொங்கிப் போன மாருங்க. கருப்பா வெடவெடனு ஒரு உடம்பு இருக்குது. அப்புறம் உனக்குத் தெரியுமாடா, ரெண்டு ரூபாய் இருக்குது என் கிட்ட. எப்பிடி வந்திச்சினு கேக்காத. உம் மானம் பூடும்.

ஏ சேட்டுப்பையா. நீ நிம்மதியா பீடா போட்டுகிட்டு, தராச பாத்தே பணக்காரப்பயலாய்ட்ட. வட்டிக்கடையா, புட்டிக்கடையா? உம் பொண்டாட்டி போண்டா மாதிரி உப்பிட்டா. உம் பொண்ணு மூக்காடு போட்ட நெலா வாட்டமா செக்கச் செவேல்னு பீச்சாங்கரையிலே எவம் பின்னாடியோ சுத்துது. நான் பாருடா, ஏழை. எனக்கு விவரம் தெரிஞ்ச நாளாவே நான் ஏழை தான். ஆனா, டாய்... ரெண்டு ரூபாய் பணக்காரிடா நானு இன்னிக்கி.

ஓஹோ... நீயா? புருசம் பின்னாடி கூட்டர் வண்டியில போறியாடி? அடியே, புடிச்சிக்க. நல்லா கெட்டியமா புடிச்சிக்கடீ ஆத்தா. இல்லீனா நீ புடிக்கிறது சரியில்லனு ஆள மாத்திப்புடுவானுவ. எப்படியோ போடி பொண்ணு, போ. போயி ரெஷ்டாரண்டுல அரை இருட்ல அவங் கூட கம்பெனிக்கி இரு.

ஹாய்... நீ யாரு? இங்கினத் தான் இருக்கிறயா? ச்சீய்...கழுதைதானே நீ? ஏய் கழுத, இங்க வா. பொட்டக் கழுத. சொல்லு, எத்தினி பேரு பொதிய சொமந்தனு சொல்லு. சொல்லு அந்தப் பாவமூட்டைங்களோட விபரத்த. பக்கம் பக்கமா எழுதலாம். உம் மேல பூரா பாரத்தையும் ஏத்திட்டு கிராதக பயலுக சொகுசா இருந்த கதைய சொல்லு கழுத. பொட்டக்கழுத. ரணமாப்போன காயத்த கொத்திக் கொத்தி சொகங் கண்ட காக்காய்களைப் பத்தி கதை கதையா சொல்லு கேப்பம். யார் யாருக்காக குட்டிப் போட்ட கழுத? அதையும்

படிப்பகம்

www.padippakam.com



சொல்லு. ஹாங்... எல்லாந் தெரிஞ்ச கதைதான். புதுக் கதையா இன்னா. எத்தனை பொட்டைக் களுதைங்க பாரு. பாரம் செமந்து செமந்து முதுகு பழுத்து, குட்டிப்போட்டு போட்டு வயிறு காய்ஞ்ச களுலதைங்க தானே நாம எல்லாருமே?

ஏ செல்வார் கமீசு காலேஜ் சுந்தரி. எங்க வேணாலும் சுத்து. பஸ்ஸூல போகப் போறியா? அதுக்குதா இப்படி வேர்த்து நிக்கிறியா? போடீம்மா. கண்டக் டரு நாய் கைய புராண்டும். மத்த நாயிங்க ஊறுகா தொட்டுக்கிறா மாதிரி மாருல இடிக்கும். இந்தா பொம்பள சீட்டுல பிசாசு மாதிரி தூங்குறத பாரு. பெரிசா உழைச்சு கொட்டிப்புட்டாரு தொர. எந்திரிடா ஜொால்லுப் பார்ட்டி. வயிசாய் போச்சில்ல. இளிக்கிறியே சோளக்காட்டு பொம்ம கணக்கா. குதர மூஞ்சி. ஒய்யாரக் குருடா. எந்திரிடா பன்னீனு சொல்லு. படிக்கப் போறியா? தோழிக்காரியோட பொறந்த நாளு கொண்டாடவா? எங்க வேணுமோப் போய்க்க. வெளிச்சத்துலயே ஊட்டுக்கு போயிருடீ. இல்லீன்னா ஆயி அப்பன் நினைக்கும் நீ தேவிடியானு.

ச்சு...ச்சு. போச்சு. தாலியந் தவளா நீ! அய்யோ! இம்புட்டு அளகா இருக்கிறியே செல மாதிரி. புருசன்காரன் செத்துப் போயிட்டானா? எப்போ செத் தான்? கருங்காலிப் பயலுவ. எப் படிச் செத்தான்? கலியாணத்து லயே வியாதியா? என்னானு பொய் சொல்லி பண்ணி வச்சா னுங்க கலியாணம்? "உல்லாச மாகவே உலகத்தில் வாழவே... மாப்பிள்ளையாகியே..." பாட்டு பாடினானா? ஏமாத்திபுட்டானு வளா! தாயே, ஏம்மா இம்புட்டு வேதனையோட பாக்குற நீ? தோல்வியத் தாங்க முடியலயா கண்ணு? குழந்தை இருக்குதா? இல்லியா? அய்யோ! நீயே ஒரு குழந்தை மாதிரிதான் இருக்குற. அய்யோ! முடிசவிக்கிப்பய என் னப் பார்வ பாக்குறாம் பாரு உன்ன. பொறுக்கி...பொறுக்கி.

செருப்பாலே அடிப்பேன்டா உன்ன... ச்சீ... எங்கிட்டதான் செருப்புகூட இல்லியே. எதுக்கு செருப்பு? உடம்பே அழுக்கான பிறகு... தெருக்குப்பை என்ன, சதைக்குப்பை என்ன. எல்லாம் ஒன்னுதான். அடப்பொட்டக் குழந்தைகளா. இங்க என்னடி பண்ணிக்கிட்டிருக்கீங்க கொளத் தங்கரையில? பேள வந்தீங்களா? யாரு மூத்தரம் எம்மாந்தூரம் அடிக்குதுனு போட்டியா? ஒய்யா ரமா இருங்கடீ. எத்தினி நாளு? ந்தோ...வெடிக்கிற வரைக்குந்தா. அப்புரமென்ன, எப்படா ரொட் டிக்கட வெப்பானு ஆளாளுக்கு நாய் மாதிரி அலைவானுங்க. கலி யாணத்துலர்ந்து கருமாதி வரைக்கும் பொணமா வாழோ ணும். இப்பவாவது சந்தோசமா இருங்கடி கண்ணுகளா. என் கிட்ட ரெண்டு ரூபா இருக்குது. ஏதுனாச்சும் வாங்கித் தரவா?

ச்சீ... எம் புள்ளக்கி? ம்... புஸ்க்கு புஸ்க்கு. எம் புள்ளக்கி வாங்கித்தரணுமே. போயி உங்கா யிட்ட கேட்டு துன்னு. இது எம் மவனுக்கு. யம்மா...என்ற ராசா. யப்பா... எங்கய்யா போன? எந் தப் பக்கமா போன கண்ணு? ரயி லடியிலயா பிச்சை எடுக்கற? காலு கடுக்க தேட வெக்காதப்பா. கெடச்சிடு சாமி. எந் தங்கமுல்ல. தப்புதான். ஆத்தா இப்புடியெல் லாம் போறது தப்புதான். என் னத்த செய்ய. நாலனா வேணுமே பண்ணு ரொட்டிக்கி. ரூபா வேணுமே டீத்தண்ணிக்கு. வேற வேல எங்க கெடக்கிது பையா சொல்லு.

எந்த மவராசி ஊட்லயாவது சாமான் வெளக்கி யேனமும்

படிப்பகம்

www.padippakam.com



தொடப்பக்கட்டையுமா பிழைக்க லாம்னா, எப்படியோ திருட்டு புத்தி. அதிகமில்ல... ஒரு சோப் புத்துண்டு. ஒன்னுரெண்டு கரண் டிங்க. ஊடு கூட்டறப்போ கெடந்த சில்ற காசு கொஞ்சம். நான் என்ன பெரிசாவா திருடிட் டேன். ஒன்னு ரெண்டு கண் ணுக்கே தெரியாதது. இதுக்குப் போயி கத்துது சீக்காளி பொம் பள. சரி, திருடவே கூடாதுடா இந்த ஊட்லனு ஒரு ஊட்ல வேல பார்த்தனே, அது என்ன கத?

வக்கணையா தானே வேல செஞ்சேன். ஒரு திருட்டு தண்டா உண்டா? அந்த செறுக்கி இருக் காளே மொதலாளியம்மா. அவ மகனாலத்தான் வந்திச்சு வென. ஊடு கூட்றப்போ ஒரு நாளு சடார்னு கட்டிப் பிடிச்சிட்டான் ஜொல்லு கிராக்கி. அந்தப் பொம் பள பாத்துகிடிச்சு. யாரு மேல தப்பு? பய பண்ண தப்புக்கு எனக்கு திருட்டுப்பட்டம். உருப் படுவாளா அவ... அவத் தாலிய றுக்க... அவிஞ்சுப் போயிருவா... தட்டுவாணி. கொல்லேல போறவ.

அப்புற மென்னத்த? எவ ளுமே வேல தரல. எனக்கு வேண்டாம்டி உங்க வேல. வேற எதுக்கு லாய்க்கு நான்? ச்ாணி பொறுக்கியாச்சு.சாராயமும் வித் தாச்சு. உங்க அப்பனாவது நம்ம கூட இருந்தானா. ஓடுகாலிப்பய பேட்ட வஸ்தாதுட்ட என்னை கூட்டி கொடுத்துட்டு,வேறஒருத்தி கூட ஓடப் பாத்த பயதானே. பன்னி கணக்கா எவ பின்னா டியோ பூட்டானே. வேறே என் னத்த சாமீ நானு பண்ணுவேன். குடிச்சாலு வொதச்சாலு நெனச் சப்பவெல்லாம் படுத்தனே... என்னத்த... உன்னையும் விட்டு போட்டு ஓடிட்டான் தேவிடியா மவன். விடியா மூஞ்சிப் பய.

தரித்திரமய்யா... என் வயத்துல பூந்த தரித்திரம் உனக்கு. உங்கொப்பனுக்கு வாக் குப்பட்ட தரித்தரம் எனக்கு. வேற வழி தெரியல சாமி. வா... வந்திரு. என்னப் பெத்த ரா..சா. நீயும் போயிட்டின்னா எங்கே கண்ணு போவா ஒன் ஆத்தா? போன வாரம் பூரா உன்ன தேடி னப்பா...ரயில்லேயே போய் வார யாமே. ராவெல்லாந் தூங்காம பிச்ச எடுக்கறாயாமே. அய்யோ! அய்யோ...அஞ்ச வயிசு பிஞ்சு... இந்தப் பாடு படுதே. டேய், எம்ம வனை பிச்ச எடுக்க உட்டீங்க ளேடா.

இறங்கிருப்பா... ரயிலுபோ தும். ஆத்தாக்காரிக்கிட்ட வந்தி ரும்மா. யோவ் முண்டாசு கட் னவனே. ஊருக்குப் புச்சா நீ? புள்ள பய பத்தரமைய்யா. புடிச் சுகிட்டு போயி கை கால வெட்டி பிச்ச எடுக்க உட்ருவானுவ. உனக்கின்ன மயிராச்சுன்னு போய் வேற ஒருத்தி கூட படுப்ப. தாயி தவிக்கும். சோறு பழைதா னாலும் இறங்காது. தொண்டை குழி அடைக்கும். அடி வயிறு குலுங்கும். அய்யோ... புள்ள போச்சேன்னு கெடந்து குமு றும் பாரு...

இன்னாடி...சொகுசுக்காரி... காருல உட்காந்து என்னப் பாத்து மூஞ்சிய சுழிச்சிகிற. கண் ணாடிய மூடிக்கிற. அம்புட்டு கொளுப்பு இல்ல? வாங்குன நகை நட்டப் பூரா உடம்புல பரப்பி, தோ...பாருங்கடா என் பணத் திமுறுனு உன்ன வேசம் போட்டு தம்பங் கூத்தாடியாட்டமா எக்சி பிஷன் காட்ட, கலியாணங்க ளுக்கு அலுக்காம குலுக்காம கூட்னு போறான் புருசங்கார பய. மிச்ச நேரம் பூரா மிஷினு மாதிரி அவனுக்கு சந்தோஷங் குடுடீ. சின்ன ஊடு, பார், ரெஷ்டரண்டு உட்டு ஊட்டுக்கு வந்தா கவனிக்கணும். என்னாத் தெரியும் உனக்கெல்லாம். ந்தோ பாரு. எருமைங்களோட படுத்து,

படிப்பகம்

www.padippakam.com



காயம்பட்டு, மிதிபட்டு, ரெண்டு ரூபா காசு சம்பாரிச்சிருக்கி றேனே, எங்கஷ்டம் தெரியுமா உனக்கு? நாய் மாதிரி கடிச்சி புட்டு கணக்கு சொல்றவனும், யாழுல் தராட்டி சிகரெட்டுல சுடர போலீசுகளும் தெரியுமாடி உனக்கு?

கலியாண ஊட்டுக்கு குலுக்கி கிட்டு பவுசு காட்டப் போரவ நீ. அதே கலியாண ஊட்டுக்கு நாயிங்க- பன்னிங்ககூட சண்ட போட்டு, எச்சியில பொறுக்கித் திங்க வாரவ நானு. ஏம்மா மூட மாட்ட காரு க்தவ. நல்லா மூடிக்கடி.

அடிங்க... எம்மாடி என்ன இத்தன சனம்? என்னங்கடி எங் கேயிருந்து வாரீங்க எல்லாம்? பையனும் குட்டியுமா தோ... போறா பாரு பாப்பாத்தி. செக்க செவேல்னு தங்கமாட் டமா புள்ள ஜொலிக்கிது. ஓ... ரயில்ல எறங்கி வாரியளா... ஏன் டிம்மா...ராசா ஊட்டு கண்ணுக் குட்டிகளா... எம்புள்ளக்கி காசு போட்டீங்களாடீ? எம்புள்ள எப் புடிடி இருக்கிறான்? டேய் சொட் டத் தலையா, எம் புள்ளக்கி ரெண்டணாவாவது போட்டியா டா? ஏ வெளிநாட்டுகாரங்களே, வெள்ளக்கார தொரமாரே, எல் லாம் சுத்திப்பாக்க வந்தியளா? காசு போட்டீங்களா புள்ளக்கி? எந்த தேசம் நீ? மகராசனா இரு. எங்க தேசத்த பாரு. எம் புள்ள மாதிரி எளச்சு பிசாசு போல ஆயிருச்சு தேசம். எப் புடியோ எம்புள்ளக்கி காசுப் போடுங்க. நான் பொழச்சிப் பேன். சாராய யாவாரமோ சதை யாவாரமோ... எப்படியும் பொழச்சிப்பேன். எம் புள்ளக்கி காசு போடுங்க...

பாளா போச்சியய்யா...என் வயத்த ரொப்பலனாலும் எம் புள்ள நல்லாருக்கட்டும் சாமி... அது போதும். என்னடா இங் கின கூட்டம்? ஒஹோ அனா தப் பொணமா. இருக்கிறதே ரெண்டு ரூபா. அதும் போச் சின்னா என்னத்த. என்னத்த செய்ய. போன்டிதான். இந்தப் பொணம் முழுங்கிப்பட்டனத்துல என்கிட்ட ரெண்டு ரூபா இருக் குது. ரெண்டு முழு ரூபாய்ங்க' நாத்தப் பொளப்புல சம்பாரிச் சது. டேய் ரிக்ஷாக்காரப்பயலே, கேளு. எங்கிட்ட ரெண்டு ரூபா இருக்குது. ஏ காய்யாவாரம், நீ கேளு. எங்கிட்ட ரெண்டு ரூபா இருக்குது.

டேய் காலேஜு பையா.ரெண்டு ரூபா பணக்காரிடா நானு. நீ யாரு? என்ன கூப்பிடறியா? உடம்பு வேணுமா உடம்பு? போடா பொறுக்கி. வரமுடியா துடா. இந்த உடம்பு உன்னிது இல்லை, போடா. தொட்டா? தொட்டாவா? அம்புட்டு கொளுப்பா உனக்கு? தோ... எனக்காகவே கெடக்குது பிஞ்ச செருப்பு. எடுத்து செருப்பா லேயே அடிப்பேன்டா. தொட்டு வியா நீ? நான் பொம்பளடா. மானஸ்தி. ரெண்டு ரூபா தீர்ற வரைக்கும் இந்த உடம்பு என் னிதுடா. ஃ

**இரா. நடராசன்**

படிப்பகம்

www.padippakam.com

# (மதப்)பேய் அரசு செய்தால்

மதவெறியர்கள் ஆட்சியைக் கைப்பற்றினால் இந்திய அரசியல் சட்டம் திருத்தப்படும் என்றும், வர்ணாஸ்ரமம் அதன் முகப்பு வாசகமாய் இருக்கும் என்றும் கூறப்படுகிறது. ('என் மதம்-ஒரு மறுபரிசீலனை' என்னும் கட்டுரையில் இதழாசிரியர் தெரிவித்திருந்த அச்சம்.)

இது தேவையற்ற அச்சமாகவே எனக்குப் படுகிறது.

அவர்கள் அதிகாரத்திற்கு வருவார்கள் என்பது சர்வ நிச்சயமான ஒன்றல்ல. அப்படியே வந்தாலும் வந்ததற்குப் பின்னும் மதவாத அரசியலைத் தொடர்வார்கள் என்று கூறமுடியாது. அவர்கள் சந்தர்ப்ப வாதிகள். அதிகாரத்திற்கு வருவதற்கு மதவெறி துணைபுரிந்தால் அதை இறுகப் பற்றிக் கொள்வார்கள். அதிகாரத்தில் நிலைத்து நிற்க அது தடையாக இருக்குமானால் உடனே உதறிவிடுவார்கள். இதை ஆதாரம் இல்லாமல் நான் சொல்லவில்லை. அவர்களின் முன் நடவடிக்கை இதை நிரூபிக்கிறது.

ஜனதா ஆட்சியில் வாஜ்பாய் வெளிநாட்டு அமைச்சராக இருந்த போது பாகிஸ்தானுக்குச் சென்றார். எதிர்க்கட்சியில் இருந்தபோது அவர் பேசிய முஸ்லீம் எதிர்ப்புப் பேச்சுக்களும் பாகிஸ்தான் எதிர்ப்புப் பேச்சுக்களும் அடங்கிய பத்திரிகை நறுக்குகளைத் தொகுத்து வைத்து அவரிடம் விளக்கம் கேட்க இருந்தார் அப்போதைய பாகிஸ்தான் அதிபர் ஜியா. ஆனால் அவரது அறைக்குள் நுழையும் போதே மன்னிப்புக் கோருவது போல் வாஜ்பாய் சொன்னார்: "எதிர்க்கட்சித் தலைவராக இருந்து நான் பேசிய பேச்சுக்களுக்கும் வெளிநாட்டு அமைச்சராக வந்துள்ள எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை." ஒருவேளை பதவிக்கு வந்தால், பதவியைத் தக்க வைத்துக் கொள்ள அவர்கள் இப்படித்தானே குட்டிக்கரணம் போடுவார்கள்?

நாம் என்ன மன்னராட்சியின் கீழா வாழ்கிறோம்? ஜனநாயக நாட்டில் தேர்தல் என்கிற விஷயம் அரசியல் வாதிகளை எப்போதும் கலக்கிக் கொண்டுதானே இருக்கும்? அவர்களை அதட்டிக் கேட்காமல் எதிர்க்கட்சியினர் வேடிக்கை பார்த்துக் கொண்டா இருப்பார்கள்? அதற்கும் முன்னுதாரணம் இருக்கிறது.

41 ஆண்டுகளுக்கு முன் தமிழக முதல்வராக இருந்த

படிப்பகம்

www.padippakam.com



சி. ராஜகோபாலாச்சாரியார் வர்ணாஸ்ரம முறையின் புதிய பதிப்பாக ‘குலதர்மக் கல்வி’த்திட்டத்தைக் கொண்டு வந்தார். இதை எதிர்த்து திராவிட இயக்கம் போராட்டம் நடத்தியது. ஆளுங்கட்சியாக இருந்த காங்கிரசுக்குள்ளேயே இதற்கு எதிர்ப்பு வலுத்தது. முடிவில் என்ன நடந்தது? குலதர்மக் கல்வித் திட்டம் கைவிடப்பட்டது. கொக்கரித்த சி. ஆர். பதவி இழந்து ஓடினார். இவரைவிடவா வாஜ்பாயும் அத்வானியும் சக்தி படைத்தவர்கள்?

அப்படியே வர்ணாஸ்ரம முறை திரும்பவும் புகுத்தப்பட்டால் அதற்கான முதல் எதிர்ப்பு பிராமணர்களிடமிருந்து தான் வரும். ஏனென்றால் இன்று வேதம் ஓதும் குலத்தொழிலையா அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்? க்ஷத்ரியனும் வைசியனும் செய்ய வேண்டிய தொழில்களையே அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அவற்றால் பயன்பெறும் அவர்கள் பலன்களை இழக்க சம்மதிப்பார்களா?

மேலும் வர்ணாஸ்ரம முறை வகுக்கப்பட்ட காலத்திற்குப் பின் சமூகம் நினைத்துப் பார்க்கமுடியாத மாற்றங்களைக் கண்டுவிட்டது. அணுயுகத்தையும் விண்வெளி யுகத்தையும் கடந்து கம்ப்யூட்டர் யுகத்தில் வந்து நிற்கிறது. ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கென உருவாக்கப்பட்ட வாழ்வு முறை பரிமாணம் மாறிய அதே சமூகத்திற்கு எப்படிப் பொருந்தக் கூடும்? காலக் கடிகாரத்தை யாரும் திருப்பி வைக்க இயலாது.

எந்தவித நடைமுறை ஞானமும் இல்லாது வர்ணாஸ்ரம விதிகளை அரசியல் சட்டத்தில் இணைத்தால் அவை வாழ்வில் வந்து கலக்க இயலா. அவை செத்து ஜீவன் போன எழுத்துக்களாகவே இருக்க முடியும். பிற நாகரிகச் சமூகங்கள் கை கொட்டிச் சிரிப்பதற்கான விஷயமாகவே அது இருக்கும்.

சிறிது காலம் அவர்கள் கொஞ்சம் சலசலப்பையும் பரபரப்பையும் தோற்றுவிக்கலாம். ஜனங்களும் பொழுது போக சில நாட்கள் வேடிக்கை பார்ப்பார்கள். எத்தனை நாட்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியும்? விஷயங்களையும் விவகாரங்களையும் வேண்டி மக்கள் நிற்க மாட்டார்களா?

அப்போது அவர்களின் கோமாளி கூத்துக்கள் காது கிழிக்கும் அதட்டல்களினால் நிறுத்தப்படும்.

அதிகார ஆசனம் பிடிக்க மதவெறி அவர்களுக்கு குறுக்கு வழி காட்டலாம். மதவெறி கதைகளில் வரும் பூதம் மாதிரி. ஏவியவனையே ஒரு நாள் இரையாக்கும். “வாள் ஏந்தியவன் வாளாலேயே அழிவான்” என்பது பைபிள் வாசகம்.

படிப்பகம்

www.padippakam.com



மதவெறி மனிதனைப் பைத்தியமாக்குகிறது. மதவெறி ஒரு கொடிய நோய் என்பது ஞானிகளின் முடிவு. தங்களின் அரசியல் பிரச்சாரத்திற்கு அவர்கள் விவேகானந்தரைப் பயன் படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் அவரின் உபதேசங்களை தம் காலடியில் போட்டுக் கொள்கின்றனர். அவர்களுக்கு அவ ரின் பெயர் மட்டுந்தான் வேண்டும்; தத்துவங்கள் அல்ல. இது பற்றி விவேகானந்தர் என்ன சொன்னார்?

This disease of fanaticism is one of the most dangerous of all diseases, என்ற அவரின் உபதேசம் இவர்களின் நெஞ்சில் எப்போது தைக்கப்போகிறது?

இந்த அயோத்தி ராமாயணக் காலத்து அயோத்தி அல்ல என அகழ்வாராய்ச்சிகள் வெளிப்படுத்துவதாகக் கூறப்படுகி றது. ராமர் கோவில் இங்கே இருந்ததா என்பதும் இதுவரை வரலாற்றுச் சான்றுகளுடன் நிரூபிக்கப்படவில்லை. பாபர் மசூதி இருந்த இடத்தில் ராமர் கோயில் என்றும் இருந்த தில்லை என்பதுதான் ரொமிலா தாப்பார், எஸ். கோபால் போன்ற வரலாற்று அறிஞர்களின் முடிவு எனவும் கூறப்படுகி றது. அப்படியே ராமன் கோயில் இங்கே இருந்ததாக வைத் துக் கொண்டாலும் பாபர் மசூதியை இடித்து அதன் மண் மேட்டில்தான் இந்துக் கோயில் கட்ட வேண்டுமா? ஆளும் வர்க்கத்தின் மனோபாவத்திற்கேற்ப ஒவ்வொரு காலக்கட்டத் திலும் ஏதாவது வரலாற்றுச் சின்னங்கள் எழத்தான் செய்யும். கூடிய மட்டும் அவற்றை அப்படி அப்படியே இருக்க அனுமதிப்பதுதான் நாகரிக சமூகங்கள் பின்பற்றும் மரபா கும். இவற்றை மாற்றுவது என்று ஆரம்பித்தால் அதற்கு முடிவே இருக்க முடியாது. தொழுகை ஸ்தலங்களை இடித்து விடலாம். அவை கல்லாலும், மண்ணாலும் சுண்ணாம்பாலும் ஆனவை. ஆனால் மதம் மாறிய மனிதர்களை என்ன செய் வார்கள்? அவர்கள் ரத்தத்தை நீக்கிவிட்டு புது ரத்தம் செலுத் துவார்களோ? அவர்களின் நடை, உடை, தோற்றம், உணவு முறை பழக்க வழக்கங்கள் இவற்றை எல்லாம் என்ன செய் வார்கள்?

உண்மையான பக்திமானுக்கு பிரார்த்தனை ஸ்தலம் முக் கியமில்லை. அவனது இதயம்தான் மெய்யான கோயில். இதை அவர்களுக்கென்றே விவேகானந்தர் சொல்லிப் போனது மாதிரி இருக்கிறது.

அவர் சொன்னார்:

படிப்பகம்

www.padippakam.com



If you are the knowers of God, you will everywhere find the same worship as in your heart.

இந்த உபதேசத்தை அவர்களால் ஜீரணிக்க இயலாது. ஏனென்றால் அவர்கள் இலக்கு பக்தி அல்ல; மலிவான பதவி அரசியல்.

இன்றைய சராசரி இந்தியனுக்குத் தேவைப்படுவது புதிய கோயில் அல்ல. அது தெருவுக்கு மூன்று இருக்கிறது. தேவைப் படுபவை புதிய தொழில்கள், புதிய கல்விக் கூடங்கள், புதிய விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்கள், புதிய மருத்துவமனைகள், புதிய உற்பத்தி முறைகள். புதிய- புதிய- புதிய ஆரோக்கிய மான பொருளாதார வளர்ச்சி மூலம் வறுமையை ஒழித்து வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி, எல்லோரும் எல்லாமும் பெறுவ தற்கான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதுதான். பண வசதியும் உயர் ஜாதி மனோபாவமும் கொண்ட அவர்கள் தடுக்க முயல் கிறார்கள். வெளிப்படையாக எதிர்ப்பது அவமதிப்பைக் கொண்டுவரும் என்பதால் தந்திரத்தைக் கடைப்பிடிக்கிறார் கள். மதம் என்பது ஒரு தந்திர ஆயுதம். அது மந்திரக் கோலாகவும் செயல் படுகிறது. மக்களின் கவனம் கோயிலுக்கு திருப்பிவிடப்படுகிறது. அப்பாவி மக்கள் தங்களை அரித்துத் தின்னும் அத்தனை பிரச்சனைகளையும் மறக்கிறார்கள். தங் களுக்கான விமோசனம் புதிய கோயிலில் இருப்பதாக நினைத்து மயக்கத்திலும் மாயையிலும் மூழ்கிப் போகிறார்கள்.

காவிய ரீதியாக வெளிப்படும் ராமன் பற்றிய மெய்யான செய்திகள் கூட மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டதாகத் தோன்ற வில்லை.

ராமன் எப்படிப்பட்டவன்?

தவம் புரிந்து மேன்மை காண நினைத்த சம்பூகனைக் கொன்றழித்தது மனித துவேஷம் இல்லையா?

வாலிக்கும் இவனுக்கும் எந்த வழக்கும் இல்லாத போது யுத்த மரபுகளை மீறி மறைந்திருந்து கொன்றானே!

சொந்த வாழ்க்கையில் சகோதரபாசத்தை அனுபவித்தவன் மற்றவர் வாழ்வில் அதற்கு முரணாக நடந்துகொண்டான்.

சுக்ரீவனை ஆதரித்து வாலியை எதிர்த்தான்.

ராவணனை எதிர்க்க விபீஷணனைச் சேர்த்துக் கொண் டான்.

படிப்பகம்

www.padippakam.com



யுத்த களத்தில் நின்ற கும்பகர்ணனை தன் பக்கம் சேர தூது அனுப்பினான்.

அரசியலில் கட்சித் தாவலை ஆரம்பித்து வைத்தவன் இவனே.

மனைவியை நெருப்பில் இறக்கினான்.

இதிலும் இன்றைய கொடிய கணவன்மார்களுக்கெல்லாம் இவனே முன்மாதிரி.

ஆண் ஆதிக்கத்தின் அடையாளம் இவன்.

இவனால் அசிங்கப் படுத்தப்பட்ட, அவமதிக்கப்பட்ட, அழிக்கப்பட்ட பெண்ணினத்தின் பிரதிநிதிகள் கூனி, தாடகை சூர்ப்பணகை, சீதை இல்லையா?

சாதாரண மனித அளவுகோலின்படியே குறையுள்ளவன் ராமன்.

அவதார புருஷனாக இவனை எப்படி ஏற்பது?

இவன் பெயரால் நாடு கொந்தளித்துக் கொண்டிருக்கும் கொடுமையை என்னவென்பது?

மனித வாழ்வை மதங்களின் கைகளில் ஒப்படைத்து பல ஆயிரம் ஆண்டுகள் கழிந்துவிட்டன.

மதங்கள் தோற்றுவித்த நாசங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

மதங்களை ஒதுக்கிக்கொண்ட வாழ்க்கை எப்படி இருக்கும் என சோதித்துப் பார்க்கலாமே.

மகோன்னதமான அரசியல், பொருளாதாரத் தத்துவங்களுடன், மனித நேய அடிப்படையிலான ஆன்மீகத்தையும் உள்ளடக்கி ஒரு கோட்பாடு தோன்ற வேண்டும்.

அது புதிய சமூகத்தை படைக்கும்.
புதிய மனிதன் அங்கிருந்து உருவாவான்.
கனவு காண்கிறேன்.
கனவாகவே இருந்து விடுமோ?
இருக்க வேண்டியதில்லை.
நிறைவேறவும் செய்யலாம்.
இன்றைய நிதர்சனங்கள் எல்லாம்,
ஒரு நாள்,
கனவுகளாக இருந்தவைதான்.

**என். ஆர். தாசன்**

படிப்பகம்

www.padippakam.com

## பகலும் இரவும்

காலமெல் லாம்நான் காத்திருந்தேன்—ஒரு
காற்று வருமென்று பார்த்திருந்தேன்.

தாயின் கருவறை சார்ந்திருந்தேன்—தன்னந்
தனிக்கொடி யாலே தளைத்திருந்தேன்.
தூய பிறையாய்ச் சிறையிருந்தேன்—பத்துத்
திங்களில் விடுதலை யாகிவந்தேன்.

கட்டிலில் மெத்தென்று காத்திருந்தேன்—பசி
கண்டதும் கூவிடக் கற்றிருந்தேன்.
தொட்டிலில் ஆடித் துயின்றிருந்தேன்—தாய்
தூக்கிடு வாள்எனக் காத்திருந்தேன்.

பள்ளியில் கற்றிடக் காத்திருந்தேன்—ஒரு
பட்டத்தைப் பெற்றிடக் காத்திருந்தேன்.
துள்ளி விளையாடக் காத்திருந்தேன்—ஒரு
தோழமை தேடியே காத்திருந்தேன்.

வேலை வருமென்று காத்திருந்தேன்—ஒரு
விடிவு வருமென்று காத்திருந்தேன்.
காலை வருமென்று காத்திருந்தேன்—நல்ல
காலம் வருமென்று காத்திருந்தேன்.

தோழி துணைக்காகக் காத்திருந்தேன்—நல்ல
துணைவி நலம்தேடிக் காத்திருந்தேன்.
கூழைப் பருகப் பசிவளர்த்தேன்—நல்ல
குழந்தை சுகம்பெறக் காத்திருந்தேன்.

மாலை மயங்கிடக் காத்திருந்தேன்—கண்
மங்கி இருண்டிடக் காத்திருந்தேன்.
தோலுஞ் சுருங்கிடக் காத்திருந்தேன்—வாய்ச்
சொல்லும் புலந்திடக் காத்திருந்தேன்.

ஊழிகள் யாவுமே காத்திருந்தேன்—காலன்
உறவு வருமென்று காத்திருந்தேன்.
பாழும் பழிகாரன் வருவதெப்போ—வெற்றுப்
பகலும் இரவும் முடிவதெப்போ?

**தமிழப்பன்**

படிப்பகம்

www.padippakam.com

*சும்மா இருந்து சுகப்படுவது ஞானிகளின் வாழ்க்கையாகலாம் ஆனால் சராசரி மனிதர்களுக்குத் தாக்குவதும் தாங்குவதும்தான் அர்த்தமுள்ள வாழ்க்கை சண்டை இல்லையென்றால் சமாதானம் யாருக்கு வேண்டும்!*

# வலை



சினிமாவுக்காக எதையும் செய்யத் தயங்காத எங்கள் ஊர்க்காரர்களை நினைத்தால் இப்போதும் உடம்பு சிலிர்க்கிறது. இரண்டு டாக்கீஸ்கள் ஒரே சமயத்தில் நடந்து கொண்டிருந்த காலம் அது. நடையாய் நடந்து வந்து சினிமா பார்க்கிற அடுத்த ஊர்க்காரன் எல்லாம் "இந்த ஊரு கெட்ட கேட்டுக்கு ரெண்டா" என்று வயிறு எரிந்தார்கள். சுற்று வட்டாரத்தில் இருக்கும் பத்து பதினைந்து கிராமங்களிலும் இதே பேச்சாய் இருப்பதை நானே காதாரக் கேட்டிருக்கிறேன்.

அப்போது பிரபாத் டாக்கீஸ் நிர்வாகத்தில் பிரச்சாரக்காரனாக வேலை செய்து கொண்டிருந்தேன். எட்டாவதில் மூன்றுமுறை தோற்ற பிறகு பள்ளிக் கூடத்தைத் துறந்து டாக்கீஸ் வேலையில் ஆசையோடு சேர்ந்திருந்தேன். என் அபிமான நடிகரின் படங்களையே வரிசையாய் வெளியிட்டு வசூலை அள்ளிக் கொண்டிருந்தது பிரபாத் டாக்கீஸ். அப்படங்களின் புகழையும் உயிருக்குயிரான நடிகரின் திறமையையும் மைக்கில் பிரசாரம் செய்வதே என் இளமையின் லட்சியமாகவும் பாக்கியமாகவும் கொண்டிருந்தேன். எனக்குத் துணையாக எங்கள் ஊரில் ஒரு பெரிய கூட்டமே இருந்தது. கூட்டமாய் உட்கார்ந்து எங்கள் ஆதர்ச புருஷனைப்பற்றி வாயாரப் பேசுவது இன்பமான அனுபவம். எங்கள் நடை, சிரிப்பு சிகையமைப்பு, உடை எல்லாற்றிலும் எங்கள் நடிகரின் சாயலை படாத பாடு பட்டு கொண்டு வந்தோம். எங்கள் ஒவவொரு அசைவிலும் எங்கள் நடிகரின் ஜீவனைக் கரைத்து வெளிப்படுத்துவதில் இருந்த ஆனந்தத்தை வேறு எதிலும் கண்டதில்லை. இருப்பது ஒரு உயிர், ஒரு வாழ்க்கை. அதில் ஒரே ஒரு கணமாவது எங்கள் நடிகரைப் போல வாழ்ந்துவிட்டு குதூகலத்துடன் சாகக்கூடத் தயாராய் இருந்தோம்.

எங்களுக்கு வயிற்றெரிச்சலைக் கிளப்பவென்றே குப்புசாமி இருந்தான். "எங்க ஆள் கால் தூசு பெறமாட்டான்டா ஒங்க கெழவன்," என்று எங்களுக்கு ஆத்திரத்தை மூட்டிவிட்டுச் சிரிப்பான். அவன் சிரிப்பு எங்கள் ரத்தத்தைச் சூடாக்கும். அவன் இன்னொரு நடிகனை ஆராதிப்பவன். அந்த நடிகரின் படங்களை எங்களுக்குப் போட்டியாய் வெளியிடுவதையே லட்சியமாய்க் கொண்டிருந்த சரவணா டாக்கீஸ் பிரச்சாரக்காரன் அவன்.

"யார் பெரியவர்" என்கிற கேள்வி எங்கள் நெஞ்சை அரித்துக் கொண்டே இருக்கும். குப்புசாமியின் வாதங்களை சாமர்த்தியமாய் முறியடித்துவிடுவேன். அவனையும் அவன் கூட்டத்தை

படிப்பகம்

www.padippakam.com



யும் திக்குமுக்காடச் செய்யும் என நினைத்து நான் முன் வைத்த கேள்விகளை சுலபமாய்ச் சமாளித்து விடுவான் அவன். சண்டை மூண்டு விட்டால் வயிற்றைக் கிழிப்பது போல தலையாலேயே முட்டும் சுபாவம் கொண்டவன் அவன். "அவனும் மாடு. அவன் ஆளும் மாடு," என்று சொல்லிவிட்டு ஓடிவிடுவோம் நாங்கள்.

எனக்கும் அவனுக்குமான தீராத பகையும் கசப்பும் என் தூக்கத்தைக் கெடுத்தன. என் நடிகரின் ஜெயக்கொடியை நாட்டுவதற்கு அவனே பெருந்தடையாக இருப்பதாய் நினைத்தேன். அவனோ அல்லது நானோ இருவரில் ஒருவரே உயிரோடு இருக்க வேணடும் என்று முடிவு கட்டுவேன். தினம், தினம் வாதங்களில் செத்து மடிவதைக் காட்டிலும் ஒரு உயர்ந்த லட்சியத்துக்காக உயிரையே தியாகம் செய்வது சந்தோஷமானது. "என் தலைவனைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடமாட்டேன்," என்று எத்தனையோ படங்களில் எங்கள் நட்சத்திரம் பேசிய வசனம் என் நெஞ்சில் ஊற்று போலப் பெருகி ஓடும்.

வெள்ளிக் கிழமைதான் படம் மாற்றும் நாள். அன்று மதியம் 12 மணி வரைக்கும் என்ன படம் என்று முடிவாக வில்லை. பெட்டிக்காக வெளியூர் போன முதலாளி வரவில்லை. ஒவ்வொரு நிமிஷமும் எங்களுக்கு உடல் சூடு ஏறிக் கொண்டிருந்தது. வண்டியை ஏற்பாடு செய்து கொண்டு பிரசாரத்திற்குச்செல்ல காத்திருந்தேன். சரவணாவில் ஏற்கனவே படத்தை அறிவித்து விட்டிருந்தார்கள். வழக்கம் போல எங்கள் எதிர் நடிகரின் படம். நிமிஷத்துக்கு நிமிஷம் எங்கள் படபடப்பு அதிகமாகியது. சாப்பிடக் கூட போகவில்லை. பரிகாசத்துக்கு உள்ளாகிவிடுவோமோ என்கிற பதட்டம் கூடியது. நல்ல வேளை அப்படி எதுவும் ஆகவில்லை. மூன்று மணி அளவில் டாக்ஸியில்வந்து இறங்கினார் முதலாளி. அவர் முகத்தில் சோர்வையும் மீறி வெற்றிக்கலை. படப் பெட்டியையே கொண்டுவந்து விட்டார். நாங்கள் வராதா வராதா என்று மாசக் கணக்கில் ஏங்கிக் கொண்டிருந்த ப்டம் கடைசியாய் வந்தே விட்டது. எழுந்து ஆடாத குறைதான். அவ்வளவு சந்தோஷம். 'சரவணா' காரனுக்கு சரியான போட்டி.

அவசரமாய் போஸ்டர்களைத் தட்டியில் ஒட்டிக் கொண்டு வண்டியைப் பூட்டினேன். நாலு ஆள்கள் பசை வாளிகளோடும் போஸ்டர் கட்டுகளோடும் நாலு திசைக்கும் ஓடினார்கள். டாக்கீஸிலிருந்தே என் முழக்கத்தை ஆரம்பித்துவிட்டேன். கிராமபோன் இரண்டுவரி பாடும். அடுத்து என் பேச்சு. என் குரலால் நடிகரே பேசினார். குடிசைகளிலிருந்து வெளியே வந்த பெண்கள் ஆச்சரியத்தோடு வேடிக்கை பார்த்தார்கள். 'அச்சு அசல் அவர் மாதிரியே இருக்குதுடி.' பிள்ளைகள் எங்கள் பின்னாலேயே ஓடிவந்தார்கள். என் ஒவ்வொரு வசனத்துக்கும் கை தட்டல். நான் உருகிக் கொண்டிருந்தேன்.

முதல் நாள் இரண்டு காட்சிகளையும் பார்த்தேன். வீட்டுக்குத் திரும்ப மனசே இல்லை. ஒரு வாரம் ஓடியது தெரியவில்லை.

வெற்றிகரமான இரண்டாவது வாரத் தொடக்கம். அன்றைய பிரச்சாரத்தில் புதிய உத்தியைக் கையாண்டேன். என் நடிகரின் பாணியில் பேண்டும்

படிப்பகம்

www.padippakam.com



சட்டையும் அணிந்திருந்தேன். புதுசாக நான் அணிந்திருந்த ஒரு கருப்புக் கண்ணாடி அவரைப் போலவே எனக்கும் கம்பீரத்தைத் தந்தது. சாலைச் சந்திப்புகளில் வண்டியை நிறுத்தி பாடல் முடுக்கிவிட்டேன். வரிகளுக்குத் தகுந்தபடி வாயசைத்து நான் செய்த நடன அசைவுகள் எல்லாரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கிவிட்டது. கவர்ச்சியான விளம்பர முறை ஊர்க்குள் பரபரப்பாகியது.

குப்புசாமி கும்பல் எங்களைத் திகைப்போடு பார்ப்பதை ஓரக்கண்ணால் பார்த்து நக்கலாய்ச் சிரித்துக் கொண்டோம். ஆனால் வாயைத் திறக்கவில்லை. அடுத்த நாள் 'சரவணா' விளம்பர வண்டியில் சிவன் வேஷத்தோடு ஒருவன் இறங்கினான். கையில் சூலத்தோடு நட்ட நடுத்தெருவில் சிவ தாண்டவம் ஆடினான். 'இதெல்லாம் ஒரு ஆட்டமா' என்று அலட்சியமாய் சிரித்தோம் நாங்கள். கும்பல் எங்களை முறைத்துப் பார்த்தது.

முதல் வார வெற்றியைக் கொண்டாடும் வகையில் என்ன செய்யலாம் என்று நானும் வீரப்பனும் ஆலோசித்தோம். சோமுவும் முனியனும் கூட இருந்தார்கள். நோட்டீஸ் ஒட்டலாம் என்றான் சோமு. வெற்றி விழாத்தட்டி எழுதி வைக்கலாம் என்றான் முனியன். அதெல்லாம் நாங்கள் வழக்கம் போல் செய்வதுதான். புதுசாக, ஊரே காணாததாக இருக்க வேண்டும் என்று மூளையைக் கசக்கி, கடைசியில் பாண்டிச்சேரியில் வைக்கிற மாதிரி ஆள் உயர கட்அவுட் வைக்கலாம் என்று முடிவு செய்தோம். ஆனால் புதிதாக ஒரு இடத்தில் சொல்லிச் செய்ய வைக்க அவகாசம் இல்லை. உடனடியாக வேண்டும். என்ன செய்வது என்று குழம்பினோம். ஊரில் 'மன்றம்' நடத்திக்கொண்டிருந்த வீரப்பன் தன் செல்வாக்கால் பாண்டிச்சேரியிலிருந்து அரை நாளுக்குள் கொண்டு வருவதாய்ச் சொன்ன பிறகுதான் மனசே சமாதானமானது.

அடுத்த நாள் காலையிலேயே வீரப்பன் பாண்டிச்சேரிக்குக் கிளம்பிப்போய்விட்டான். நாங்கள் செய்தியை ரகசியமாய் வைத்திருந்தோம். நேரம் மெல்ல மெல்லக் கசிந்து கொண்டிருந்தது. பாண்டிச்சேரி திசையிலிருந்து வரும் ஒவ்வொரு வண்டியையும் பார்த்துப் பார்த்து ஏமாந்தோம். கடைசியில் மதிய நேரம் ஆள்கள் வழிய வழிய வந்து கொண்டிருந்த நடனராணி பஸ்ஸில் வீரப்பன் வெற்றிப் புன்னகையோடு வந்து சேர்ந்தான். இறங்கும் போதே பஸ் உச்சியைக் காட்டிக் கொண்டே இறங்கினான். சோமு தாவி மேலே ஏறினான். கயிறுகளை அவசரமாய் அவிழ்த்து கட்அவுட்டைப் பக்கவாட்டில் இறக்கினான். நாங்கள் கீழே சுற்றி நின்று வாட்டமாய்ப் பிடித்து மெல்ல இறக்கி மரத்தில் சாய்த்து நிறுத்தினோம். எங்கள் நடிகரின் பிரமாண்டமான உருவம், அந்த முகக்கவர்ச்சி, புன்சிரிப்பு, சிவந்த உதடு, கன்னம், அரும்பு மீசை. அப்படியே கட்டிப் பிடித்து முத்தம் தரலாம் போல இருந்தது. எங்கள் கூட்டமே சேர்ந்து சுமந்தது. ஊரில் பிரதான சந்திப்புக்கு அருகில் வந்தோம். பார்வைக்கு எடுப்பாக மரத்திற்கும் கம்பத்திற்குமிடையே முட்டுக்கொடுத்து நிற்க வைத்துக் கட்டினோம். அதற்குள் பெரிய ரோஜா மாலை வந்துவிட்டது. வீரப்பனிடமிருந்து வாங்கி நான் கட்அவுட்டின் கழுத்தில் சூட்டினேன். கை தட்டலில்

படிப்பகம்

www.padippakam.com



ஊரே அதிர்ந்தது.

எங்கள் எதிர் அணிக்காரர்கள் முகம் தொங்க நடப்பதைக் கண்டு வெற்றிப் புன்னகை செய்தோம். குப்புசாமியை நேருக்கு நேர் பார்த்து, என் நடிகரின் பாணியில் இடுப்பில் கைவைத்து, "பார்த்துக் கொள்ளடா அசடா" என்றேன். திருவிழாவுக்கு வந்து போகிறமாதிரி ஆண்களும் பெண்களும் ஒரு அதிசயத்தைப் பார்ப்பது போல பார்த்துவிட்டுப் போனார்கள். காரில் வந்து பார்த்த எங்கள் 'பிரபாத்' முதலாளி இன்னொரு பெரிய ரோஜா மாலையை வாங்கித் தந்துவிட்டுப் போனார்.

'சரவணா' காரர்கள் எவ்வளவோ பாடுபட்டும் கூட ஒரு கட்அவுட்டைக் கொண்டு வர இயலவில்லை. தோற்று விட்டோமோ என்கிற கவலை அவர்களுக்கு உள்ளூற இருந்தது. இரண்டு நாள்களுக்கு ஒருவனும் தெருப் பக்கம் நடமாடவில்லை. மூன்றாம் நாள் போஸ்டரில் இருந்த அவர்கள் நடிகரின் படத்தையே நறுக்கி அட்டையில் ஒட்டி எங்கள் கம்பத்துக்கு எதிர்க்கம்பத்தில் கட்டி மாலை போட்டார்கள். எங்களுக்கு சிரிப்பு தாங்கவில்லை. 'மலை எங்கே மடு எங்கே?' என்று பாட்டு பாடினோம்.

அடுத்த நாள் காலை எங்களுக்கு அதிர்ச்சி தரும் சங்கதி காத்திருந்தது. காலையில் டீ குடிக்க சத்திரம் பக்கம் போய் வந்த சோமுதான் திரும்ப வந்து படபடப்புடன் என்னை எழுப்பி விட்டுச் சொன்னான். நான் வீரப்பனை எழுப்பிக் கொண்டு ஓடினேன். எங்கள் ஆள்கள் பின்னால் ஓடிவந்தார்கள். எங்கள் எல்லா போஸ்டர்களிலும் சாணம் அடிக்கப் பட்டிருந்தது. அநேகமாய் எல்லாத் தெருக்களையும் சுற்றி வந்தோம். எங்கள் நடிகரின முகத்தைச் சிதைத்திருந்தார்கள். எங்கும் சாணம். அட கோழைகளா' என்று பல்லைக் கடித்தபடி கடைத் தெருவுக்கு வந்தோம். கட்அவுட்டிலும் சாணம். ஒரே அதிர்ச்சி. கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்தேன் நான். எதர்பாராத விதமாய் குப்புசாமியின் கூட்டத்தைச் சேர்ந்தவன் எதிரே வந்ததைப் பார்த்து ஓடிப்போய் பிடித்துக் கொண்டேன். திமிறி ஓட முயன்றவனை இடுப்பிலேயே உதைத்து மடக்கினேன். ஒரு படத்தில் எங்கள் நடிகர் இதே விதத்தில்தான் எதிரியை உதைத்து மடக்கி விசாரிக்க ஆரம்பிக்கும் காட்சி மனசில் விரிந்தது.

"சொல்லுடா யாரு செஞ்சது?"

"எனக்குத் தெரியாது."

"சொல்லலே, ஒடம்பு தோல உரிச்சிடுவேன்."

மீண்டும் அடிக்கப் போனேன். வீரப்பன் தடுத்தான். என் பிடியிலிருந்து அவனை விடுவித்தான். "எதுக்குத் தடுக்கற. அவன் சாவணும்," என்றான் ஒருவன். "எங்க ரத்தம் கொதிக்குது," என்றான் இன்னொருவன்.

"அவசரம் வேணாம். கோழை மாதிரி அவனுங்க இருட்டுல செஞ்சி இருக்கானுங்க. நாம தைரியசாலிங்க. பட்டப் பகலிலேயே அந்த வேலையைச் செய்வோம் வாங்க. எவனுக்கு வீரம் இருக்குதோ வந்து தடுக்கட்டும்.',

இதுவும் சரியான திட்டம் என்று தோன்றியது. உடனே வாளிகளில் சாணியை கரைத்துக் கொண்டு கிளம்பினோம். கண்ணுக்கு அகப்பட்ட அவர்கள் போஸ்டர்களில் எல்லாம் சாணத்தால்நிரப்பிக்கொண்டிருந்தோம்.

படிப்பகம்

www.padippakam.com



ஒரு கொசு கூட எங்களைத் தடுக்கவில்லை. 'ராவுகாலத்துல பொறந்ததுங்க. ஒன்னாவது இந்தத் தெருவுல உருப்படியா இருக்குதா பாரு' என்று முணு முணுத்த பெரியவரை முறைத்துப் பார்த்தோம். திரும்பி நழுவி விட்டார் அவர். வாளிகளில் தண்ணீர் எடுத்துச் சென்று எங்கள் நடிகர் படங்களையெல்லாம் கழுவினோம். கட்அவுட்டை கழுவுவ வற்கு ராமு மேலே ஏறினான். நான் தண்ணீரை மொண்டு கீழிருந்தபடி ஊற்றினேன். அவன் கைகளால் தேய்த்துக் கழுவினான். இறங்கும்போது தடுமாறி விட சட்டென கீழே விழுந்து விட்டான். நாங்கள் எதிர்பாராத சம்பவம் அது. தொடையில் அடி. வீங்கத் தொடங்கிவிட்டது. நாங்கள் பயந்தபடி அவனைத் தூக்கிக் கொண்டு அவன் வீட்டுக்கு ஓடினோம். அவன் அப்பா திட்டினார். ஆனால் அதை அவன் லட்சியம் செய்யவில்லை. தலைவனுக்காக நடந்த ஒரு போராட்டத்தில் காயம் என்று சாதாரணமாய்ச் சொன்னான்.

இரண்டு வாரங்களைத் தாண்டி மூன்றாவது வாரத்தில் அடியெடுத்து வைத்தன படங்கள். ஒரு ரசிகனுக்கு இதைவிடவும் சந்தோஷம் அளிக்கும் விஷயம் என்ன இருக்க முடியும். ஆனந்தத்தில் பூரித்துவிட்டோம். இதற்குள் அந்தப் படத்தின் பாடல்களும் வசனங்களும்-குறிப்பாக வில்லனைப் பார்த்து தலைவர் பேசும் வசனம் மனப்பாடமாகிவிட்டன. ஓய்வு நேரத்தில் ஒருவருக்கொருவர் சொல்லிக் காட்டினோம். ஒரு எழுத்து, ஒரு அசைவு கூட மாறாமல் சுய லயிப்பில் நாங்கள் அவரைப் போலவே அபிநயிப்பதை நினைத்து ஒருவருக்கொருவர் பாராட்டிக் கொண்டோம். எங்கள் வயதும் உருவமும் மெல்ல மெல்ல உதிர்ந்துவிட நாங்கள் அவராகவே மாறிக் கொண்டிருந்தோம்.

எங்களுக்கு வருத்தமளிக்கிற விஷயம் ஒன்று உண்டு என்றால் எதிர் அணிக்காரர்களின் படமும் விடாமல் போட்டியாக ஓடிக் கொண்டிருந்ததுதான். 'இன்றே கடைசி' என்று என்றைக்காவது துண்டுத்தாள் ஒட்ட மாட்டார்களா என எதிர்பார்த்தோம். ஏதோ பேச்சுவாக்கில் சோமு "நம்ப படம் ஓடுது. அவங்க படத்தை ஓட்டறாங்க,' என்று சொல்லி விட்டான். பட்டென சிரித்து விட்டோம். அவ்வளவுதான் குப்புசாமிக்கு கண்மண் தெரியாமல் கோபம் வந்துவிட்டது. சண்டைக்கு வந்துவிட்டான்.

"நீ வந்து பாத்தியா. உனக்குத் தெரியுமாடா"

"டிக்கட் கௌண்டர்ல ஈ பறக்குது. டாக்கீஸ்ல மட்டும் எப்படிடா ஹவுஸ் புல்?"

"சும்மா சும்மா பேசி ஆத்திரத்தைக் கிளப்பாதே. கண்ணால பாத்தா பேசணும். இல்ல, மூடிட்டுக் கெடக்கணும்."

"நேத்து ராத்திரி படத்தை பாத்துட்டுத்தான் சொல்றேன்."

"பொய் சொன்ன வாய்க்கு போஜனம் கெடைக்காது."

"பெரிய சாமியார் இவரு. அருள் வாக்கு சொல்றார்."

மீண்டும் சிரிப்பலைகள். எங்கள் நடிகரின் பாணியில் கேசத்தை ஒதுக்கிவிட்டு சிரித்தோம். குப்புசாமிக்கு ஆத்திரம் ஏறிவிட்டது.

"இந்த உலகத்திலியே எங்க ஆள் மாதிரி நடிக்கறத்துக்கு ஆள் கெடயாது, தெரியுமா" என்று கர்வமுடன் சொன்னான்.

"ஆமாம். அவ்வளவு பெரிய

படிப்பகம்

www.padippakam.com



தொப்பை உலகத்திலியே வேற யார்க்கும் கெடயாது.''

மறுபடியும் சிரிப்பு.

"சின்னச் சின்ன பொண்ணுங்களோட ஆடத்தான்டா ஒங்க ஆளு லாயக்கு. சுட்டுப் போட்டாலும் நடிப்பு வராதுடா.''

"ஒங்க ஆளுக்கு சண்டைப் போடத் தெரியுமா? செத்தாலும் வராது.''

"ஒங்க ஆளுக்குத்தான்டா வராது.''

"ஒங்க ஆளுக்குத்தான்டா வராது.''

குப்புசாமி தலையைச் சிலிர்த்துக் கொண்டு சிங்கம் போல ஆட்டினான். முட்டப் போகிறான் என்று நினைத்தேன். அதற்குள் அவனது ஆள்கள் வந்து அவனைப்பிடித்து விட்டார்கள். எங்கள் ஆள்களை நாங்கள் மறித்துக் கொண்டோம்.

நாளுக்கு நாள் வசூலை அள்ளிக் குவித்தபடி படம் ஓடிக் கொண்டிருந்தது. என்றும் இல்லாத அளவுக்கு கூட்டம். எப்படியும் 25 நாள்கள் ஓடும் என்பது எங்கள் கணிப்பு. இதுவரை எங்கள் ஊரின் சரித்திரத்திலேயே இரண்டு படங்கள்தான் 25 நாள் ஓடியிருந்தன. இரண்டும் எங்கள் படங்கள். மூன்றாவதாக சரித்திரம் படைக்கும் தருணத்துக்காக நாங்கள் காத்திருந்தோம். எங்கள் கூட்டத்துக்கு இதே பேச்சாக இருந்தது. குப்புசாமி கும்பலும் உற்சாகமாய் இருந்தார்கள். அவர்கள் படம் 25 நாள் தாண்டி 50 நாள்கள் வரை கூட ஓடும் என்று உறுதியான குரலில் சொன்னான் குப்புசாமி.

"ஒங்க ஆள் படம் 50 நாள் ஓடுச்சின்னா நான் ஒரு பக்கத்து மீசையை எடுத்துக்கறேன்.''

வீரப்பன் எழுந்து நிதானமாய் சொன்னான். எங்கள் கும்பலிலேயே அவனுக்கு மட்டும் தான் மீசை இருந்தது. குப்புசாமியும் அவனது ஆள்களும் அவனைக் குரூரமாய்ப் பார்த்தார்கள்.

"எங்க படம் 25 நாள் கேரண்டி ஓடிட்டா நீ மீசையை எடுத்துக்கறியா.''

அதே நிதானமான குரலில் சொன்னான் வீரப்பன்.

அவர்களுக்கு உடல் பதறியது.

"நீ வந்து செறைக்கறதா இருந்தா எடுத்துக்கறேன்.''

"நான் மொட்டையே அடிச்சிக்கிறேன்டா.''

"நான் ரெடி''

படபடவென்று அவன் ஆள்கள் பதில் சொன்னார்கள். கூடவே கேலிச்சிரிப்பு. அவர்களுக்கு உடனே முகத்தில் அறைவது போல் பதில் சொல்ல வேண்டும் என்று துடித்தோம். நாங்கள் வீரப்பன் முகத்தைப் பார்த்தோம். வீரப்பனுக்கு முகம் சிவந்துவிட்டது.

"வேறு ஏதாச்சிம் பேசனா பல்ல உடைச்சிடுவன். ஜாக்கரதை.''

"ஓஹோ நீ வந்து பல்ல உடைக்கற வரிக்கும் எங்க கை தோட்டத்துல பூ பறிக்குமா?

"பூவாவது பறி. புடலங்காயாவது பறி. எனக்கென்னடா,'' என்று தாவிய வீரப்பன் சொன்னவன் கையைப் பிடித்து முறுக்கினான். அவனைக் காப்பற்ற குப்புசாமி வீரப்பன் மேல் தாவினான்.

சண்டை முற்றிவிட்டது. இரண்டுபேரும் கட்டிப்புரண்டார்கள். "வீரப்பா விடாதே''என்று

படிப்பகம்

www.padippakam.com



பக்கத்தில் நின்றபடி நாங்கள் அவனுக்கு உற்சாகம் மூட்டி னோம். சட்டென ஒரு படத்தின் பெயர்சொல்லி "அதுலே தலைவர் புடிச்சு முறுக்குவாரே அதுமாதிரி முறுக்கு" என்று ஞாபகப் படுத் தினேன். குப்புசாமியின் சகாக் களும் கூவிக் கொண்டிருந் தார்கள்.

உச்ச கட்ட நேரம். சைக்கி ளில் வந்து கொண்டிருந்த துணிக் கடைக்காரர் அவசரமாய் வண் டியை நிறுத்திவிட்டு வந்து இருவ ரையும் பிடித்து விலக்கிவிட்டார். இருவரும் இரண்டு பாம்புகளைப் போல சீறினார்கள்.

"போங்கடா, போங்கடா" என்று தள்ளிவிட்டு கலைந்து போகச் சொன்னார். சட்டென்று தன் நடிகரின் பெயரை உரக்க கூவிய குப்புசாமி வாழ்க என்று கோஷ மிட்டான். அவன் கூட்டமும் அதை எதிரொலித்தது. உடனே எங்கள் நரம்பு முறுக்கேறியது. வீரப்பன் ஓங்கிய குரலில் எங்கள் நடிகரின் பெயரைச் சொன் னான். நாங்கள் உயிரைக் கொடுத்து வாழ்க என்று கூவி னோம். ஜெய கோஷங்களால் எங்கள் தெருவே ஸ்தம்பித்து விட்டது.

நாங்கள் ஆவலோடு எதிர் பார்த்த 25வது நாள் வந்து விட் டது. ஒரு பெரிய வெற்றி விழா ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்தி ருந்தோம். ஊரின் ஒரு எல்லை யிலிருந்து கிளம்பி, எல்லாத் தெருக்களையும் கடந்து டாக்கீஸ் வரை சென்று படம் பார்ப்பது என்று திட்டம். ஒவ்வொரு தெரு வாக முழக்கங்களுடன் சென்று முன்னேறிக் கொண்டிருந்தோம். எங்கள் கைகளில் உயர்ந்த பதா தைகளில் எங்கள் உயிருக்குயி ரான நடிகரின் படங்கள். எங் கள் மார்பில் அவர் படம் பொறித்த பேட்ஜுகள். தெருக் காரர்கள் வாய் பிளந்தபடி எங் களையே வேடிக்கை பார்த்தார் கள். எங்கள் எதிர் அணிக்காரர் களும் ஊர்வலம் நடத்தினார்கள். இரண்டு ஊர்வலங்களும் கடைத் தெருவில் சந்தித்துக்கொண்டன. அந்தக் கூட்டத்தைப் பார்த்ததும் எங்கள் முழக்கங்கள் உயர்ந்தன. வாழ்க கோஷங்கள் எதிர்த் தரப் பில் இருந்தும் அதே விசையோடு முழங்கின. எந்தத் தரப்பில் முத லில் சொல்லப்பட்டது என்று தெரியவில்லை. எதிர் அணி நடிக ரின் பெயரைச் சொல்லி ஒழிக கோஷம் தொடங்கிவிட்டது. முற் றிலும் ஆக்ரோஷமான கோஷங் கள். ஒருவருக்கொருவர் வெளிப் படையாய் வெறியோடு பார்த்துக் கூவினோம். கணத்துக்குக் கணம் குரலில் சூடேறியது. கோபம். ஆத்திரம். வீரப்பன் சட் டென எதிர்ப்பக்கம் பாய்ந்து ஒரு வனைக் கீழே தள்ளினான். குப் புசாமி என்மேல் தாவினான். எல்லாம் குழம்பிவிட்டது. கற்கள் பறந்து தாக்கின. தெருவில் புழுதி பறந்தது. ஒருவரையொருவர் குத் திக் கொண்டோம். யார் தலையோ பிளந்தது. ரத்தம். குழப்பம். போலீஸுக்குச் செய்தி பறந்தது. லத்திக் கம்புகள் விர் ரென்று சுழன்றன. ஒரே அடியில் எலும்புகளை உடைக்கும் மடேர், மடேர் என்ற சத்தம். பதாதை களும் தட்டிகளும் சிதற ஊர்வ லம் கலைந்து சிதறியது. வீரப்ப னும் நானும் குப்புசாமியும் முனி யாண்டியும் மட்டும் அகப்பட்டுக் கொண்டோம். மற்றவர்கள் ஓடி விட்டார்கள்.

ஸ்டேஷனில் சட்டைகளைக் கழற்றி உள்ளாடையுடன் மட்டும்

படிப்பகம்

www.padippakam.com



நிற்க வைத்து விட்டார்கள்.

"யாரக் கேட்டிக்கிட்டு பர்மிஷன் இல்லாம ஊர்வலம் வந்தீங்க."

அந்த ஏப் இன்ஸ்பெக்டர் கேள்விக்கு நான் மௌனமாய் இருந்தேன். சட்டென எதிர்பாராத கணத்தில் கன்னங்களில் மாறி மாறி அறைந்தான் அவன். வயிற்றில் எட்டி ஒரு உதை விட்டான். நான் அழவில்லை. கண் சிவக்க அவனை முறைத்துப் பார்த்தேன். இன்ஸ்பெக்டரின் முகத்தை அலட்சியமாய் பார்க்கும் என் தலைவரின் சித்திரம் என் மனசில் தைரியம் கொடுத்தது.

"என்னடா மொறைக்கற? பெரிய ராஜா தேசிங்குன்னு நெனப்பா."

மீண்டும் கன்னங்களில் மாறி மாறி அறைந்தான். கான்ஸ்டபிள்களும் தம் தம் பங்குக்கு லத்தியால் அடித்தார்கள்.

சாயங்காலம்வரை அங்கேயே நின்றிந்தோம். லத்தி அடி பட்ட இடங்களில் வீங்கி ரத்தம் கசிந்தது. உள் எலும்பு வலித்தது. என்னால் கையைக்கூட தூக்க முடியவில்லை. தோளில் வலி. எங்கள் டாக்கீஸ் முதலாளிகள் எங்களை அழைக்க வரக்கூடும் என்ற நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாய் கரைந்து கொண்டிருந்தது.

இருட்டத் தொடங்கிய நேரம் ஸ்டேஷனுக்கு வெளியே சலசலப்பு கேட்டது. ஊரே திரண்டு வந்திருந்தது. இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டபிள்களும் வெளியே சென்றார்கள்.

ஏறத்தாழ கால்மணி நேரம் பேச்சு வார்த்தை நடந்தது. பிறகு இன்ஸ்பெக்டரும் எங்கள் தெரு மக்களால் 'பெரியப்பா' என்று அழைக்கப்படுபவரும் உள்ளே வந்தார்கள்.

"வளர்ற வயசுல இப்படி சினிமா சினிமானு அலைஞ்சா எதிர்காலம் என்னாவும்ன்னு என்னிக்காவது யோசிச்சிருக்கீங்களாடா."

"ஒலகத்துல யாருடா சினிமா பாக்காம இருக்கா. ஆனா, இப்படி வெறியோட அலைஞ்சா இப்பிடிதான் எல்லாம் முடியும்."

ஏகப்பட்ட உபதேச வார்த்தைகள். கடைசியில் சில தாள்களில் இன்ஸ்பெக்டர் சொன்ன இடங்களில் பெரியப்பாவே கையெழுத்து போட்டுவிட்டு கும்பிட்டார். நாங்கள் எங்களது துணிகளைத் திரும்ப வாங்கி அணிந்து கொண்டோம். பகையை மறந்து நானும் குப்புசாமுயும் ஒருவரையொருவர் நெருக்கமான பார்வையுடன் பார்த்துச் சிரித்துக் கொண்டோம்.

வெளியே எங்களுக்காகத் திரண்டிருந்த ஊரைப் பார்த்ததும் வலி மறந்துவிட்டது. எங்களைப் பார்த்த ஆனந்தத்தில் ஒரு மூலையிலிருந்து எங்கள் அபிமான நட்சத்திரங்களின் பெயர்கள் உற்சாகத்துடன் எழுந்தன. 'வாழ்க' கோஷங்கள் அதிர்ந்தன. ⁂

**பாவண்ணன்**

படிப்பகம்

www.padippakam.com

# பொன்னியும் பொய்யர்களும்

அன்புடையீர்,

வணக்கம். கவிதாசரண் ஆகஸ்ட்டு '93 இதழ் கண்டேன். காவிரியை எழுதாத இதழில்லை. ஆனாலும் தங்கள் கோணம் நேரானது; நியாயமானது.

அரசியல்வாதி பிரச்சினையைத் தேடி அலைந்து கொண்டிருப்பவன். அவன் பிரச்சினை ஆழத்தில் வாக்குகளை எண்ணவே ஆசைப்படுவான். அவனது பார்வை தீர்வைத் தீண்டிக் கூடப் பார்க்காது. சிக்கல் தீர்ந்து விட்டால் அவன் சிக்கிவிடுவான். மீண்டெழுவதற்குப் பிறிதொரு சிக்கலைத் தேட வேண்டி வரும். கையில் வெண்ணெய்யை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவானா அவன்! ஆகவே, இருக்கின்ற சிக்கலை இருத்திக்கொள்கின்றான். காவிரி சிக்கலின் அடிப்படையே இதுதான்.

எந்தக் கட்சியும் சரி, அரசியல்வாதியும் சரி, காவிரி பற்றிய தெளிவான கண்ணோட்டம் யாரிடமும் இல்லை. மழலைகள் தெருவில் அடித்துக் கொண்டு கூடுவது போலவும், ஏதோ ஒரு திருநாள் கொண்டாடுவது போலவுந்தான் நடக்கிறது.

தேர்தல் வந்துவிட்டால் போதுமே. இந்தப் பொய்யர்கள் கூட்டம் அள்ளித் தெளிப்பவற்றுள் இதுவும் ஒன்றாக இருக்கும். காங்கிரஸ் கட்சியும் சரி, திராவிடக் கட்சிகளும் சரி, தமிழகத்தை ஆண்டவைதான். அப்போதெல்லாம் இதற்காக என்ன செய்தன என்றால் ஒன்றுமில்லை. பின் ஏன் தேர்தலுக்கு மட்டும் கூச்சல்? பதவி வேண்டுமே. ஊழல் செய்து பணம் சேர்க்க வேண்டுமே!

காவிரி சிக்கலில் எந்த ஒரு ஆட்சியும் அரசியல்வாதியும் உண்ணாவிரதம், போராட்டம் என்று வீணாக மூக்கை நுழைக்கவேண்டியதில்லை. இது விவசாயிகளின் உயிர்ப் பிரச்சினை. அவர்களுக்கு மட்டுமே இதன் ஆழம் புரியும். அவர்கள் போராட்டம் நடத்த, இவர்கள் ஒதுங்கிக் கொள்ள வேண்டும். இது பற்றி பேசக் கூட இவர்களுக்கு அருகதை இல்லை.

## நேசம் பாசம் வாசகர்கள்

வெங்கட்ராமனுக்கு என்ன தெரியும்? பாவம்... விட்டுவிடுங்கள். ஒரு தமிழன், அதுவும் ஒரு காவிரி டெல்டா தமிழன் உயர் பதவிக்குச் சென்றும் இச்சிக்கலைத் தீர்க்க வக்கில்லை. உண்ணாவிரதத்திற்கு ஒத்து ஊதுவதில் மட்டும் குறைவில்லை. அன்றே வராத தீர்வு — தமிழனொருவன் கேபினெட் அமைச்சராகக்கூட இல்லாத போதா நடக்கப் போகிறது? இன்னும் கொஞ்ச நாள் போனால் காவிரியைக் காஞ்சி மடத்து சொத்து என்று தெரியாமல் கூறிடுவார்.

மகாமகக் குளத்தைப் பற்றி பக்கம் பக்கமாக அறிந்திடுவார். அதற்கு நீர் கொடுக்கும் காவிரியை அறிய முடியுமா அவரால்? உண்ணாவிரதமிருந்த ஜெயலலிதாவுக்கு விசிறி வீசவும் அறிவுரைகள் கூறவும் மட்டுமே இவரது திறமை பயன்படட்டும்.

காவிரிப் பிரச்சினை இவரால்தான் தீர்ந்தது என்ற அவப்பெயர் கூட வேண்டாம். உண்

படிப்பகம்

www.padippakam.com



ணாவிரதமாம். எவ்வளவு பெரிய கேவல நாடகம்! அரசின் தலைவர் அரசு இயந்திரத்தை முடக்கவைத்து தன்னிச்சையாகச்செய்த முட்டாள்தனமான பித்தலாட்டம். தேர்வாணையத்தின் தேர்வு எழுதிவிட்டு பேருந்து இல்லாமல் நடந்து வீடு திரும்பியவர்களில் நானும் ஒருவன். இதற்கு வெற்றி விழாவாம்! கேவலமாக இல்லை!

இதைப் பாராட்டி ஒருவர் கின்னஸ் சாதனை என்கிறார். பிறிதொருவர் காந்தியை மிஞ்சிய சத்தியாகிரகி என்று கூட வருணிக்கத் தொடங்கி விட்டார்.

மணிக்கு 'ஒரு தரம் ஏ. சி. வேன் வாசம். சுற்றிலும் மின் விசிறிகள். இத்துடன் ஏர் கூலர். விரிக்கப்பட்ட மெத்தை. அடுக்கப்பட்ட தலையணைகள். இன்பசாகரன் ஆலோசனைப்படி குளுக்கோஸ் உட்கொள்ளுதல். இவ்வளவையும் செய்து உண்ணாவிரதம் இருக்கலாமென்று கின்னஸ் சாதனை விதிமுறைக் குறிப்பில் இல்லை என்பது அவருக்கு எப்படித் தெரியும்?

டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி என்று ஒரு சிந்தனையாளர் இருக்கின்றார். அவர் நதிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வேண்டி தமது தோழர்களுடன் குமரி முதல் சென்னை வரை நடைப் பயணம் மேற்கொண்டு, தில்லி சென்று மனுவும் அளித்தார். அதற்கான திட்டத்தை விவரித்தார். அப்போது இந்த கமலஹாசன்,ரஜினிகாந்த், ஸ்ரீதேவி, பாலகுமாரன் ஆகியோர் எங்கே போயினர்? திரைத்துறையில் பிஸியாக இருந்துவிட்டனர் போலும்!

வெங்கட்ராமன் கட்டாயம் சென்று பார்க்க வேண்டியவர். அவரை அனுப்பியது காஞ்சி மடமாகக் கூட இருக்கலாம்.

கனவுகளை விற்போரே! உங்களுடன் ஆடிய நடிகை பட்டினி கிடப்பது உங்களை ஓட வைக்கிறது. அடுத்த வேளை வயிற்றுக்கு உணவில்லாததைப் பற்றியும் கவலைப்படாமல் உங்களுடைய படத்தைப் பார்த்துவிட்டு உங்களை வாழ வைக்கிறானே அந்த ஏழை விவசாயியின் துயரத்தை நேரில் சென்று அறிந்ததுண்டா? உங்கள் படத்திற்காக கள்ள மார்க்கெட் சீட்டு வாங்குகிறானே! அவனுக்கான உங்கள் வருமான வரியை ஒழுங்காய் கட்டினால் கூட அரசுக்கும் அவனுக்கும் ஏதோ ஒரு வகையில் பயன்படுமே. அதையாவது செய்தீர்களா? பிறகெப்படி இது தெரியும்?

உங்களுடைய கிளிசரின் கண்ணீர் பணம் கொடுக்கிறது. எங்களின் உப்புக் கண்ணீர் உணவா கொடுக்கிறது?

இதற்கு நிரந்தர தீர்வு கண்டாலென்ன? கங்கை - காவிரி இணைப்பு நடந்தாலென்ன? பிரச்சினை தீர்ந்துவிடுமே. எனவே கூடாது. இது அரசியல்வாதியின் நிலை.

வட மாநிலங்களில் வெள்ளம். தென் மாநிலங்களில் வறட்சி. இதையே காரணம் காட்டி உலக வங்கியிடம் கடன். ஆண்டுதோறும் செய்கின்ற செலவையெல்லாம் சேர்த்து மொத்தமாகச் செலவு செய்து கங்கை - காவிரி இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றினால் என்ன?

படிப்பகம்

www.padippakam.com



நதி நீர் இணைப்பு பற்றிப் பேச மைய அரசுக்கு நேரமிருப்பதாகத் தெரியவில்லை. ஒரு வழியாக சரத்பவாரை விரட்டியாயிற்று. இனி அர்ஜுன் சிங்கை என்ன செய்வது என்ற கவலை நரசிம்மராவுக்கு. இத்துடன் சோனியாவுக்கு கைகட்டி நிற்க வேண்டிய நிலை. இந்த சூழலில் மேத்தாக்களிடம் பணம் வாங்கினோமா இல்லையா என்பது கூட நினைவிருக்க வாய்ப்பில்லை.

காங்கிரஸ் கட்சியில் அகில இந்திய அளவில் ஏதேனும் கோளாறு ஏற்பட்டால் உடன் மூப்பனார் அங்கு பறக்கிறார். சமாதானம் செய்துவிட்டு, அறுவைச் சிகிச்சையை நல்லபடியாய் முடித்த டாக்டரின் வெற்றியோடு திரும்புகிறார். அவருடைய நிலங்களே காவிரியைத்தான் நம்பி இருக்கின்றன என அவருக்குத் தெரியுமோ என்னவோ. காவிரி பிரச்சினை பற்றிய முழு விவரங்களுடன் வெங்கட்ராமனுக்கு அனுப்புகின்ற போது அதன் ஒரு பிரதியை மூப்பனாருக்கும் அனுப்பி வைக்குமாறு தமிழக அரசு அதிகாரிகளை வேண்டுகிறேன். அவர் இந்தியத் தலைவர். தமிழகத் தலைவர் என்று குறுக்கிக் கொள்ள விரும்பமாட்டார். ஒருமைப்பாடே முக்கியம்.

உச்ச நீதிமன்ற ஆணையை புறந்தள்ளி கர்நாடக அரசு செயல் படுகிற போது, அதை கண்டும் காணாதது போல மைய அரசு வேடிக்கை பார்க்கிறது. எல்லாம் நாற்காலிச் சண்டைதாம். இதில் தீவிரம் காட்டினால் நாற்காலி போய்விடும். ஆகவே மௌனம் சாதித்தே விடுவது என்ற தீர்மானம் மத்திய அரசுக்கு.

காவிரி நீரைப் பெறுவது நமது உரிமை. அதை அளிக்க மறுப்பது சட்ட மீறல். இதற்கு காரணமான அரசியல் வாதிகள் குற்றவாளிகள். தேர்தலில் இவர்களின் முகங்கண்டு வீட்டிற்கனுப்பினால் நாடு நலம் பெறும்.

சமூகச் சீரழிவுகள் தலையங்கம் தேவையான ஒன்றுதான். சமூகத்தைச் சீரழிப்பவை அரசியலும் சினிமாவும் மட்டுமல்ல. இன்னொன்றையும் சேர்க்க வேண்டியிருக்கிறது. அதுதான் மதம்.

மதத்தை வைத்துக் கொண்டு நாடாளவும் மதப்பிரிவை உண்டு பண்ணி அதில் குளிர் காயவும் கோயில் சொத்துக்களைக் கொள்ளையடித்து வாழ்கின்ற மத வாதிகள் கூட்டமும் இதில் இணைந்தே சமூகச் சீரழிவை உண்டு பண்ணுகின்றன.

இந்தக் கட்சிக்கு வாக்களியுங்கள் என்று கட்டளையிடும் 'மட'ாதிபதியை நாம் பெற்றிருக்கிறோம்.

அரசியல்வாதிகள்- ஆட்சி செய்பவர் அடிக்கடி மாறிக் கொண்டுள்ளார்கள். திரைப்படம் மூன்று மணி நேர நிழலாக முடிந்து விடுகிறது. மதம், கடவுள் என்ற பெயரை மனிதனது குருதியில் நஞ்சு ஏற்றும் பாதகச் செயலை இந்த மதவாதிகள் செய்து கொண்டுள்ளனர். எனவே இவர்களும் இதற்குக் காரணமாவார்கள்

கவிதைகளில் 'அத்தி வெட்டியானின்' 'தீட்டுக் களி' சிறப்பு மிக்கது எனலாம். ஒடுக்கப்பட்ட மக்களை இரவுக்கு மட்டும் பயன் படுத்தும் இழி நிலையை யதார்த்தமாக விளக்கி விடுகிறார் கவிஞர்.

அன்பன்,

**மு.சிவகுருநாதன்**

அண்ணாபேட்டை

படிப்பகம்

www.padippakam.com

*இருட்டுக்கு வெளிச்சமுண்டு. பார்வையைக் கூர்மைப் படுத்தும் வெளிச்சம். புகையும் முகிலும் அந்த வெளிச்சத்தைத் தின்றுவிட்டால் இருட்டில் குருட்டாட்டம் ஆடினாற் போலத்தான். இது நவீன இலக்கியத்திற்கும் தான். இங்கு இது நிழல்தான் என்பதால் வெளிச்சம் பிடிபடும்.*

---

# நிழல்கள்



குடிபோதை. நிழல்கள் தடுமாறின.

மாதவன் இறந்த செய்தி இப்போதுதான் கேசவனுக்கு கிடைத்தது. போய்ப் பார்க்கத்தான் வேண்டும்.

எதிரில் சென்ற ரவி திரும்பி "உனக்குத் தெரியுமா? மாதவன் நேற்று இறந்துவிட்டான்," என்றான்.

"அப்படியா."

"ஆமாம்."

"சரி."

கடந்த காலத்தில் வாழ்வது தான் எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கிறது!

மாதவன் ஒரு முறை சொன்னான். "ஜே ஜே படித்ததும் நான் தற்கொலை செய்து கொண்டேன்."

"இப்போது?"

"செய்து கொள்ளப் போகிறேன்."

"சந்தோஷம்."

மழைக் காலம் என்பதால் தெருவெங்கும் நீர். கால்களை அளைந்தபடி நடந்தான். அந்தப் புளியமரம் நெருங்கிய நண்பன் கேசவனுக்கு. வீடுகளிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்த மனிதர்களுடன் பேச முயன்றான். யாரும் முன் வரவில்லை.

மாதவன் இறந்தாயிற்று. இப்போது வீட்டிற்குப் போனால் அங்குள்ளவர்கள் தன்னை அடையாளம் கண்டு கொள்வார்களா? தன்னை அறிமுகப் படுத்திக் கொள்வது சங்கடமே. இருந்தாலும் போய்த்தான் ஆகவேண்டும். வந்ததே அதற்குத்தானே.

"உன்னிலிருந்து உன்னை விடுவித்துக் கொள்ள நினைக்கும் போது தற்கொலை சம்பவிக்கிறது."

"என்றாலும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறோம்."

"முயற்சியிலேயே செய்து கொண்ட திருப்தியாக இருக்கலாம்."

"இருக்கலாம்."

பாலகிருஷ்ணனுடன் பஸ்ஸில் போகும் போது, ஜன்னல் வழியாக மரங்கள் ஓடிக் கொண்டிருந்தன. மரத்தின் அடியில் எண்கள். எண்களின் மேல் மரங்கள். மரத்தின் மேல் இலைகள். இலைகளின் கீழ் மரங்கள்.

"போதும் நிறுத்து."

"முடியவில்லையே."

விரிந்திருக்கும் வெளியைப் பார்த்தான். பஸ்ஸிலிருந்து இறங்கிக் கொண்டான்.

மீண்டும் பிரயாணம். இம்முறை சிவராமனுடன். அப்போதுதான் குடிக்கக் கற்றுக் கொண்டான். பயந்து பயந்துதான் முதல் முறை குடித்தான். தொண்டையில் இறங்கியவுடன் மீண்டும் வெளியே

படிப்பகம்

www.padippakam.com



வந்துவிடும் போலிருந்தது. சிவராமன் சட்டென்று சிப்ஸைக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னான். குடிக்கக் குடிக்கக் குடி பழகியது. பழகப் பழகக் குடித்தான்.

“போதும் நிறுத்து.”

“முடியவில்லையே.”

அன்று சிவராமனுடன் தள்ளாடியபடியே வந்தான். நீ சிவராமனில்லை. என் நிழல்.”

“இல்லையில்லை. நான் தான் நீ.”

மாதவனின் நண்பன் எதிரில் வந்து கொண்டிருந்தான். சட்டென்று அவன் பெயர் நினைவில் வரவில்லை. அவனிடம் விசாரிக்கலாம்.

“மாதவன் எப்படி இறந்தான்?”

“யார் நீ?”

“மாதவன் எப்படி இறந்தான்?”

“போதும் நிறுத்து. எனக்குத் தெரியாது.”

கேசவனுக்கு பளாரென்று அறை வாங்கியது போலிருந்தது. நிமிர்ந்து பார்த்தால் அந்த நண்பனைக் காணோம். தன்னுடன் தான் இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்தோமா?

பக்கத்திலேயே அந்தப் பழகிப் போன புளியமரம் இருந்தது. அது எங்கிருந்து இங்கு வந்தது? மரத்தைச் சுற்றிப் பார்த்தான். அதே மரம்தான்.

“இந்த மரம் இதற்கு முன் எங்கிருந்தது!”

கடந்து போனவன் இவனை ஒருவிதமாகப் பார்த்துவிட்டு' “இங்கேதான்,” என்றான்.

மரத்தினடியில் உட்கார்ந்து கொண்டான். ஆடைகளுக்குள் காற்று மெதுவாகப் புகுந்தது. சற்று சாய்ந்து கொண்டான்.

“வா மாதவா, எங்கே இங்கு வந்தாய், ரொம்ப நாட்கள் கழித்து?”

கேசவனும் மாதவனும் ஒருமுறை ஊட்டிக்குச் சென்றிருந்தனர். அப்போது கேசவன் தான் எழுதியதாய்ச் சொல்லிக் கவிதை ஒன்றை வாசித்தான்.

“போதும், நிறுத்து.”

“இதுதான் முதல்முறை.”

“சரி, நிறுத்து.”

நிறுத்துவதற்குத்தான் எவ்வளவு அவசரப் படுகிறார்கள்! அதன் பிறகு அந்த டூர் முடிந்து திரும்பும் வரை இருவரும் பேசிக் கொள்ளவில்லை. இருவரும் தங்கள் கால் கட்டை விரல்களைப் பார்த்தபடி வந்தனர். கேசவனுக்கு மாத்திரம் காலில் தேள் ஊர்ந்தது. உதறினான். அது மாதவனின் காலில் விழுந்தாலும் அவன் அசையவில்லை. ஒரு வேளை மறுபடியும் இறந்து விட்டானோ என்று சிந்தேகித்தான். அப்போது மௌனத்தை உடைத்துக் கொண்டான்.

“நீ இன்னமும் சாகவில்லையே.”

“நான்காவது முறையாக இல்லை.”

அதுதான் கடைசியாக மாதவனுடன் ஒன்றாக வெளியில் சென்றது.

மாதவனின் வீட்டில் நுழைந்தான். அமைப்பே மாறியிருந்தது. மாதவனின் மாமி முகம் அழுததால் சிவந்திருந்தது. அது உண்மையான அழுகைதானா என்று கேட்க வேண்டும் போலிருந்தது.

இவன் நுழைவதைப் பார்த்த அப்பா எழுந்திருந்தார். கேசவன் வெளியில் வந்தான். வீட்டி

படிப்பகம்

www.padippakam.com



லிருந்தவர்களின் சோகத்தைப் பார்க்கத் திருப்தியாக இருந்தது.

"நன்றாக வேண்டும்."

வீட்டின் எதிரில் அந்தப் புளியமரம் இருந்தது.

"இங்கேயும் வந்துவிட்டாயா?"

"நீதான் இங்கு வந்துவிட்டாய்."

வேக வேகமாக நடந்தான்.

"வா வா. உன்னைப் பார்க்கத்தான் போனேன். அதற்குள் உன் உடலை எரித்துவிட்டோம் என்றார்கள்."

"உடலா?"

"அப்படித்தான் சொன்னார்கள்."

"சொன்னால் நம்பிவிட்டாயா?"

"சரி சரி. கையிலென்ன புத்தகம்?"

"நகுலனின் வாக்கு மூலம்."

"கொடுத்து விட்டாயா?"

"இன்னும் இல்லை. நீ?"

"யோசித்துக் கொண்டிருக்கிறேன்."

"ஏற்றுக் கொள்ள வேண்டாமா? நிராகரிக்கப்படும். நீ ஒரு கோழை."

நீ ஒரு கோழை, நீ ஒரு கோழை. சப்தங்கள் நாராசமாய்ப் பரவின. காற்றோடு கலந்து திரும்பின. சோவென பேரிரைச்சல். கேசவன் காதை மூடிக் கொண்டான். நீ ஒரு கோழை. இரைச்சல் நின்றபாடில்லை. ஒருவேளை வெளியிலிருந்து கேட்கவில்லையோ! இனறே கொடுத்திட வேண்டும்.

மதுக்கடையில் நுழைந்தான். இரண்டு கோப்பை விஸ்கி உள்ளே சென்றதும் இரைச்சல் குறைந்தது. நான் ஒரு கோழையில்லை. புளியமரம் வந்து அருகில் உட்கார்ந்து கொண்டது. அதன் கையில் ஒரு கோப்பையைக் கொடுத்தேன். வாங்கி சுவாரஸ்யமாகக் குடித்தது. கேசவன் புளியமரத்திடம் கேட்டான்.

"என்னை உனக்கு எவ்வளவு நாளாகத் தெரியும்?"

"என்னை உனக்கு எவ்வளவு நாளாகத் தெரிரிய்?"

"என் வீட்டிலுள்ளவர்கள் என்னைத் துரத்தினார்களே, அன்றுதான் முதன் முறையாக உன்னிடம் வந்தேன்."

"அப்போது நான் உன்னைக் கவனிக்கவில்லை. ஒரு நண்பன் துரத்தியதாய் வந்து என்னிடம் புலம்பினாய். அப்போதுதான் நண்பனாக்கிக் கொண்டேன்."

"அதன் பிறகு நாம் பிரியவில்லை அல்லவா?"

மரம் பதில் சொல்லாமல் கிளம்பியது. வீட்டுற்கு வரும்படி கேட்டுக் கொண்டான். அதுவும் சரியென்று தலையாட்டியபடி சென்றது.

வெளியில் வந்தான். வெட்டப்பட்ட துண்டு துண்டான கட்டிடங்கள் தூரப் போய்க் கொண்டிருந்தன. இன்னும் அரைமணி நேரம் நடக்க வேண்டும் மயானத்திற்கு. இத்தனை வருடங்களில் தான் நடக்க நேர்ந்த தூரத்தைக் கணக்குப் போட்டான்.

மயானத்தை அடைந்ததும் சுற்றிப் பார்த்தான். வெட்டியானிடம் மாதவன் எரித்த இடத்தைத் தெரிந்து கொண்டான். நெருங்கினான். சாம்பல் - மாதவன் - சாம்பல். சுய இரக்கம் தொண்டையை அடைத்தது. சிறிது நேரம் அழுதான். பிறகு கிளம்பினான். வெட்டியானின் முகத்தைப் பார்த்தான். அவன் முகத்தில் சலனமில்லை.

நிழல்கள் தடுமாற கேசவ மாதவன் எழுந்து அறைக்குச் சென்று படுத்துக்கொண்டான்.

**ஜீவராம் சுந்தர்**

படிப்பகம்

www.padippakam.com

# நெஞ்சு பொறுக்குதிலையே!

## சொல்லச் சொல்லப் பெருகும் சீற்றம்

1993ஆம் ஆண்டு முடிய இன்னும் பத்து வாரங்கள் உள்ளன. இருப்பினும் ஒன்றை நாம் உறுதியாகச் சொல்லலாம். இந்த ஆண்டில் தமிழி னத்துக்குக் கிடைத்த மகத்தான மகுடம் 'இசை ஞானி' இளையராஜா நிகழ்த்தியுள்ள சிகரச் சாத னைதான். இசைத் துறையில், சென்று போன பல காலத்துக்கும்; இனி வரும் பல ஆண்டுகளுக் கும்கூட இதுதான் சிகரமாயிருக்கும் என்று தோன்றுகிறது.

ஆனால், இந்த நிகரற்ற படைப்புச் சாதனை அதன் முழு வீச்சோடும் புரிதலோடும், குறைந்த பட்சம் தமிழ் மண்ணிலாவது உணரப்பட்டுச் சிலிர்க்க வைத்திருக்கிறதா என்றால்,— எங்கோ ஒரு முடக்கு மயிர் வெகு வக்கரிப்பான மனக் கீறலோடு தொண்டை அடைப்பானாய்த் துருத் திக்கொண்டு நிற்கிறது.

இளையராஜாவின் சாதனை பற்றி எல்லாப் பத்திரிகைகளும் சிற்றிதழ்களும் எழுதின. ஒரு சில மிக நன்றாகவே எழுதின. ஆயினும்கூட, எல்லா சொல்லாரமும் 'நாளை மறப்பதற்கான இன்றைய செய்தி' போல, ஓசை எழுப்பாத ஒருகை வீச்சு போல, எதிரொலியில்லாத புதை குரல் போல, காற்றில் கரைந்து போகும் காகிதச் சிதறல்கள் போல, சுவடின்றி... அலையின்றி...

இது ஏன்?

ஆசியா முழுமையுமே பெருமை கொள்வதற் கான இந்தச் சாதனை இந்தியச் சுரணையை இப்போதைக்கு எட்டப் போவதில்லை.

கிரிக்கெட்டில் நம்மவர்கள் எப்போதாவது வென்றுவிட்டால், உடனே குடியரசுத் தலைவரிலி ருந்து அடியாட்கள் வரை வாழ்த்துத் தந்திகள் அடிக்கிறார்களே!

இளைய ராஜாவுக்கு?

வை. கோபால்சாமி என்னும் தென்பாண்டி நாட்டான் மாநிலங்களவையில் அவன் புகழ் பாடி னான். அவனோடு எல்லாரும் சேர்ந்து 'ஆகா!

படிப்பகம்

www.padippakam.com



ஆகா!' என்று பாராட்டிக் குரல் எழுப்பினார்கள். ஆனால், அந்தக் குரல் மக்களவை மண்டபத்தைக்கூட எட்டி எதிரொலிக்கவில்லை.

'புரட்சித் தலைவி' ஜெயலலிதா அரசு அந்தக் கலைஞனின் பெயரை அறிந்ததாகக்கூட இதுவரை காட்டிக்கொள்ளவில்லை.

தமிழ்நாட்டின் நூற்றுக் கணக்கான சங்கீத சபாக்கள் இந்த ராசய்யாவைக் கண்டுகொள்ளவே இல்லை.

பொழுது விடிந்து பொழுது போனால் இளைய ராஜாவின் இசையை பரப்பும் வானொலி- தொலைக்காட்சி நிறுவனங்கள் இதை ஒரு விஷயமாக எடுத்துக்கொள்ளவில்லை!

ஏன் இப்படி?

நினைத்தால் பெரும் திகைப்பேற்படுகிறது.

ஒருவாறு ஏனென்பதும் விளங்குகிறது.

'சமூக நலம் பேணுவதற்கென்றே முழுமையாகத் தங்களைத் தத்தம் செய்து கொண்டவர்கள் பிராமணர்கள்' என்பதாக பிராமணர்களே தங்களுக்கான ஒரு சித்திரத்தை வரைந்து கொண்டிருக்கிறார்கள். (தெய்வங்களை வேதங்களால் குளிப்பாட்டி, மகிழ்வித்து, அருள் பெற்று, மக்களுக்கு வழங்கி, அதற்குக் கைமாறாக, பவதி பிக்ஷாம் தேஹி எனக் கூவி பிச்சை ஏற்றுண்ணும் தர்மம் அது. பிராமண சமூகம் இந்தக் கோட்பாட்டிலிருந்து வெகு தூரம் விலகி வந்துவிட்டாலும்,— கோயில் அர்ச்சகரின் அர்ச்சனைத் தட்டு இன்னமும் பிச்சை பாத்திரமாகத்தான் இருக்கிறது என்பது உறுத்தலான விஷயம்தான்.)

'பிராமணர்கள் சமூக ரட்சகர்கள்' என்னும் அந்தச் சித்திரத்தின் ஒளிவட்டம் போல, மனித உன்னதங்கள் பிறப்பிக்கும் சமயநெறி, வழிபாடு, சங்கீதம், நாட்டியம், இலக்கியம், கலைகள், கனவுகள் என்று, வாழ்க்கையின் மேலான நயங்கள் பற்றிய அனைத்து மதிப்பீடுகளுக்கும் அவர்களே தங்களைப் பேணுநர்களாக உருவகித்துக் கொண்டிருக்கிறார்கள். பிற மக்களும் அதனை அனிச்சையாகவே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஏற்புதான் இங்கே முக்கியம். தமிழர்களைப் பார்ப்பனப் பாங்கன் வந்தடைந்த காலத்திலிருந்து ஏற்பட்ட பழக்கம்.

வேதம் அவர்கள் கையில் தர்ப்பைப் புல்லைக் கொடுத்தது. விவரமான அவர்களோ, இந்தச் சமூகத்தின் விதியை வகுக்கும் எழுதுகோலாக அதனை மாற்றிக்கொண்டுவிட்டார்கள்.

ஆகவே, வாழ்க்கையின் எந்தத் துறையிலும் அவர்கள் அங்கீகாரம் இல்லாது போனால் 'ஆயிரம் மாற்று' வைரமே கூட வெறும் கரித்துண்டாகவே ஒதுக்கப்படும்.

படிப்பகம்

www.padippakam.com



இளையராஜா விஷயத்திலும் இதுதான் நடந்துகொண்டிருப்பதாகப் படுகிறது.

பிராமணர்களும் தங்களுடன் சம்பந்தப்படாத எதையும் அது என்னதான் உன்னதமாயிருந்தாலும், அனிச்சையாகப் பாராட்டி அங்கீகரித்து விடுவதில்லை. அங்கீகரிப்பதைத் தவிர்க்கவே முடியாது என்னும் நிலை வந்தால், வெகு சாமர்த்தியமாக, பாராட்டுவதே குறை சொல்லத்தான் என்பதுபோலவும், மிஞ்சிப் போனால் தங்கள் சம்பந்தம் இந்த உன்னதத்துக்கு ஏதோ ஒரு விதத்தில் உதவியிருக்கிறது என்றும் சித்திரம் தீட்டுவார்கள்.

ஜேசுதாஸ் நன்றாகப் பாடுகிறாரே என்றால், 'செம்பையின் சிஷ்யனாச்சே!' என்பார்கள். (திரு கி.ராஜநாராயணன் உபயம்: ஒரு கூடுதல் கனம்.)

எஸ்.எஸ். சுப்புலட்சுமியின் குரல் தேனாய் இனிக்கிறது என்றால், 'சதாசிவ ஐயரின் பார்யாளாச்சே!' என்பார்கள்.

இளையராஜாவின் ஆரம்ப நாட்களில் நாட்டியத் தாரகை பத்மா சுப்ரமணியம் இல்லத்தில் சிறிது காலம் பராமரிப்பு பெற்றிருக்கக்கூடும். பத்மாவின் அண்ணியார் நல்ல பாடகி; சாகித்ய கர்த்தா. இளையராஜா சினிமாவில் காலூன்றிய போது, அவரது சாகித்யம் ஒன்றை ராஜா பயன்படுத்தியதாக ஒரு சலசலப்பு. அப்போது அந்த இளங்கலைஞன், "ஆமாம். என் சங்கீதம் அவர்கள் போட்ட பிச்சைதான்," என்று, அண்டிப் பிழைக்கிறவனாய் வாக்குமூலம் தந்திருந்தால், இப்போது 'ஓகோ'வென்று பாராட்டப்பட்டிருப்பானோ? ஆனால் அவனோ, "இல்லை, இல்லை, இல்லை," என்று சத்தியம் செய்வதுபோல் மும்முறை சொல்லி மறுத்தான். அன்றவன் சொன்னது சரிதான் என்பது மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது.

ஆனால், அன்றே அவனைப் பண்ணைப்புரத்திலிருந்து வந்த பண்ணைக் கூலியாய்க் கண்ணிறக்கிப் பார்க்க முயன்ற கும்பலைக் கண் சிவக்க விழித்து, "நான் ராஜாடா," என்று சொல்லாமல் சொல்லி, இன்று மெய்ப்பித்துவிட்டானே—

அந்தத் தார்மீகச் சீற்றத்தை அவர்களால் செரித்துக் கொள்ள முடியவில்லை. அன்று முதலே அவன் 'அகம்பாவி, கர்வி, ஆணவக்காரன்' என்றெல்லாம் அடைமொழிகளைச் சம்பாதித்துக்கொண்டான்.

அந்த உச்சபட்ச ஒவ்வாமைதான் அவனுக்கு மாற்றாக புதிய இசையமைப்பாளர்களைக் கொண்டு வந்தே தீர்வதென்னும் பிராமண வைராக்கியம். புதிய இரண்டொருவர் பெயர் சொல்ல வந்திருப்பது நல்ல வரவுதான்.

குறிப்பாக, ரகுமான் என்னும் நாய்க்கர் வீட்டுப் பிள்ளை நன்றாகவே மலர்வது தெரிகிறது.

படிப்பகம்

www.padippakam.com



ஒரு சின்ன நெருடல்: சாக்கடைத்தனமான சினிமா உலகில் இளையராஜா எனும் கலைஞன் தமிழ் மண்ணின் மணத்தைப் பூச்சுகளற்று, அதன் கமகமக்கும் நெடியோடு வெளிக்கொணர்ந்தான். ரகுமான் என்னும் தமிழ் மகன் சிங்கப்பூரில் தன் வேர்களைப் பாய்ச்சிக்கொண்டு முகம் காட்டியதாலோ என்னவோ, வேற்று சுகந்தங்களை இந்த மண்ணின் மணத்தில் போட்டுப் பிசைகிறான். மற்றபடி அவன் வாழ்க!

எனக்குக் கர்நாடக சங்கீதம் பற்றி ஒன்றும் தெரியாது. ஆனால் சுப்புடு அவர்களை நிரம்பப் பிடிக்கும். அவர் இசை விமர்சனங்களைத் தவற விடுவதே இல்லை. அதைப் படித்தே இசை ஞானம் பெற்றிருக்கலாமோ என்னவோ. எனக்கோ அவர் மொழி மேல்தான் மோகம்: என்ன ஒரு துள்ளல், எள்ளல், கிள்ளல், வருடல், சொடுக்கல், வீறல், விளாசல்! இசைக்கான சாதகம் போலவே இவர் விமர்சனம் பண்ணவும் சாதகம் பண்ணியவரோ என்று பிரமிப்பேன். யாரை விமர்சித்தார், எதை விட்டார் என்றெல்லாம் துருவியதில்லை.

அவர் சமீபத்தில் 'இந்தியா டுடே' இலக்கிய ஆண்டு மலரில் 'அந்த நாள் ஞாபகம்' என்றொரு கட்டுரை எழுதியிருந்தார். கட்டுரை பற்றிய திரு கி.ராஜநாராயணனின் விமர்சனத்தைப் படித்த போதுதான் நான் எவ்வளவு தற்குறி எனத் தெரிந்தது.

சுப்புடுவுக்கு அரியக்குடி, மதுரை மணி, ஜி.என்.பி. மாதிரியானவர்கள்தான் பிரபல வித்வான்களாகப் படுகிறார்கள். விளாத்திகுளம் சுவாமிகள், காஞ்சி நயினார் பிள்ளை, திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை, மதுரை சோமு போன்றவர்களை சுப்புடு தெரிந்தே இருட்டடிப்புச் செய்திருப்பது கி.ரா. சொல்லத்தான் புரிகிறது. இவர்தான் சுப்புடு.

இப்படிப்பட்ட சுப்புடுவுக்கு இளையராஜா ஓர் இசைக் கலைஞராகவே படுவதில்லை. இளையராஜாவின் இசையை விமர்சிப்பதற்குப் பதில் அவர் இசையமைத்த பாட்டின் வரிகளும் மிகுந்தொலிக்கும் ஒலிகளுமே அவரை உறுத்துகின்றன. பல சினிமாப் பாட்டுகள் விரசங்கள்தான். அது ஒரு தொற்று நோய்; தோற்ற காலத்திலிருந்தே தொற்றி வரும் நோய். அதில் இளையராஜாவால் கெட்டதென்ன?

மேலும், இசை என்பது மூலத்தில் ஒலி பற்றியதுதானே தவிர மொழி பற்றியதல்ல. சுப்புடு அறியாததா என்ன?

எனக்கு லதா மங்கேஷ்கரைக் கேட்கப் பிடிக்கும். மனம் அவசமுறும் போதெல்லாம் அவரைக் கேட்பதுண்டு. இரவு வேளைகளில், ஓசைகளற்ற சூனியத்தில் அந்தக் குரல் என்னை வருடும்போது கண்கள் நெக்குருகிச் சுரக்கும். அவசம் அதில் கரைய, மீண்டும் நானாகப் பிடிபட்டாற்போலிருக்கும்.

சமீபத்தில் ஒரு நண்பர்– இந்தி மொழியறிந்த நண்பர்

படிப்பகம்

www.padippakam.com



என்னோடு பேசிக்கொண்டிருந்த போது, லதா பாடிய சில பாடல்களின் விரசங்களைப் பற்றிச் சொன்னார். எனக்கந்த மொழி தெரியாததற்காக மகிழ்ந்தேன். என்னை உருக்குவது அந்த விரசம் கலந்த பாட்டா? அல்ல. அந்தக் குரல். இசையாய்ப் பெருகும் அந்த ஓசை. இசைக்கு ஒலிதான் மொழி! இப்படியொரு பாவனை இல்லாமற் போனால், மொழியறியா இளங்கன்னியர்கள் பக்தி என்னும் பெயரில் ஜெயதேவரின் கொக்கோக வரிகளை ஆடவர் மத்தியில் குழைந்து குழைந்து பாடமுடியுமா? வெட்கிச் சிறுத்துப் போகமாட்டார்களா!

உன்னதமான இசை யாவும் ஒலி பற்றியதே. இல்லையென்றால் கண்ணன் குழல் கேட்டு மாடுகள் மயங்குமா!

இளையராஜா இதில் தொடக்கத்திலிருந்தே தெளிவாய் இருக்கிறார். இன்றைய அவர் சாதனையும் ஒலி பற்றிய இசையில்தான். அந்த மகா சமுத்திரத்தில்தான் சாதனை என்பது சாத்தியப்படும். ராஜா வெளியிட்ட இரு ஒலிப்பேழைகளுக்கு "How to Name it", "Nothing but Wind" எனப் பெயரிட்டதும் அதனால் அல்லவா! இளையராஜாவை வெறும் சினிமாக் கலைஞன்தான் என்றும் யாராலும் அலட்சியப்படுத்திட முடியாது. இந்தியச் சினிமாவே இன்று இவர் இசையைத்தான் ஸ்வீகரித்துக் கொண்டுள்ளது. இந்த வகையில் இந்தியத் தேசியத்தை வெகு நன்றாகவே உருவாக்கியிருக்கிறார்.

இதற்கு மேலும் ஓர் உண்மை உண்டு: இளையராஜா இசையமைத்த பல பாடல்களின் பல்லவி அவருடையது என்கிறார்கள். 'நானொரு சிந்து, காவடிச் சிந்து' என்பது இளையராஜாவின் பல்லவிதான் என்று வைரமுத்துவே சொல்கிறார். பல்லவிகள் மீதிப் பாடல்களின் போக்கையே நிர்ணயிக்கும் என்பது தவிர்க்க முடியாத உண்மை. அதனால்தான் சுப்புடு பாடல் முழுவதையும் அவர் பொறுப்பில் ஏற்றிவிடுகிறாரோ என்னவோ. எப்படியாயினும் தமிழ்ச் சினிமாப் பாட்டுகள் தமிழ் மண்ணை நன்றாய்க் குழைத்தெடுத்துச் சந்தனமாய்ப் பூசிக்கொண்டது இவர் காலத்தில்தான். மண் மணம் பற்றி சுப்புடுவுக்குச் சொல்ல ஒன்றுமிருக்காது. அவர் போன்றவர்கள் மண்ணில் வேரோடியவர்கள் என்பதை விட மண்டையில் வேர் தேடுகிறவர்கள் என்கலாம். அதுவும் ஒரு முடிவில்லாத பாவனைதான்; வக்கிர புத்தியின் ஏகாந்தமான பாவனை.

ஆக, சுப்புடு இளையராஜாவைப் பாராட்ட மாட்டார்.

Nothing but Wind என்றந்த இளையராஜாவின் ஒலிப் பேழை. ஒரு சின்னக் கிண்ணம் தரையில் பட்டுத் துடித்துத் துடித்து அடங்குவதைக்கூட வெகு நுட்பமாய் இசைத்திருக்கிறார் அதில். பாலு மகேந்திரா, தான் எடுத்த 'வீடு' என்னும் பாட்டில்லாத படத்தின் பின்னணி இசைக்காக இந்த ஒலிப் பேழையையே பயன்படுத்தியுள்ளார், வெகு சுகமாக.

படிப்பகம்

www.padippakam.com



இந்தப் பேழை வெளிவந்த நேரத்தில் ஒரு பேட்டியில் திரு கே. பாலச்சந்தர் இளையராஜா பற்றி, 'என்னென்னவோ ஓசைகளைச் சேர்க்கிறார். இதுதான் இசை என்கிறார். நாம் ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது' என்னும் தொனியில் சொல்லியிருந்தார். சுப்புடு விஷயத்தில் நான் தற்குறியாய் இருந்தேன் என்று சொல்லிக்கொள்ள எனக்கொன்றும் வெட்கமில்லை. உண்மையும் அதுதானே. ஆனால் அவர்கள் அப்படியெல்லாம் சட்டென்று தங்கள் சுய முகங்களைக் காட்டி விட மாட்டார்கள். இதுவும் அவர்கள் பாவனைகளில் ஒன்று.

'கம்ப்யூட்டர் கண்டுபிடித்ததே இவர் துல்லியத்தைக் கணக்கிடத்தானோ' என்னும்படி அத்தனை நுணுக்கமான மனிதர் திரு சுஜாதா. விரல் நுனியில் விவரங்களை வைத்துக்கொண்டுதான் அவர் எதையும் எழுதுவார், 'சரோஜா தேவி'த்தனமான ஜோக்குகள் என்றாலும்கூட. அப்படிப்பட்டவர் இளையராஜாவின் சாதனை பற்றி 'குமுதம்' இதழில் எழுதியுள்ளார்.

மேற்கத்திய இசையுலகின் நான்கு புகழ் பெற்ற இசைக்குழுக்களில் இரண்டு லண்டனில் உள்ளன ஒன்று லண்டன் ஃபில்ஹார்மனிக் இசைக்குழு. மற்றொன்று இளையராஜா இசையமைத்த, இங்கிலாந்து அரசியாரைக் காப்பாளராகக் கொண்ட 'ராயல் ஃபில்ஹார்மனிக் இசைக்குழு.' இதில் இளையராஜா இசை வாசிக்கவோ நடத்தவோ செல்லவில்லை. இசை அமைக்கவே சென்றார். கலப்படமற்ற தூய மேற்கத்திய இசை அது. பீதோவன், மோஸார்ட், ப்ரம்ஸ் போன்ற உலகப் புகழ் பெற்ற இசை மேதைகள் நிகழ்த்திய சாதனை. இவ் விவரங்களையெல்லாம் அறியாதவரல்ல சுஜாதா. அவர்தான் நடமாடும் கம்ப்யூட்டர் ஆயிற்றே.

அப்படிப்பட்டவர்தான் இளையராஜாவின் ஸிம்பஃனியை வாசிக்கப்போவது லண்டன் ஃபில் ஹார்மனிக் இசைக்குழு என்றும், இதற்கு முன்னரே ரவிசங்கர், எல். சுப்ரமணியம் போன்றோர் வாசித்திருக்கிறார்கள் என்றும், போகிற போக்கில்- ஒன்றும் நுட்பமறியாதவர்போலச் சொல்லியிருக்கிறார் இத்தவறுகளைச் சுட்டிக் காட்டி டி என். கார்த்திக் என்னும் அன்பர் எழுதிய கடிதத்தின் சில பகுதிகளை 2-9-93 குமுதத்தில் வெளியிட்டிருக்கிறார். "இளையராஜாவின் சாதனையைக் குறைத்துக் கூறும் நோக்கம் உங்கள் குறிக்கோள் என்றால் உண்மை அதுவல்ல," என்று சொல்லி, சுஜாதா புரிந்துள்ள தவறுகளைத் தெளிவாக விளக்கி, "இந்தச் சாதனை எந்த இந்தியனும் இதுவரை செய்ததில்லை. இளையராஜாவையும் இசையையும் பற்றி நன்கு தெரிந்த நீங்கள் இந்தத் தவற்றைச் செய்தது எனக்கு வருத்தமளிக்கிறது," என முடிக்கிறார். அதற்கு சுஜாதா என்ன சொல்கிறார் தெரியுமா?

"என் பதில்: Sorry, I stand corrected."

படிப்பகம்

www.padippakam.com



இது உங்களுக்கு விளங்குகிறதல்லவா?

இது ஒரு வகை யுத்தம். தகுதி பற்றி சுந்தர ராமசாமியோடு இவர் நிகழ்த்தும் நிழல் யுத்தம் போன்றதல்ல. இது தந்திர யுத்தம். "தப்பா சொல்லிட்டனா? சாரி. சௌக்கியமா? ஜமாய்ங்கோ," என்பதான 'நகையாடியே தன்னை நிலைப்படுத்திக் கொள்ளும் உந்திச் சுழி யுத்தம்.

இவர் 'இந்தியா டுடே' இலக்கிய ஆண்டு மலரில் 'மஞ்சள் ரத்தம்' என்று ஒரு கதை எழுதியிருக்கிறார். உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? எங்காவது ஒரு புதிய காலனி உருவானால் அங்கே முதலில் கட்டும் வீடு பிராமணர்களுடையதாகத் தான் இருக்கும். குடி பெயர்வதில் எப்போதும் அவர்கள் முன்னோடி. புதிய சிரகத்திற்குக் குடி போவதென்றாலும் அவர்களே முதல் குடிகளாவர். ஆனால், அங்கேயும்கூடத் தங்கள் மதாச்சாரத்தை விடாமல், 'ராமு, மூர்த்தி' என்றே பெயர் வைத்துக்கொண்டு, தங்கள் ரத்தத்தையே மஞ்சளாகப் புனிதப் படுத்திக் கோள்வார்கள். இந்தத் தமிழன்கள் இருக்கிறார்களே நிலத்தை நேசித்துக்கொண்டு இருந்த இடத்திலேயே கிடக்கிறவர்கள். உழைப்பும் அழுக்குமாக, தங்கள் 'சிகப்பு' ரத்தத்திலேயே அறிவைத் தேடுகிறவர்கள். மஞ்சள் ரத்தம் சிகப்பை சகித்துக்கொள்ள முடியுமோ!

சுஜாதாவின் உருவகம் இது. (மேலும் விவரங்களுக்குப் பார்க்க: முன்றில் 17, ரவிக்குமார் ஆய்வுக் கட்டுரை)

'இலக்கியம் படைக்கிறேன் பேர்வழி' என்று சொல்லிக் கொண்டு, என்னென்ன கூத்தெல்லாம் ஒட்டிக் காட்டுகுறார்கள்! கூத்தில் மயங்கிக் கோட்டை விடும் ஏமாளித்தனம் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது.

இளையராஜா பற்றிய தவறான தகவல்களுக்கு ஒற்றை வரியில் பதில் சொல்லிவிட்டு, கார்த்திக்கின் குற்றச்சாட்டைக் கண்டுகொள்ளாமல் விடுகிறாரே, அதுதான் சுஜாதாவின் சொந்த முகம். இவர் ஒன்றும் வார்த்தைக் கஞ்சர் இல்லை. இதே இதழில் மூன்று பக்கங்களில் மெக்ஸிகோ சலவைக்காரி ஜோக்கு பற்றி படு விஸ்தாரமாகத் துவைக்கிறார்.

குமுதம் ஒரு 'நல்ல, குடும்பப் பத்திரிகை. அவிசாரித் தனத்தைக் கூறு கட்டி விற்கும் அழகிய குடும்பப் பத்திரிகை. அவிசாரித்தனம் என்றால் ஆயாக்கிழவி இல்லாமலா. சுஜாதாவுக்கு அந்தப் பாத்திரத்தின் மேல் ஒரு மோகம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் கோடி காட்டி, அரசு பதில்களில் இரு முறை பிரஸ்தாபிக்கப்பட்ட அந்த சலவைக்காரி ஜோக்கை இன்னும் வெளிப்படையாகச் சொல்ல, தமிழ் மக்களுக்கு பக்குவம் வரவில்லையாம். இன்னும் ஐந்து ஆண்டுகளில் அதை உண்டாக்கி, 1998 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 15 குமுதம்

படிப்பகம்

www.padippakam.com



இதழில் வெளியிடுவாராம். இப்போதைக்கு இருக்கட்டுமென்று கணவன் மனைவி ஒரே நேரத்தில் டி.வி. பார்க்கும் கொக் கோக ஜோக். இவரின் மஞ்சள் ரத்தம் அடுத்த ஐந்தாண்டுக ளில் தமிழகத்தின் சிகப்பு ரத்தத்தை என்ன பாடு படுத்துமோ. இடையில் இளைய ராஜாவுக்குத் தன்னாலானதைச் செய்து விட்டார்.

குமுதம் குடும்பப் பத்திரிகை என்பது உண்மை. என் நண்பர்- நல்ல கவிஞர், கலைஞர், நயமான மனிதர்— அவர் தான் சம்பந்தப்பட்ட குமுதம் இதழைக் கொடுத்தார். முதல் பக்கத்தில், சுஜாதா உள்ளே புரிந்துள்ள திருவிளையாடலை வரிபிளந்து போட்டிருந்தார்களாம். அதனால் முதல்–கடைசித் தாள்களைக் கிழித்தெறிந்துவிட்டு, வீட்டுக்குக் கொண்டுபோய், படித்த பின் என்னிடம் கொடுத்தார். தாள்களைக் கிழித்த தற்கான காரணமாய் அவர் சொன்னது: "என் வீட்டிலும் மனைவி மக்கள் இருக்கிறார்கள்." இப்படியாக, தவிர்க்க முடி யாதபடி பிரக்ஞையற்றவன் கழித்த நரகல் போல நடுக்கூடத் தில் மல்லாந்து கிடக்கும் குடும்பப் பத்திரிகை அது.

'இந்தியா டுடே, இதழில் இளைய ராஜாவின் சாதனை பற்றி ஒரு கட்டுரை. கூடவே அவரின் 'எக்சென்ட்ரிக்' குணங் கள் பற்றியும் சொல்கிறது. இசையைப் பொருத்த வரை அவர் ஒரு திசையறிந்த பறவை. வாழ்க்கையைப் பொருத்த வரை எல்லாரையும் போலவே, விருப்பு வெறுப்புகளால் ஆளப்படும் சாதாரண மனிதர். மேலும், இத்தனை உயரத்தை எட்டிய பிறகும் அவரின் வேர்களைத் தேடிக்கொண்டிருக்கும் துப்பில் லாத சமூகப் பார்வையைச் சற்றுக் கூடுதலான உக்கிரத்தோடு எதிர்கொள்ளலாம் அல்லவா? பொதுவில் ஒரு சினிமாக் கலை ஞன் தன் கொடி பறக்கும்போது எப்படி நடந்துகொள்வா னோ, அப்படித்தான் அவர் நடந்துகொள்கிறார்.

"அவர் இசையமைக்கிற படங்களில் தன் உணர்ச்சியற்ற குரலில் பாடவும் செய்கிறார்," என்று அந்தக் கட்டுரையில் ஒரு குற்றச்சாட்டு. இது பற்றி இசைப் பிரியர்கள்தான் பதில் சொல்ல வேண்டும். படம் வெற்றிகரமாக ஓடுவதற்கு இந்தக் குரலில் ஒரு பாட்டாவது பாட வேண்டும் என்று தவம் கிடக் கும் சினிமா உலகத்தை ஒரு சகுனக் கிடங்காக ஒதுக்கிவிட் டால்கூட, உணர்ச்சியற்றதுதானா அந்தக் குரல்? எனக் கென்னவோ சங்கீத சிம்மம் என்று கூறிக்கொள்ளும பல கிழங்களின் பிசிறு தட்டிய குரலை விட, இந்தக் கிராமத்தான் குரல் கேட்கும்படிதான் உள்ளது. "என் பாவக் கணக்குக்குப் பட்டியல் போட்டால் சொல்ல நடுங்குதம்மா..." என்ற அந்தத் தொனியைக் கேட்டபோதுதான் எனக்கே இது பிடிபட்டது. நகரியக் கயமையில் நளினம் தேடாத கிராமத்துக் குரல்.

இளைய ராஜா புதிய மதிப்பீடுகளை உருவாக்குகிறார்.

படிப்பகம்

www.padippakam.com

# அலாவுதீன்களும்
# தொலைந்துபோனபூதங்களும்

துளித்துளியாய்
இருள் சேகரிப்பினும்
விடுபடப் போவது
வெளிச்சமாயிருக்காது.

தெரிந்தும் மறந்த இயக்கம்
உயிர்ப்பென்ற பெயரில்,
ஒன்றுமே நடக்கவில்லை
என்றானபோது
கனவுதான் வசதியென்று
புரிபட்டுப் போகும்.

மூழ்கிய நாட்களின்
நிரந்தரக் கலைப்பில்
விருப்பம் ஒரு பொருட்டல்ல.

கலைத்துக்கொள்ள
உரிமையுள்ளதுதான் ஒரே சலுகை.

விளக்கம் கேட்க
விதியிடம் போகலாம் - அது
காவி போர்த்திவிட
தயாராயிருக்கும்.

இது கருவிற் கிடைத்த விளக்கு
இருப்பிலிருக்கட்டும்,
கொஞ்சம் நம்பிக்கை
பூதத்தின் வரவிற்காய்
விளக்கைத் தேய்ப்பதற்கு.

ஊமா. வாஸுகி

படிப்பகம்

www.padippakam.com

கவிதாசரண்
தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

# நடுக்கம்

இயற்கையின் கோரச் சீற்றம் - மராட்டியத்தில் நேர்ந்துள்ள நில நடுக்கப் பேரழிவுகள்.

பல்லாயிரம் மக்களும் அவர்களின் பல கோடிக் கனவுகளும் 'பொக் கென ஒரு கணத்தில் புதையுண்டு போன சோகம்.

முற்றி விளைந்த கதிர்களை அறுவடை செய்ய ஆளில்லாத அவலம்.

'அறுத்துத்தான் யார் தின்ன!' என்று அரற்றித் துடிக்கும் நொறுங் கிப் போன நெஞ்சங்கள்.

எத்தனை உயிர்கள் கண்ணுக்கும் கணக்குக்கும் வராமல் புதை யுண்டு போயினவோ.

இயற்கையின் கைகளில் நாம் இன்னமும் விட்டில் பூச்சிகள்தாம்; இறகுதிர்த்த விட்டில்கள்.

இது கண்ணீருக்கப்பாற்பட்ட அவலம்.

இருப்பவர்களை வெறும் தழும்புகளாகவே மரத்துப் போக வைத்து விடும் கொடுமை.

மனிதர்களுக்கே கணக்கில்லாத போது அவர்களோடு மடிந்து போன கால்நடைகளுக்கு யார் கவலைப்படுவது!

எல்லாப் பிரளயங்களையும் உள்ளடக்கி மறைத்துக் கொண்டு இயற்கை ஒரு ஜடமாகத் தோன்றியே நம்மை ஏமாற்றி விடுகிறது. இயக்கப் பிரளயம் போல் ஆடும் மனிதனோ வெறும் சடலங்களை எண்ணியே ஜடமாகிப் போகிறான்.

இந்தியாவில் ஊழலானாலும் உற்பாதமானாலும் ஏன் இப்படிப் பிரளயமாய் வந்து தாக்குகின்றனவோ.

இந்த மண்ணின் தொன்மைப் பாரம்பரியங்கள் வெறும் சடலங்க ளாகப் புதைகின்றனவோ.

இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்ட மனிதர்களை மீண்டும் உயிர்ப் பிக்க வேண்டியது நம் எல்லாருடைய கடமையாகும்.

நம் உதவி அவர்களைக் காப்பதற்கும் மேலாக நம்மை நாமே சந்தோஷப் படுத்திக் கொள்ள வெறென்ன வழி?

குறைந்த பட்சம் அவர்களின் துயரங்களை உள் வாங்கிக் கொண்டு, அவர்களோடு ஒன்றாயிருக்கலாமே.

படிப்பகம்

www.padippakam.com

சுவாசம்
முட்டும்
மரண வேளைகளில்,
உனது
எளிமையின்
ஏகாந்தத்தை
சுவாசித்து
உயிர் மீள்கிறேன்

## போய்வரும் வேளை

புல்லின்
செழித்த
புன்னகைப்
பாதையில்
நான்
போய்வரும்
வேளைகளில்,

உனது
நெருஞ்சிமுள்
கோபங்கள்
நிறைய
நிறைய.

அது
அன்பின்
பிள்ளைக் கால்களைக்
கிள்ளிவிட்டு
தொட்டிலையும்
ஆட்டும்
ஏற்பாடா?

## இரவு

இரவுக்கும்
சுவையுண்டு.

பள்ளி வளாகத்தில்
பழுத்த
நாவல் பழத்தைப்
போல.

அதற்கும்
முகமுண்டு
எங்களூரின்
சேரிச் சிறுவன் போல.

குரலுண்டு
கூவும
தூரத்து ரயில் போல.

நித்தமும்
நித்திரை
இல்லை.

ஆயிரம் கண்கள்
விழித்திருக்க,
இந்த பூமி
களவு போகாமல்
காவல்
செய்பவள்
இரவு
என்பதை
மறந்தோம்.

அள்ளிப் பூசிக்கொண்ட
இரவின்
திரையில்
ஆடிக்காட்டும்
உயிர் விளக்குகளின்
நாட்டியம்
மின் மினிக்
காடு!

படிப்பகம்

Kavithaasaran, Sep.-Oct. 1993, Regd.No. TN/MSN/746
CREATIVE LITERARY MONTHLY IN TAMIL, R. Dis. 6479/90
www.padippakam.com

# உமா பரதன் கவிதைகள்

## அழகு

யாரைத் தெரியும்
அந்த ஊரில்!

தனியாய்
நின்றெரியும்
விளக்கில் நனைந்த
பனி இரவில் நீண்ட—
ஆள் இல்லாச் சாலையின்
அழகைத் தெரியும்.

அது
போகுமிடம்
போய்வர வேண்டி
என்னாசை அலையும்.

## அன்பாக...

ஊர்
தெரியவில்லை.

வழியெங்கும்
வேடிக்கை பார்த்துக்கொண்டு
போகப் பிடித்தது.

விழித்துக்கொண்டும்,
நின்றவரை
இடித்துக்கொண்டும்
போனேன்.

போலீஸ்காரரைப்
போல்
நின்றது
வழியில் வாழ்க்கை
முறைப்பாக.

என்
கையைப் பிடித்துக்கொண்டு
நடந்து வா
என்றது கவிதை
அன்பாக.

## மீட்சி

அறைக் கதவு
திறந்திருக்க,
அறையிலிருந்து
பார்த்தேன்.

எதிர்ச் சுவரில்
பந்து வீச்சாளன் போல
ஓடிவந்து
நின்றென்னைப்
பார்த்து,
பின்
ஓடியது
அணில்.

சிரிக்க முடிந்தது.
கவலைகளிலிருந்து மீண்டு
அதன் வாலில்
மயங்கிப் போனேன்.

படிப்பகம்